REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN 92 தினகரன்

2024 ஜூன் 18 செவ்வாய்க்கிழமை

வரு. 92 இல. 144 | Tuesday 18, June, 2024 | 16 பக்கங்கள் | 50/-




## மூதூரில் புனித ஹஜ் பெருநாள் தொழுகை...



மூதூர் பொது விளையாட்டு மைதானத்தில் ஹஜ் பெருநாள் தொழுகை நேற்று காலை 6.30 மணிக்கு நடைபெற்றது. மூதூர் அல்ஹசனாஹ் சமூக அபிவிருத்தி மையத்தினர் ஏற்பாடு செய்த தொழுகையை, ஆர்.இமாம் மௌலவி நிகழ்த்தினார்.

## விவசாயிகளுக்கு நன்றி செலுத்தவே 'உறுமய' வேலைத்திட்டம் முன்னெடுப்பு

### மகாவலி வளவ வலயத்தில் 45,253 பேருக்கு காணி உறுதி வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி ரணில்



காணி உறுதி இல்லாமல் நாட்டு மக்களுக்கு சோறு தந்த விவசாய மக்களுக்கு நன்றி செலுத்தும் விதமாகவே அரசாங்கத்தால் உறுமய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலவச கல்வியினூடாக சீ.டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர அறிவை பகிர்ந்தளித்தார். தற்போதைய அரசாங்கம் அறிவுடன் உரிமையையும் பகிர்ந்தளிப்பதாகவும், ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். உறுமய தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் மகாவலி வளவ வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 45,253 பேரில் 1,524 பேருக்கு அம்பிலிபிட்டி மகாவலி விளையாட்டரங்கில் நேற்று (17) காணி உறுதி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "உறுமய திட்டத்தின் காணிகளை வழங்க 06

## களுபோவிலை போதனா வைத்தியசாலையில் அதிர்ச்சி சம்பவம்

# டாக்டர்களுக்கான உணவகம் PHI குழுவால் சுற்றிவளைப்பு

### மனித பாவனைக்கு உதவாத பல உணவு வகைகள் கண்டுபிடிப்பு



**பழுதடைந்த நாட்பட்ட உணவுகள் குளிரூட்டியிலும், ஈக்கள், எறும்புகள் மொய்த்த நிலையிலும் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டதாக பிரதம PHI அதிகாரி தெரிவித்துள்ளார்.**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

களுபோவிலை போதனா வைத்தியசாலையில் டாக்டர்களுக்கான உணவகத்தில் விற்பனை செய்யப்பட்ட மனித பாவனைக்கு பொருத்தமற்ற ஒரு தொகை உணவுப் பொருட்களை கைப்பற்றியுள்ளதாக, தெஹிவளை பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வசந்த புஷ்பகுமார தெரிவித்தார். நகர ஆணையாளரின் 06



## அநுராதபுரத்திலிருந்து மிஹிந்தலை சந்தி வரை புதிய ரயில் சேவை

### அமைச்சர் பந்துல தலைமையில் நேற்று ஆரம்பித்து வைப்பு



இந்திய கடன் உதவியின் கீழ் அநுராதபுரம் ரயில் நிலையத்திலிருந்து மிஹிந்தலை சந்திவரை நிர்மாணிக்கப்பட்ட புதிய ரயில் பாதையில் ரயில் சேவையானது அட்டமஸ்தானதிபதி சங்கைக்குரிய பல்லேகம ஹேமரதன தேரர், போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன ஆகியோர் தலைமையில் நேற்று (17) ஆரம்பித்து வைக்கப்பட்டது.


முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் காலப்பகுதியில் இதன் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இடையில் கைவிடப்பட்டிருந்த இந்த ரயில் பாதையின் ஒரு பகுதி 650 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரத்தில் இருந்து மிஹிந்தலைக்கு யாத்திரிரையில் ஈடுபடுவோரின் வசதி கருதி இந் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 14.78 கிலோமீற்றர் கொண்ட இந்த பாதையில் இரண்டு பாலங்களும் அடங்குகின்றன. மிஹிந்தலை ரயில் நிலையம், மிஹிந்தலை சந்தி உப ரயில் நிலையம், சமகிபுர மற்றும் அசோகபுர ரயில் நிலையங்கள் இந்த ரயில் பாதையில் அடங்கும்.

மஹவ - ஓமந்தை திட்டத்தின் நான்கு கட்டங்களின் கீழ் இந்திய கடன் திட்டத்தின் கீழ் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள ரயில் பாதையின் தூரம் 1.8 கிலோமீற்றர் ஆகும். அதற்காக செலவிடப்பட்ட தொகை 220 மில்லியன் ரூபாவாகும். அநுராதபுரம் ரயில் நிலையத்தில் ரயில் பாதை திறப்பு விழாவுடன் இணைந்ததாக அநுராதபுரம் உதவி வர்த்தக அத்தியட்சகர் அலுவலகம் திறப்பு விழாவும் 06

## வருடத்தின் முதலாவது காலாண்டில் நாட்டின் பொருளாதாரம் 5.3% வளர்ச்சி

### நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இந்த வருடத்தின் முதல் காலாண்டில் நாட்டின் பொருளாதாரம் 5.3 சதவீத வளர்ச்சியை பதிவு செய்துள்ளதாக, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ள சிறந்த வேலைத்திட்டம் காரணமாக நாட்டில் கைத்தொழில் துறை 11.8 சதவீத வளர்ச்சியை பதிவு செய்துள்ளதாகவும், 06

### ஜனாதிபதி தேர்தலில்

## பொது வேட்பாளர் ஒருவரை அனைவரும் ஆதரிப்பதே வெற்றிக்கு வழிவகுக்கும்

### கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான்



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை தெரிவு செய்து அனைவரும் ஒன்றிணைந்து அவரை ஆதரிப்பதே வெற்றிக்கான வாய்ப்பாக அமையுமென, இ. தொ. கா. தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

மட்டக்களப்பின் மண்முனைப்பற்று, தாழங்குடாவில் புனரமைக்கப்பட்ட வீதியை மக்கள் பாவனைக்கு நேற்று உத்தியோகபூர்வமாக திறந்து வைத்து உரையாற்றிய 06

## தமிழ் பொது வேட்பாளர்; தனியொரு கட்சியால் தீர்மானிக்க முடியாது

### இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்



தமிழ் பொது வேட்பாளர் விடயம் தொடர்பாக தனியொரு கட்சியால் தீர்மானிக்க முடியாதென, இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

ஆரையம்பதி பொதுச்சந்தையில் அமைக்கப்பட்டுள்ள வர்த்தக நிலைய கட்டடத்தொகுதி திறப்பு விழாவின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது, 06

### நபர்கள், சொத்துகள் தொடர்பாக

## விசாரணை செய்யும் அதிகாரிகளின் தொழில் அட்டையை கோர அறிவிப்பு

### பொதுமக்களுக்கு பொலிஸ் தலைமையகம் அறிவிப்பு



சிவில் உடையில் பொலிஸாரென கூறிக்கொண்டு யாராவது நபர்கள் அல்லது சொத்துகள் தொடர்பாக விசாரணை செய்யும் பட்சத்தில் அவர்களின் அடையாளத்தை உறுதி செய்யும் வகையில் அவர்களது தொழில் தொடர்பான அட்டையை கோரும் உரிமை பொதுமக்களுக்கு உள்ளதாக, பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. 06

## தமிழரசுக் கட்சி தொடர்பான வழக்கை முடிவுறுத்த தீர்மானம்

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு



இலங்கைத் தமிழரசுக் கட்சி தொடர்பான வழக்கில் எதிராளிகள் அனைவரது மறுமொழியையும் ஒரு நிலைப்பாடாக பதிவு செய்து வழக்கை முடிவுறுத்த தீர்மானித்துள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம், வவுனியா 06

### உள்ளூர் சந்தையில்

## தேங்காய் எண்ணெய் விலை சடுதியாக அதிகரிப்பு

**இறக்குமதியாளர்கள் தன்னிச்சையாக செயற்படுவதாக குற்றச்சாட்டு**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

**உள்ளூர் சந்தையில் தேங்காய் எண்ணெய்யின் விலை சடுதியாக அதிகரித்துள்ளதாக, தேசிய நுகர்வோர் முன்னணித் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.**

**400 ரூபா முதல் 450 ரூபாவரை விற்பனை** 06

## 'யுக்தி' விசேட நடவடிக்கையால் குற்றச்செயல்கள் 23% ஆக குறைவு

### பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன்



போதைப்பொருள் மற்றும் குற்றச்செயல் நடவடிக்கைகளுக்கு எதிராக பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட 'யுக்திய' விசேட நடவடிக்கையால் குற்றச்செயல்கள் 23 சதவீதமாக குறைந்துள்ளதாக, பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்தார். 06

## கொழும்பு, மாளிகாவத்தையில் நேற்று காலை திடீர் தீ பரவல்

### உயிர் ஆபத்து எதுவும் இல்லை – பொலிஸார் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



**கொழும்பு, மாளிகாவத்தை பிரதேசத்தில் நேற்று முற்பகல் 10.10 மணியளவில் திடீரென தீ பரவல் ஏற்பட்டதாகவும் ஆயினும் இதன்போது** 06

### மசகு எண்ணெய் விலை குறைந்த போதும்

## உடனடியாக எரிபொருள் விலையை குறைப்பது கடினம்

### மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு


MINISTRY OF POWER AND ENERGY

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை குறைந்துள்ள போதிலும், நாட்டில் எரிபொருள் விலையை உடனடியாக குறைப்பது கடினமானதென, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்தது.

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கொள்வனவு நடவடிக்கையின் பிரகாரம் இலங்கையில் எரிபொருள் விலை குறைப்பு 06

### இறக்குமதி செய்யப்பட்ட

## சட்டவிரோத சிகரெட்டுகளுடன் கொழும்பில் மூன்று பேர் கைது



சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சுமார் இரண்டு கோடி ரூபா பெறுமதியான 120,000 சிகரெட்டுகளுடன் மூன்று சந்தேக நபர்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இச்சட்டவிரோத சிகரெட்டுகளுடன் மாளிகாவத்தை மற்றும் கொழும்பு 10 ஐ சேர்ந்த 32 வயது முதல் 45 வயது வரையான இச்சந்தேக நபர்கள் கொழும்பு 10 இல் நேற்று முன்தினம் (16) கைது 06

# உறுமய வேலைத்திட்டத்தில் மன்னாரில் ஐயாயிரம் பேருக்கு காணி உறுதிகள்

**மக்களின் காணி உரிமையை உறுதிப்படுத்தி, சொத்துப் பெறுமதியையும் உயர்த்த முடிந்துள்ளது.**

**மன்னார் மாவட்ட மக்களுக்கு காணி உறுதிகள் வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க**

உறுமய திட்டத்தினால் மக்களின் காணி உரிமையை உறுதிப்படுத்தி, சொத்துப் பெறுமதியையும் உயர்த்த முடிந்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொவிட் தொற்று பொருளாதார நெருக்கடியினால் சரிவடைந்த சொத்துக்களின் பெறுமதி 'உறுமய' திட்டத்தின் ஊடாக வலுவடைந்திருப்பதால், அதனூடாக நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்த முடியும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

'உறுமய' தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், மன்னார் மாவட்ட மக்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வு மன்னார் நகர சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் (16) நடைபெற்ற போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்திற்கு 5000 காணி உறுதிகள் வழங்கப்படவுள்ள நிலையில், அவற்றில் 442 உறுதிகள் ஜனாதிபதியினால் வழங்கப்பட்டன.

இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டதாவது:

"கடந்த முறை வடக்கிற்கு வந்தபோது மன்னாருக்கு வருமாறு பாராளுமன்ற உறுப்பினர்களால் அழைப்பு விடுக்கப்பட்டது. மாத இறுத்திக்குள் வருவதாகச் சொன்னேன். இன்று வந்துவிட்டேன். செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. அபிவிருத்தி தொடர்பில் கூறிய பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வோம்.

இங்கு வவுனியா, மன்னார் மக்கள் வந்துள்ளனர். நீங்கள் இங்கிருந்து செல்லும் போது காணி உரிமையுடன் செல்வீர்கள். வரும்போது உரிமை இருக்கவில்லை. செல்லும் போது உரிமை இருக்கும். இந்தக் காணிகளை இனி உங்கள் விருப்பப்படி பயன்படுத்தலாம். வடக்கில் 90 ஆயிரம் உறுதிகளை வழங்க வேண்டியுள்ளது. அவற்றில் 40 ஆயிரம் உறுதிகள் எந்தப் பிரச்சினைகளும் இல்லாதவையாகும்.

கிராமங்களுக்கே சென்று அதற்குரிய பணிகளைச் செய்யுமாறு ஆளுநர்களுக்கு அறிவுறுத்தியுள்ளேன். 1935 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை பருத்தித்துறையிலிருந்து தேவேந்திரமுனை வரையில் காணி அனுமதிப் பத்திரங்கள் மட்டுமே வழங்கப்பட்டன. அவற்றை எந்த நேரத்திலும் இரத்துச் செய்ய முடியும் என்பதால், காணி உறுதி குறித்து மக்களுக்கு பாதுகாப்பு இருக்கவில்லை. காணியை சுத்தம் செய்து அதற்குள் விளைச்சல் செய்து அபிவிருத்தி செய்த பின்பும் அதற்கான உரிமை மக்களுக்குக் கிடைக்கவில்லை.

சிலர் 85 வருடங்களாக இந்நிலையில் இருந்தனர். 20 இலட்சம் பேர் இப்படியாக உரிமை இல்லாமல் இருக்கிறார்கள். அதனை மாற்றியமைக்க வேண்டுமென நான் தீர்மானித்தேன். கொவிட் பொருளாதார நெருக்கடி காலங்களில் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். ஒட்டுமொத்தமாக சொத்துக்களையும் இழந்தனர். சொத்துப் பெறுமதி வீழ்ச்சி கண்டது. நாம் இப்போது வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு வரும்போது அதன் நன்மைகளை சாதாரண மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க எம்மால் முடிந்த முயற்சிகளை முன்னெடுத்து வருகிறோம்.

சாதாரண மக்கள், பொருளாதார நெருக்கடியால், காணிகள், சொத்துகள், செல்வங்களை இழந்தனர். அதனால் காணி அனுமதிப் பத்திரம் கொண்டவர்களுக்கு காணி உறுதிகளை வழங்கத் தீர்மானித்தேன். இந்த வேலைத் திட்டத்திற்கு முன்பாக கொவிட் பொருளாதார நெருக்கடி காரணமாக இழக்கப்பட்டட சொத்துப் பெறுமதி உறுமய திட்டத்தினால் மீண்டும் வலுவடையும்.

ஆசியாவில் எந்தவொரு நாடும் காணி உறுதிகளை மக்களுக்கு வழங்கவில்லை. அதனால் நாம் பெரும் புரட்சி செய்திருக்கிறோம். மேல்மாகாணத்தில் அடுக்குமாடிக் குடியிருப்புக்களில் வசிக்கும் 2 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு வீட்டு உரிமைகளை வழங்கியுள்ளோம். சாதாரண மக்கள் அனுபவித்த கஷ்டங்களுக்கு நியாயம் செய்திருக்கிறோம். காணி உறுதிகளின் பெறுமதிகளை வடக்கு மக்களே அதிகமாக அறிவர். யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் காணிகள் புலிகளால் அபகரிக்கப்பட்டன. இராணுவ முகாம்களுக்காக கையகப்படுத்தப்பட்டன.

தற்போது மக்களுக்கு காணிகளுக்கான நிரந்த உரிமை கிடைப்பதால் மக்கள் மகிழ்ச்சியாக வாழக் கூடிய சூழல் உருவாகும். உங்களுக்கு கிடைத்த காணிகளை விற்றுவிடாமல். அபிவிருத்தி செய்து இதிலிருந்து நல்ல பயன்களைப் பெறுமாறு கூறி வாழ்த்துகிறேன்."

இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

**கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான்** உரையாற்றுகையில், "மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளில் ஒன்றாகக் கருதப்படும் காணிஉறுதிப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்க வருகை தந்திருக்கும் ஜனாதிபதிக்கு நன்றி. நிரந்த காணி உறுதிகள் என்பது மக்களுக்கு கனவாகவே இருந்து வந்தது. அதனால் நாட்டில் பல பிரச்சினைகள் ஏற்பட்டன. அதற்கான தீர்வுகளை வழங்க ஜனாதிபதி முயற்சிகளை முன்னெடுத்துள்ளார்.

ஜனாதிபதி அனைத்துத் திட்டங்களையும் தூரநோக்குடன் செய்கிறார். நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க கூடியவராகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டுமே உள்ளார். வனக்காணிகளாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட காணிகளும் மீட்டெடுக்கப்பட்டு, ஜனாதிபதியால் மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அதனால் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

ஜனாதிபதி அரசியல் நோக்கங்களை விட்டுவிட்டு நாட்டு மக்களின் நலனுக்கான செயற்படுகிறார். எனவே ஜனாதிபதிக்கு உரிய விதத்தில் நன்றிக் கடனை செலுத்த வேண்டியது அவசியமாகும். மீண்டும் அவருக்கு அதிகாரத்தை பெற்றுக்கொடுக்க வேண்டியது அவசியமாகும்" என்றார்.

**பாராளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன்** உரையாற்றுகையில் "நாடு இருள் யுகத்திற்கு சென்று கொண்டிருந்த போது நாட்டை மீட்டு தமிழ் மக்களின் காணி மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி தீர்வு தரக்கூடிய ஜனாதிபதி ஒருவர் கிடைத்திருக்கிறார்.

இவ்வாறு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க முன்வந்திருக்கும் ஜனாதிபதிக்கு மன்னார் மக்கள் சார்பில் நன்றி தெரிவிக்கிறேன். ஜனாதிபதியின் திட்டங்களை செயற்படுத்த அரசாங்க அதிகாரிகள் உள்ளிட்ட சகல தரப்பினரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டியது அவசியம். வன ஜீவராசிகள் திணைக்களத்தின் கையகப்படுத்தல் தொடர்பில் எவரும் தலையிடாத பிரச்சினைகளில் தலையிட்டு ஜனாதிபதி முழுமையான தீர்வுகளைப் பெற்றுத்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்" என்று தெரிவித்தார்.

**பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்** உரையாற்றுகையில், "மன்னார் மாவட்ட வைத்தியசாலை மிக மோசமாக உள்ளது. எந்தவொரு வளர்ச்சியும் இல்லாமல் இருக்கிறது. அதேபோல் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையினையும் அபிவிருத்தி செய்வதற்கான வசதிகளை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.


மன்னார் மாவட்டத்தில் பல காணிகள் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் அழுத்தங்களை எதிர்கொள்கின்றன. இங்கு வந்திருக்கின்ற ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிப்பதோடு, இப்பகுதி மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம். மன்னார் மாவட்டத்திற்கு ஒரு கலாசார மண்டபத்தை அமைத்துத் தருமாறும் கேட்டுக் கொள்கிறோம்" என்று தெரிவித்தார்.

**வடக்கு மாகாண ஆளுநர் பீ.எஸ்.எம். சார்ள்ஸ்** உரையாற்றுகையில், "கடந்த காலங்களில் மன்னார் மாவட்டத்தில் போதிய அபிவிருத்தி ஏற்படுத்தப்படவில்லை என மக்கள் அரசியல் பிரதிநிதிகளை சாடினர். A9 வீதியை அண்மித்திருக்கும் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு போதிய அபிவிருத்தி கிட்டவில்லை. அது குறித்து ஆராய்வதற்காக இங்கு வருகை தந்த ஜனாதிபதிக்கு நன்றி. அதேபோல் வடக்கு மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய தொடர்ச்சியாக ஜனாதிபதி இங்கு வருகின்றமை வடக்கு மக்களுக்கும், அரசாங்க அதிகாரிகளுக்கும் வலுவாக அமைந்திருக்கிறது.

மக்களுக்கு சேவையாற்றுவதே அரச ஊழியர்களின் நோக்கமாகும். அதற்கு அணுகுமுறை அடிப்படையிலான மாற்றம் தேவைப்படுகிறது. அபிவிருத்தியின் பலன்களை இப்பகுதி மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்" என்று குறிப்பிட்டார்.

மன்னார், வவவுனியா மாவட்டத்தில் வருகை தந்த மக்கள், மன்னார் மாவட்ட அரசாங்க பிரதிநிதிகள், அரசாங்க அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)












# எந்தவொரு சுற்றுச்சூழல் சட்டத்தையும் தலைகீழாக மாற்ற வேண்டாமென ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்

**மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர**

சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக இயற்றப்பட்ட எந்தவொரு சட்டத்தையும் எக்காரணம் கொண்டும் மாற்றியமைக்க வேண்டாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளதாக மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கம்புர தெரிவித்தார்.

தற்போதைய சுற்றாடல் சட்டம் புதுப்பிக்கப்பட்டு காலநிலை மாற்ற சட்டத்துடன் புதிய சட்டமூலமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

'இரண்டு வருட முன்னேற்றம் மற்றும் எதிர்காலம்' என்ற தலைப்பில் நேற்றுமுன்தினம் (16) ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கம்புர இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"சுற்றாடல் அமைச்சின் இரண்டு வருட முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு குறித்து கருத்துத் தெரிவிக்கும் போது எமது அமைச்சின் செயற்பாடுகள் ஏனைய அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் போன்று ஒரேயடியாக வெளித்தெரிவதில்லை. ஆனால், ஒரு அமைச்சு என்ற வகையில் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க பல பணிகளைச் செய்துள்ளோம். மேலும் பல முக்கிய பணிகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட உள்ளன.

அண்மையில் நடைபெற்ற சுற்றுச்சூழல் தினத்துடன் இணைந்து, நாடளாவிய சுற்றுச்சூழல் வாரத்தை அறிவித்தோம். அதைக் குறிக்கும் வகையில், நாடு முழுவதும் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மரம் நடும் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

தற்போதைய 29% காடுகளின் அளவை 2030இற்குள் 32% ஆக உயர்த்த எதிர்பார்க்கிறோம். இதற்காக குறிப்பாக காடுகளிலுள்ள வெற்றிடப் பகுதிகளில் மரம் நடுவதற்கு புதிய தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், 'மரத்துக்கு ஒரு செடி' திட்டத்தின் கீழ் அகற்றப்படும் ஒவ்வொரு மரத்திற்கும் பதிலாக மரம் நடப்பட்டுள்ளது.

அத்துடன், சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிக கவனத்துடன் செயற்பட்டு வருகின்றார். எனவே, சுற்றுச்சூழலை பாதுகாக்க இயற்றப்படும் எந்த சட்டத்தையும் எக்காரணம் கொண்டும் தலைகீழாக மாற்ற வேண்டாம் என அறிவுறுத்தியுள்ளார்.

தற்போதைய சுற்றுச் சூழல் சட்டம் புதுப்பிக்கப்பட்டு, காலநிலை மாற்ற சட்டத்துடன் புதிய சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். மேலும், நாட்டின் பெறுமதி மிக்க கனிம வளங்களை, சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத வகையில் நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் அவசர வேலைத் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது."



**சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் செயலாளர் பி. கே. சந்திரகீர்த்தி:**

"நிலையான அபிவிருத்தியடைந்த இலங்கை' என்ற தொலைநோக்குப் பார்வையின் கீழ், சுற்றுச்சூழல் அமைச்சு கடந்த இரண்டு வருடங்களில் பல பணிகளை செய்து வருகிறது. அதற்கிணங்க, சேதமடைந்த சதுப்புநில சுற்றுச்சூழல் அமைப்புகளை மீட்டெடுக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் இரத்தினபுரி அருங்காட்சியகப் பகுதியிலுள்ள பல்லுயிர்ப் பூங்கா, புந்தல பத்திரஜவெல மற்றும் கித்துல் கல பெலிலென ஆகிய இடங்களை பல்லுயிர் சுற்றுலாத் தலங்களாக அபிவிருத்தி செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும், இலங்கையில் ஊடுருவும் உயிரினங்களை கட்டுப்படுத்தவும் நிர்வகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றி, சுற்றுச்சூழலுக்கு உகந்த முகாமைத்துவம் மற்றும் பிளாஸ்டிக் கழிவு உற்பத்தியைத் தடுப்பதற்கும் குறைப்பதற்கும் திட்டங்களை செயல்படுத்தியுள்ளோம். இரசாயனங்கள் மற்றும் கழிவுகளை முறையான முகாமைத்துவத்திற்கான நிறுவன வலுவூட்டலுக்கான செயற்திட்டம் மற்றும் விவசாயம் துறையில் பயன்படுத்தப்படும் தொடர்ச்சியான இரசாயன மாசுக்கள் மற்றும் பாதரசம் மற்றும் இலங்கையில் சுகாதாரத் துறையில் பயன்படுத்தப்படும் கழிவுகளை நிர்வகித்தல் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் அகற்றுவதற்கான திட்டமும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

'பசுமைப் பாடசாலைகள், பசுமை நிறுவனங்கள் மற்றும் பசுமை மருத்துவமனைகள்' என்ற கருத்திட்டம் குறித்த விழிப்புணர்வு, பிளாஸ்டிக் கழிவு முகாமைத்துவம் குறித்த தேசிய தொடர்பாடல் வேலைத்திட்டத்தின் ஆரம்பம், தியவன்னா ஓயாவின் நீர் மாசுபாட்டைக் கட்டுப்படுத்துதல் மற்றும் அதன் நிலைமையை மேம்படுத்துதல், அத்துடன் இலங்கையில் மின்சார மற்றும் இலத்திரனியல் கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கையை அறிமுகப்படுத்துதல் ஆகியவை மிக விரைவில் மேற்கொள்ளப்படும்."

**மேலதிக செயலாளர் ஆர். டி. எஸ் ஜயதுங்க (சுற்றுச்சூழல் அபிவிருத்தி):**

"காலநிலை மாற்றம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்காக ஏற்கனவே பல அவசர திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றில், விவசாயம், காடுகள் மற்றும் ஏனைய நிலப் பயன்பாட்டுத் துறையில் மேம்பட்ட வெளிப்படைத்தன்மைக்கான கட்டமைப்பைத் தயாரிப்பதற்கான திட்டம் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மேலதிக செயலாளர் டபிள்யூ. டி. எஸ். சிவெலிவத்த (இயற்கை வளங்கள்):**

"சுற்றுச்சூழல் அமைச்சின் இயற்கை வளப் பிரிவு தற்போது ஆரோக்கியமான நிலப்பரப்பு திட்டம் 20212024 மற்றும் பாலைவனமாவதைத் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகளின் மாநாட்டின் கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது. கொழும்பில் காற்று மாசுபாட்டினால் மிகவும் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளைக் கண்டறிந்து வளியின் தரத்தை மேம்படுத்துவதற்கான திட்டம் பிரான்ஸ் அரசாங்கத்தின் தொழில்நுட்ப ஆதரவின் கீழ் நடைபெற்று வருகிறது."

**மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் வெணுர பெர்னாண்டோ:**

"சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்காக, எத்தனை விதிகள், கட்டுப்பாடுகள் இருந்தாலும், 'சுற்றுச்சூழல் கலாச்சாரத்தை' உருவாக்காமல், நாம் எதிர்பார்க்கும் பெறுபேறுகளை எட்ட முடியாது. அதற்கான வேலைத் திட்டங்கள் பாடசாலை மட்டத்திலும், பல்கலைக்கழக மட்டத்திலும், ஆசிரியர் பயிற்சிக் கலாசலைகளிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நமது நூலக வசதிகளை மேம்படுத்தவும், தேசிய மற்றும் சர்வதேச அளவில் சுற்றுச்சூழல் அறிவைப் பெறுவதற்கான வாய்ப்புகளை வழங்கவும் இது ஒரு தகவல் மையமாக முழுமையாக டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரில், இலங்கையை உள்ளடக்கிய மூலோபாய சுற்றுச்சூழல் மதிப்பீட்டை நடத்த மத்திய சுற்றாடல் அதிகாரசபை திட்டமிட்டுள்ளதுடன் அதற்கான ஆரம்ப கட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது."

**புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் கித்சிறி மஞ்சநாயக்க:**

"உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களால் நமது நாட்டின் கனிம வளங்கள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அவர்களுக்குத் தேவையான ஏற்பாடுகளை உரிய நிறுவனங்களுடன் எந்தவித இடையூறு இன்றியும் தாமதம் இன்றியும் செய்து கொடுக்க நாங்கள் நேரடியாகத் தலையிட்டு வருகிறோம். மேலும், தற்போது தொடங்கப்பட்டுள்ள கனிம வள முகாமைத்தும் தொடர்பான அனைத்து அம்சங்களையும் டிஜிட்டல் மயமாக்குவதன் மூலம், உலகின் எந்த நாட்டிலிருந்தும் நமது கனிம வளம் மற்றும் அது தொடர்பான புதுப்பிக்கப்பட்ட தகவல்களைப் பெற முடியும். இதன்மூலம், இலங்கையின் பெறுமதிமிக்க கனிம வளங்களை, சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத வகையில் நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் வகையில் நாம் செயற்பட்டு வருகின்றோம்."

சுற்றாடல் அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகார சபை, புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம், இலங்கை காலநிலை நிதிய நிறுவனம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)

## 'சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர்' பாதுகாப்பிற்கான செயல்படுத்தப்பட்ட திட்டத்திற்கு சர்வதேச விருது கிடைத்தது_ அமைச்சின் செயலாளர்

# ஈரநில முகாமைத்துவத்தில் தீர்வுகளை எட்டுவதில் கவனம் செலுத்த பரிந்துரை

## சர்வதேச ஈரநில பூங்கா ஒன்றிய மாநாட்டில் பிரதமர் தெரிவிப்பு

ஒவ்வொரு நகர ஈரநிலமும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளின் பொதுவான தன்மையை கருத்திற் கொண்டு ஈரநில முகாமைத்துவம் தொடர்பாக பொதுவான தீர்வுகளை எட்டுவதில் கவனம் செலுத்துமாறு பிரதமர் தினேஷ் குணவர்தன பரிந்துரைத்துள்ளார்.

சர்வதேச ஈரநில பூங்கா ஒன்றியத்தினுடைய ஆசிய மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு நேற்று காலை வோட்டர்ஸ் எட்ஜில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, மாநாட்டில் கலந்துகொண்டவர்களுக்கு பிரதமர் இவ்வாறு பரிந்துரைத்துள்ளார்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய பிரதமர்,

"ஈரநில உறவுகள் சர்வதேச ஆசியா கண்டத்தின் உச்சி மாநாட்டின் தொடக்க நிகழ்வில் கலந்துகொள்வதை நான் ஒரு பாக்கியமாக



கருதுகிறேன். சூழலுக்கு உகந்த சுற்றுலாவுக்கான ஈரநிலங்கள் மற்றும் ஈரநில மையங்கள்" என்ற கருப்பொருளின் கீழ் 15க்கும் மேற்பட்ட நாடுகளை சேர்ந்த சுமார் 100 ஈரநில வல்லுநர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு, ஈரநில முகாமைத்துவம் தொடர்பான அறிவையும் அனுபவத்தையும் பகிர்ந்துகொண்டனர்.

இந்த முக்கியமான விடயத்தில் ஆற்றிய பணிகளுக்காகவும், இந்த மாநாட்டை வெற்றியடைய செய்ததற்காகவும் பிரசன்ன ரணதுங்க மற்றும் அதிகாரிகளுக்கும் நான் பாராட்டு தெரிவிக்கிறேன்.


எந்தவொரு பெரிய நகரிலும் வாழும் மக்களின் நல்வாழ்வுக்கு ஈரநிலங்கள் அவசியம். இம்மாநாடு நமது வர்த்தக நகரமான கொழும்புக்கும் பொருந்துவதால் மிகவும் முக்கியமானது. ஈரநிலங்கள் நகரின் நல்வாழ்வுக்கு பங்களிக்கும் பல நன்மைகளை வழங்குகின்றன.

கொழும்பு ஈரநில வளாகம் 6 உள்ளூராட்சி மன்றங்களின் கீழுள்ளது. நிர்வாக தலைநகரம் ஸ்ரீஜயவர்தனபுர கோட்டே மாநகரசபை, கொழும்பு மாநகரசபை, கடுவெல மாநகரசபை, கொலன்னாவ நகரசபை, மஹரகம நகரசபை மற்றும் தெஹிவளை கல்கிஸ்சை மாநகரசபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களாகும். இந்த உள்ளூராட்சி மன்றங்களின் கட்டுப்பாட்டு பகுதிகளின் கீழ் வரும் நகர ஈரநிலங்கள், நகரத்தின் அபிவிருத்தி திட்டத்தில் முக்கிய அங்கமாகும். 150 ஆண்டுகள் பழமையான ஈரநிலங்கள் மீட்டெடுக்கப்பட்டு, இன்னும் 150 ஆண்டுகள் நீடிக்குமென்பது உறுதி. பிரதமர் என்ற ரீதியில் உள்ளூராட்சிகளுக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் இந்த விடயத்தில் நான் ஆர்வமாக உள்ளேன்.

காலநிலை மாற்றத்தின் விளைவுகள் தெற்காசியா முழுவதும் தீவிரமடைந்து வருகின்றன. காலநிலை மாற்றம் தொடர்பில் இலங்கை மிகுந்த அவதானம் செலுத்தி வருகின்றது" எனத் தெரிவித்தார்.

### கொழும்பு பெரிய பள்ளிவாசலில்

# புனித ஹஜ் பெருநாள் தொழுகை





கொழும்பு பெரிய பள்ளிவாசலில் புனித ஹஜ்ஜூப் பெருநாள் தொழுகை நேற்று காலை நடைபெற்றதுடன், இதில் பெருமளவானோர் கலந்துகொண்டனர். பள்ளிவாசல் தலைவர் தாஹிர் றசீன் மற்றும் பொதுச் செயலாளர் பாரிஸ் ஹாஜி உட்பட நிர்வாக உறுப்பினர்களின் ஏற்பாட்டில் இப்பெருநாள் தொழுகை நடைபெற்றது. இதன்போது விசேட துஆ பிரார்த்தனையை பள்ளிவாசலின் பிரதம இமாம் மௌலவி அல் ஹாபிழ் றிஸ்வான் பஹ்ஜி நிகழ்த்தினார்.

**(படங்கள்:கொழும்பு தினகரன் நிருபர்)**





ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெற்ற லேக் ஹவுஸ் நிறுவனத்தினுடைய ஊழியர்களது பிள்ளைகளை பாராட்டி பரிசில்கள் வழங்கும் வைபவம், நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசத்தின் தலைமையில் நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்களையும் பரிசு பெற்ற மாணவர்களையும் படங்களில் காணலாம்.

***(படங்கள்: சுலோச்சன கமகே, ஷான் ரூபஸ்ஸர)***

# நாட்டுக்கு மிக முக்கியமான 15 சட்டங்கள்; விரைவில் பாராளுமன்றத்தில் நிறைவேறும்

## நீதியமைச்சர் விஜேயதாச ராஜபக்ச தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அடுத்த வாரங்களில் நாட்டுக்கு மிக முக்கியமான 15 சட்டங்கள் மற்றும் கட்டளை சட்டங்களையும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றவுள்ளதாக, நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச தெரிவித்தார்.



அதற்கான ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், அவர் தெரிவித்தார்.

அத்துடன் குற்றவியல் சட்டக் கோவை சட்டத்தில் திருத்தங்கள் சிலவற்றை முன் வைத்துள்ளதாக தெரிவித்த அமைச்சர், அண்மையில் நிறைவேற்றப்பட்டுள்ள நீரியல் தொடர்பான சட்டம் அடுத்த வருடத்தில் நடைமுறைப் படுத்தப்படுமென்பதுடன், அதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

அதன் மூலமாக எமது கடற்பரப்பில் பயணம் செய்யும் கப்பல்களால் வருடாந்தம் 50 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிக வருமானத்தை பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்படுமெனவும், அமைச்சர் மேலும் தெரிவித்தார்.


EMPLOYEES' TRUST FUND BOARD
සේවා නියුක්තයන්ගේ භාර අරමුදල් මණ්ඩලය
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

2023 க.பொ.த உயர் தரப் பரீட்சைக்கு தோற்றிய ETF இன் செயலூக்கமுள்ள அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கான



திறன் ஒத்துழைப்பு நலன் திட்டம்

விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி 2024 ஆகஸ்ட் 16

தேசிய தொழில் தகைமை (NVQ) மட்டம் 3, 4 மற்றும் 5 அங்கீகாரமுள்ள தெரிவுசெய்யப்பட்ட 100 பாடநெறிகளில் ஒரு பாட நெறிக்கு மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மூலம் நடாத்தப்படும் பாடநெறிகளுக்காக

ரூ. 50,000/-
பெறுமதியான புலமைப் பரிசில்

- அடிப்படைத் தகைமைகள்
- மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின்
- விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்
- பாடநெறிக் கட்டணங்களைச் செலுத்துதல்
- தேர்ந்தெடுக்கப்பட்ட கற்கைநெறிகள் உட்பட

உங்கள் பிள்ளைகளின் தொழில்வாய்ப்புக்கு நிதியுதவி எம்மிடமிருந்து

தொலைபேசி இலக்கம்
0117747200 | 0117747281
0117747282 (புலமைப் பரிசில் பிரிவு)
மின்னஞ்சல் முகவரி
nipunathasaviya@etfb.lk
WhatsApp No.
0717 408 155

மேலதிக தகவல்களுக்கு இணையத்தளத்திற்கு பிரவேசிக்கவும்.
www.etfb.lk

தலைவர் / பிரதம நிறைவேற்று அதிகாரி
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை



உங்கள் வியாபாரத்தைப் பலப்படுத்துவதற்கான வாய்ப்பு

இலங்கை வங்கியின் E-FRIENDS II
கடன் திட்டத்தின் கீழ் சூரியசக்தி அமைப்பொன்றை பெற்றுக் கொண்டு உங்கள் வியாபாரத்தை தொடர்ச்சியாகப் பலப்படுத்துவதற்கான சந்தர்ப்பம்



தகைமைகள் - உற்பத்தித் துறை, தொழிற்சாலைகள், உற்பத்தி ஆலைகள் (மதிப்பைக் கூட்டும் செயற்பாடுகள் உள்ளடங்கலாக)

அதிகபட்ச கொள்ளளவு - கிலோ வோட் 50 (கடந்த 12 மாதங்களில் வாடிக்கையாளர்களின் மின்பாவனையின் அடிப்படையில் கொள்ளளவானது வங்கியால் மதிப்பிடப்படும்)

பிணையம் - அசையாச் சொத்துக்களின் ஈடு (வியாபாரத்தின் அமைவிடம்) அல்லது வங்கியால் ஏற்றுக் கொள்ளப்படும் ஏதாவது பிணை

அதிகபட்ச கடன் தொகை 10 மில்லியன் ரூபா

அதிகபட்ச மீளச் செலுத்தும் காலம் 10 வருடங்கள்

வருடாந்த நிலையான வட்டி வீதம் 6.5%

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளையை நாடுங்கள்.
இக்கடன் திட்டமானது கைத்தொழில் அமைச்சுடன் இணைந்த வகையில் செயல்படுத்தப்படுகின்றது.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆனி மாதம் 04ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்ஹிஜ்ஜஹ் பிறை 11

### குறள் தரும் சிந்தனை



நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்

நன்மையான பயனைத் தரக்கூடிய நல்ல பண்பிலிருந்து விலகாத சொற்கள் அவற்றைக் கூறுவோருக்கும் இன்பத்தையும், நன்மையையும் உண்டாக்கக் கூடியவைகளாகும்.

## நாட்டில் முடிவின்றி தொடரும் துயர் தரும் உயிரிழப்புகள்!

இலங்கையில் விபத்துகளால் தினமும் அதிகளவில் மரணங்கள் சம்பவிக்கின்றன. நாளாந்தம் ஊடகங்களில் செய்திகளை அவதானிக்கின்ற போது, விபத்துகளால் மரணங்கள் அதிகளவில் இடம்பெறுவதை அறியமுடிகின்றது.

வீதிகளில் வாகன விபத்துகளால் ஏற்படுகின்ற மரணங்களை மாத்திரமே நாம் 'விபத்து மரணங்கள்' என்று கருதுகின்றோம். ஆனால் வாகன விபத்துகளால் ஏற்படுபவை மாத்திரமே 'விபத்து மரணங்கள்' அல்ல. எதிர்பாராத விதத்தில் தற்செயலாக ஏற்படுகின்ற ஆபத்தான சம்பவங்கள் அனைத்துமே விபத்துகள் ஆகும்.

நீரில் மூழ்குதல், மின்சாரத் தாக்குதல், குளவி கொட்டுதல், பாம்பு தீண்டுதல், வாகனங்களால் மோதப்படுதல், உயர்ந்த இடங்களிலிருந்து கீழே வீழ்தல், மரம் முறிந்து வீழ்வதால் பாதிக்கப்படுதல் போன்ற பலவிதமான அனர்த்தங்களும் விபத்து என்றே கருதப்படுகின்றன.

இலங்கையில் வாகன விபத்துகளால் ஏற்படுகின்ற மரணங்கள் பற்றி நாம் அதிகம் அறிந்திருக்கின்றோம். நாளாந்தம் நாம் ஊடகச் செய்திகளில் இவ்வாறான சம்பவங்களைப் பற்றி அதிகம் அறிகின்றோம். இலங்கையில் தினமும் சுமார் எட்டுக்கும் மேற்பட்ட மக்கள் வாகனவிபத்துகளால் உயிரிழப்பதாக சுகாதார அமைச்சு வட்டாரங்கள் கூறுகின்றன. அதேசமயம் மேலும் பலர் வீதிவிபத்துகளால் படுகாயமடைவதாகவும் தெரியவருகின்றது.

தனியார் பஸ்கள், முச்சக்கரவண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் ஆகியனவே பெருமளவான விபத்துகளுக்குக் காரணமாகின்றன. வீதிப்போக்குவரத்து விதிமுறைகளை அனுசரித்தவாறு பயணம் செய்யாததன் காரணமாகவே இவ்விதமான துர்ப்பாக்கிய சம்பவங்கள் அடிக்கடி இடம்பெறுகின்றன. எமது மக்களில் பலருக்கு சட்டதிட்டங்களுக்கு மதிப்பளித்து நடந்து கொள்கின்ற சுபாவம் முற்றாகவே கிடையாது.

வீதிகளில் பயணிக்கின்ற ஓட்டோ வண்டிகளையும், மோட்டார் சைக்கிள்களையும், தனியார் பஸ்களையும் பார்ப்போமானால், அவற்றின் சாரதிகள் எவ்வாறு போக்குவரத்து விதிமுறைகளை மீறி நடந்து கொள்கின்றார்களென்பது நன்றாகவே தெரிந்துவிடும். வீதியில் நடமாடுகின்ற ஏனைய மக்களை சாதாரண பிராணிகளாகக் கூட அவர்கள் பொருட்படுத்துவதில்லை என்பதை நாம் அன்றாடம் வீதிகளில் காண்கின்றோம்.

வீதிவிபத்துகள் இவ்வாறிருக்க, நீரில் மூழ்கி மரணமடைபவர்களின் எண்ணிக்கை சமீப காலமாக அதிகரித்திருப்பதை ஊடகச் செய்திகள் புலப்படுத்துகின்றன. ஆறுகள், குளங்கள், நீர்வீழ்ச்சிகள் மற்றும் கடல் ஆகியவற்றில் மூழ்கி மரணமடைபவர்களின் எண்ணிக்கை சமீப நாட்களாக அதிகரித்திருக்கின்றது. இவ்வாறு மரணமடைபவர்களில் அநேகமானவர்கள் இளவயதினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

ஆபத்தான இடங்களில் நீராடுவதன் காரணமாகவே பலர் பரிதாபமாக உயிரிழக்கின்றனர். கடுமையான அலை நிறைந்த கடல், நீரோட்டம் கூடிய ஆறுகள், ஆழமான குளங்கள் போன்றவற்றில் நீராடுபவர்களே பெருமளவில் விபத்தில் சிக்கி உயிரிழக்கின்றனர்.

கடந்த ஒரு வாரகாலத்தில் இவ்வாறான சம்பவங்கள் அதிகளவில் இடம்பெற்றுள்ளன. காரைதீவில் மருத்துவர் ஒருவர் பாணமை பிரதேச கடலில் அகப்பட்டு இரண்டொரு தினங்களுக்கு முன்னர் பரிதாபமாக உயிரிழந்திருந்தார். தனது குடும்பத்தினர் சகிதம் ஆலயமொன்றுக்குச் சென்று திரும்பும் வேளையிலேயே இத்துயர சம்பவம் நிகழ்ந்திருக்கின்றது.

அப்பிரதேச கடல் மிகவும் அபாயகரமானது. திடீரென்று கடுமையான அலைகள் கரையை நோக்கித் தாக்குவதுண்டு. கடலரிப்பும் அதிகம் இடம்பெறுவதால் கடலின் கரைப்பகுதியே மிகவும் ஆழமாகக் காணப்படுகின்றது. அக்குடும்பத்தினர் கரையோரமாக நின்று கொண்டிருந்த வேளையிலேயே திடீரென்று வந்த பேரலையில் அகப்பட்டுள்ளனர். அவர்களில் மருத்துவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் இடம்பெறுவதற்கு முதல்நாளன்று காரைதீவில் இதேபோன்ற மற்றொரு சம்பவமும் நடந்துள்ளது. க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மூன்று A சித்திகள் பெற்று மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி பெறவிருந்த மாணவர் ஒருவரே கடலில் அகப்பட்டு பரிதாபமாக உயிரிழந்துள்ளார். பெற்றோருக்கு ஒரேயொரு புதல்வரான இம்மாணவரும் தனது குடும்பத்தினருடன் ஆலயமொன்றுக்குச் சென்று திரும்பும் வழியில் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இவ்விரு பரிதாப சம்பவங்களும் காரைதீவு பிரதேசத்தை துயரில் மூழ்கச் செய்துள்ளன. ஒருவர் அனுபவம் வாய்ந்த மருத்துவர். மற்றையவர் எதிர்காலத்தில் மருத்துவராக வரவேண்டிய விவேகமான மாணவர். தண்ணீரின் அபாயம் குறித்து மிகவும் எச்சரிக்கையாக இருந்திருப்பின் இவ்விருவருக்கும் இந்த பரிதாப முடிவு ஏற்பட்டிருக்காது என்பதே பலரதும் கவலையாக உள்ளது.

'நீர் விளையாடேல்' என்பது எமது ஆன்றோர் கூறிய வாக்கு ஆகும். நீர் மாத்திரமன்றி பஞ்சபூதங்கள் எனப்படுகின்ற நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்துமே மிகவும் எச்சரிக்கைக்கு உரியனவாகும்.

இளவயதினர் பலர் தமது பெற்றோருக்குத் தெரியாமல் நீர்நிலைகளுக்கு நீராடச் சென்று உயிராபத்தைச் சந்திப்பது வழமையாகியுள்ளது. மாணவர்களும் பலர் இவ்வாறு உயிரிழந்துள்ளனர். எந்நேரமும் தமது பிள்ளைகளை அவதானித்துக் கொண்டிருத்தல் பெற்றோருக்கு இயலாத காரியமாகும். ஆகவே இளவயதினர் ஆபத்தின் தன்மையைப் புரிந்து கொண்டு எச்சரிக்கையாக நடந்து கொள்வதே புத்திசாலித்தனமாகும்.

editor.tkn@lakehouse.lk

# சரியான பொருளாதாரக் கொள்கையை பின்பற்றினால் நாடு முன்னேற்றமடையும்

## அடுத்த ஐந்து வருடங்களில் செயற்படுத்தப்படும் பொருளாதாரக் கொள்கைகளே இலங்கையின் எதிர்காலத்தை தீர்மானிக்கும்

## மன்னாரில் இளையோர் மற்றும் வர்த்தகர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி

அடுத்த ஐந்து வருடங்களில் செயற்படுத்தப்படும் பொருளாதாரக் கொள்கைகளே இலங்கையின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மன்னாரில் நேற்றுமுன்தினம் (16) இடம்பெற்ற இளையோர் மற்றும் வர்த்தகர்களுடனான சந்திப்பிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார். 'சுபீட்சமான எதிர்காலத்திற்கான பயணம்' என்ற தொனிப்பொருளில் இளைஞர் அமைப்பு ஏற்பாடு ஏற்பாடு செய்த இந்நிகழ்வு, மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. இங்கு, 2023/2024 உயர்தரப் பரீட்சைக்கு தெரிவான மாணவர்களுக்கு ஜனாதிபதியால் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வு வடமாகாண கல்வி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது இளைஞர் மத்தியில் சென்று அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்த ஜனாதிபதி, அவர்களின் கேள்விகளுக்கும் சாதகமான பதில்களை வழங்கினார். கொவிட் காரணமான பொருளாதார நெருக்கடியின் காரணமாக 4 வருடங்களாக தொழில்களை வழங்க முடியாமல் போனதோடு, தொழில் கிடைத்த பலரும் அவற்றை இழந்து நிற்கும் நிலைமையும் ஏற்பட்டது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டியுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

அதனால் புதிய பாதையில் சென்று தொழில் வாய்ப்புக்களை உருவாக்க வேண்டுமா, இல்லாவிட்டால் பழைய முறையில் சென்று வீழ்ச்சியடைவதா என்பதைத் தீர்மானிக்க வேண்டும் என ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அதனையடுத்து மன்னார் மாவட்ட வர்த்தர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில், அரசாங்கம் முன்மொழிந்திருக்கும் வேலைத்திட்டங்களுடன் முன்னோக்கிப் பயணிக்கும் பட்சத்தில், எதிர்காலத்தில் பெருமளவான முதலீட்டாளர்கள் நாட்டுக்கு வருகைத் தருவர் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

காலத்துக்குக் காலம் பொருளாதாரக் கொள்கைகளை மாற்றிக் கொள்ளாமல், சரியான பொருளாதாரக் கொள்கையைத் தொடர்ச்சியாகப் பின்பற்றினால் நாடு முன்னேற்றமடையும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். அதற்காகவே பொருளாதார மறுசீரமைப்புச் சட்டமூலத்தைச் சமர்பித்திருப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி, அதனை எந்தவொரு அரசாங்கமும் முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும் என்றும் கூறினார்.

நீண்ட காலமாக அரசியல் ரீதியான தீர்வைத் தேடும் இந்நாட்டு மக்கள், ஒருபோதும் பொருளாதாரத்தின் பக்கமாக தீர்வைத் தேடவில்லை என்றும், சரியான பொருளாதாரக் கொள்கையின் ஊடாக மாத்திரமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

சரிவடைந்திருந்த பொருளாதாரத்தை குறுகிய காலத்தில் கட்டியெழுப்ப தன்னால் முடிந்ததெனத் தெரிவித்த ஜனாதிபதி, பொருளாதாரம் வலுவடையும்போது, அதன் பலன்கள் சகல தரப்பினருக்கும் கிடைக்கும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் பரந்தளவான அபிவிருத்திச் செயற்பாடுகள் குறித்தும் ஜனாதிபதி விளக்கமளித்தார்.

இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடக்கு மாகாண ஆளுநர். பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)









# பாடும்மீன் ஸ்ரீகந்தராசாவின் நூல்கள் சிட்னியில் வெளியீடு




சிட்னியில் செந்தமிழ்ச் செல்வர், பாடும்மீன் சு. ஸ்ரீ கந்தராசா அவர்களின் 'சங்க இலக்கியக் காட்சிகள்', 'இன்னும் கன்னியாக' ஆகிய இரண்டு நூல்கள் அவுஸ்திரேலியாவில் வெளியிடப்பட்டன. கடந்த 2024 ஜூன் 09 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு, சிட்னி, தூங்காபீ செயின்ட் அந்தனி தேவாலய மண்டபத்தில் இந்த நூல் வெளியீட்டு நிகழ்வு மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

பிரபல எழுத்தாளர் மாத்தளை சோமு தலைமையில் கவிஞரும், ஒலிபரப்பாளருமான சௌந்தரி கணேசன், எழுத்தாளரும், ஒலிபரப்பாளருமான கானா பிரபா, மாணவர்களான செல்வன் அகலவன் ஸ்ரீஸ்கந்தராசா, செல்வி வேதவர்ணா ராஜா ஆகியோர் நூல்களுக்கான அறிமுக உரைகளை நிகழ்த்தினர். பிரபல கவிஞர் நவாலியூர் இளமுருகனார் பாரதி, எழுத்தாளர் ஆசி. கந்தராசா, ஆசிரியர் திருநந்தகுமார் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர்.





# மேற்குவங்க மாநிலத்தில் பதினைந்து பேரை பலியெடுத்த ரயில் விபத்து



இந்தியாவின் மேற்குவங்க மாநிலத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற ரயில் விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நேற்றுப் பிற்பகல் 15 ஆக உயர்ந்தது. உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ. 2 இலட்சம் நிவாரணம் வழங்குவதாக பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

டார்ஜிலிங்கில் கஞ்சன்ஜங்கா சரக்கு ரயில் மீது மற்றொரு ரயில் மோதியதாலேயே இந்த அனர்த்தம் சம்பவித்துள்ளது. இவ்விபத்தில் 30 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்ததுள்ளனர். நின்று கொண்டிருந்த ரயில் மீது, சரக்கு ரயில் மோதியதில் கஞ்சன்ஜங்கா பயணிகள் ரயிலின் கடைசிப் பெட்டி தூக்கி வீசப்பட்டு, அந்தரத்தில் தொங்கியபடி நிற்கிறது.

இடிபாடுகளில் மேலும் பலர் சிக்கியிருப்பதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என நேற்றுப் பிற்கல் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இச்சம்பவத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

மீட்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்றன, காயமடைந்தவர்கள் அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு மாற்றப்பட்டனர். இந்த விபத்தில் காயமடைந்த பயணிகளைப் பற்றிய தகவல்களை குடும்பங்கள் தொடர்பு கொள்ள உதவும் ஹெல்ப்லைன் எண்களின் பட்டியலை இந்திய ரயில்வே வெளியிட்டுள்ளது.

# நற்செய்தியை நம்பிக்கையுடன் விதைப்போம்

## பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ்



பெற்றோர், அருள்பணியாளர்கள, துறவிகள், ஆசிரியர்கள், மறைக்கல்வியாளர்கள், பயிற்றுநர்கள் என நாம் எந்தச் சூழ்நிலையில் வாழ்ந்தாலும் நற்செய்தியை நம்பிக்கையுடன் விதைக்க இயேசு நமக்குக் கற்றுக்கொடுக்கின்றார் என திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிறன்று, வத்திக்கானின்புனித பேதுரு பெஸ்லிகா பேராலய வளாகத்தில் கூடியிருந்த பல்வேறு நாடுகளையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான திருப்பயணிகளுக்கு வழங்கிய செப உரையின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஒரு விவசாயி எவ்வளவுதான் நன்றாகவும் ஏராளமாகவும் விதைகளை மண்ணில் விதைத்தாலும், அவர் எவ்வளவுதான் நன்றாக மண்ணைத் தயாரித்தாலும், செடிகள் அதில் உடனடியாக முளைக்காது, அதற்கு நேரம் எடுக்கும். ஆகவே, விதைகளை விதைத்த பிறகு, அவைகள் சரியான நேரத்தில் முளைத்து வளர்ந்து இறுதியில் நாம் எதிர்பார்க்கும் அளவிற்கு ஏராளமான விளைச்சளைப் பெற நாம் காத்திருக்க வேண்டியது மிகவும் அவசியம் (வச. 2829) என்பதையும் தனது உரையில் சுட்டிக்காட்டினார் திருத்தந்தை. அதேவேளை, விதைக்கப்பட்ட அந்த விதைகள் மண்ணுக்கடியில் பெரிய அளவில் வளர்ந்துகொண்டிருக்கும் ஓர் அதிசயம் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றது.

ஆனால், அது நம் கண்களுக்குத் தெரிவதில்லை, அதற்கு மிகுந்த பொறுமை தேவை என்று குறிப்பிட்ட திருத்தந்தை, இதற்கிடையில், விதைகள் விதைக்கப்பட்ட மண்ணின் மேற்பரப்பில் எதுவும் நடப்பதாகத் தெரியவில்லை என்றபோதிலும், அம்மண்ணைப் பராமரிப்பது தண்ணீர் ஊற்றுவது மற்றும் அவற்றை சுத்தமாக வைத்திருப்பது மிகவும் அவசியம் என்பதையும் கோடிட்டுக்காட்டினார்.

இயேசுவின் இறையாட்சியும் இதுபோன்றதுதான் என்ற திருத்தந்தை, அவர் தம்முடைய வார்த்தை மற்றும் அருளின் விதைகளை, நல்ல மற்றும் ஏராளமான விதைகளை நம்மில் விதைக்கிறார், பின்னர், எப்போதும் அவர் நம்முடன் தொடர்ந்து பயணித்து அவ்விதைகள் முளைத்தெழும்பி பயன்தரும் வரை மிகவும் பொறுமையுடன் காத்திருக்கிறார் என்றும் விளக்கினார்.

# அன்னை மரியாள் வானதூதர்களின் அரசி

மரியாள் உலக வரலாற்றில் பிறந்தவர் தான் என்றாலும் அவரது பிறப்பு கடவுளின் மீட்புத் திட்டத்தில் முக்கிய இடம் பெற்றிருந்தது.

வரலாற்றுக்கு முன்பே, இறைமகனின் தாயாகுமாறு முன்குறிக்கப்பட்டவர் அன்னை மரியாள்.



இறைவனின் மீட்புத் திட்டத்தை எதிர்த்த வானதூதர்களே அலகைகள் என்று பெயர் பெற்றதாக திருச்சபை கற்பிக்கிறது. மனித வரலாற்றில் தம்மை வெளிப்படுத்த விரும்பிய இறைவன், கன்னி மரியாளின் மகனாக இவ்வுலகில் தோன்ற விரும்பினார். இந்த திட்டத்தை வானதூதர்களுக்கு வெளிப்படுத்திய கடவுள், இறைமகனையும் இறை அன்னையையும் வணங்குமாறு கட்டளையிட்டார். இதை ஏற்று அதிதூதர் மிக்கேலின் தலைமையில் மூன்றில் இரண்டு பங்கு வானதூதர்கள், கன்னி மரியாளையும் குழந்தை இயேசுவையும் வணங்கியதாக கிறிஸ்தவ மரபு கூறுகிறது. இதிலிருந்தே, மரியாள் வானதூதர்களின் அரசி என்பதை உணர முடிகிறது.

வானதூதர்களைவிடத் தாழ்ந்த இனத்தில் பிறக்கும் இறைமகனையும், அவரது தாயையும் வணங்க முடியாது" என்று கூறி, லூசிபர் தலைமையில் மூன்றாவது பங்கு வானதூதர்கள் கிளர்ந்தெழுந்தனர்.

மிக்கேலும் அவரோடு சேர்ந்த தூதர்களும் லூசிபரின் கூட்டத்துக்கு எதிராக போரிட்டு, அவர்களை விண்ணகத்தில் இருந்து வெளியேற்றியதாக திருச்சபைத் தந்தையர் கூறியுள்ளனர்.

இதன் காரணமாகவே, மனித குலத்தை பாவத்தில் வீழ்த்த தொடக்கம் முதலே அலகை சூழ்ச்சி செய்து வருகிறது. கடவுளின் திட்டத்துக்கு எதிராக மனிதரை செயல்படத் தூண்டும் வகையிலே அலகை எப்போதும் விழிப்புடன் செயலாற்றிக் கொண்டிருக்கிறது.

தனது வீழ்ச்சிக்கு காரணமாக இருந்த வானதூதர்களின் அரசியான கன்னி மரியாளை மனிதர்களும் வணங்கவிடாமல் தடுப்பது அலகையின் நோக்கங்களில் ஒன்றாக இருக்கிறது.

அனைத்துக்கும் மேலாக, இறைமகனின் தாய் என்ற உன்னத நிலையே கன்னி மரியாளுக்கு வானதூதர்களின் அரசியாகத் திகழும் மாண்பை அளித்துள்ளது. இவ்வுலக ஆட்சியாளர்களின் செயல்பாட்டில், அவர்களது குடும்பத்தினருக்கு உள்ள செல்வாக்கை காண்கிறோம்.

அவ்வாறே, அனைத்துலக அரசர் இயேசுவின் தாயான மரியாள் அனைத்துக்கும் அரசியாகத் திகழ்கிறார். தம் மகனுக்குப் பிறகு, எல்லா வானதூதர்களுக்கும் மனிதர்களுக்கும் மேலாக கடவுளின் அருளால் உயர்த்தப்பட்டவரும், கிறிஸ்துவின் மறைநிகழ்ச்சிகளில் பங்கெடுத்தவருமாகிய மரியாள் கடவுளின் தூய்மைமிகு தாய் ஆவார்.

மேலும், "அருள்நிறைந்த மரியே வாழ்க! கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர்" (லூக்கா 1:28,30) என்று கபிரியேல் தூதரால் வாழ்த்தப் பெற்ற கன்னி மரியாளை, வானதூதர்களின் அரசி என்று அழைப்பதில் மனித குலமே மகிழ்ச்சியடைகிறது.

எல்.எஸ்...




# கண்டி புனித அந்தோனியார் ஆலய திருவிழா









கண்டி புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த 13 ஆம் திகதி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திருவிழா சிறப்புத் திருப்பலி இரத்தினபுரி மறை மாவட்டத்தின் புதிய ஆயர் பேரருட்திரு எந்தனி வைமன் குரூஸ் ஆண்டகையின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருவிழா திருப்பலியின் நிறைவில் புனித அந்தோனியாரின் திருச்சொரூபம் கண்டி வீதிகளில் பவனியாக சென்று இறுதி ஆசீர்வாதத்துடன் திருவிழா நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

(படங்கள் உதவி : மத்தியூ ஜேசுதாஸன்)

# இறையாட்சியின் மதிப்பீடுகளும் ஆண்டவர் இயேசுவின் போதனைகளும்

இயேசு தன் பணி வாழ்வில் தன்னைப் பற்றி அதிகம் பேசவில்லை. தன்னை உலகின் மீட்பர் என்று தம்பட்டம் அடிக்கவில்லை. ஆனால் இறைத் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதே தன்னுடைய முதன்மையானப் பணியாகக் கொண்டிருந்தார்.

இயேசு ஒரு இலட்சியவாதியாக இறையாட்சியின் மதிப்பீடுகளைக் கட்டியெழுப்புவதில் கருத்தாய் இருந்தார். அவரது வாழ்வு போதனை, நம்பிக்கை, வல்ல செயல்கள்,சிலுவை மரணம் ஆகிய அனைத்தும் இறையாட்சியை இம்மண்ணில் மலரவைத்து அதன் மதிப்பீடுகளை மண்ணிலே உறுதிப்படுத்தும் நோக்கத்தோடு தான் இருந்தன.

இறையாட்சி என்ற சொல்லானது ஒத்தமைவு நற்செய்திகளில் இயேசுவின் இலட்சியமாக சுட்டிக்காட்டப்படுகிறது. ஆனால் யோவான் நற்செய்தியில் இறையாட்சி என்ற சொல்லுக்கு இணையாக "நிலைவாழ்வு "அல்லது "நிறைவாழ்வு "என்ற சொல்லானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

இறையாட்சி என்பது மண்ணுலகில் நிகழ வேண்டும் என்பது இயேசு கண்ட இலட்சியக் கனவு. தான் என்ற சுயநலம் நீங்கி உண்மை, அன்பு, நீதி போன்ற இறைமைப் பண்புகளை மானுடம் தம்மிலே வளர்க்க வேண்டும் என்ற கனவு. மேலும் ஏற்றத்தாழ்வற்ற சமத்துவ சமுதாயம் மலர வேண்டும் என்ற உறுதிப்பாடு. இவ்வாறாக இறையாட்சியின் மேன்மையைப் பறைசாற்றலாம்.

இறையாட்சி என்பது இவ்வுலகை ஆளும் அரசர்களை வென்று சுயநலத்தோடு அரசாட்சி செய்வதல்ல. மாறாக, மக்களின் மனதை வென்று பிறர்நலத்தோடு கடவுளின் பிள்ளைகளாக மாறுவதாகும்.

இயேசு வாழ்ந்த காலகட்டத்தில் யூத மக்களிடம் இறையாட்சி மலரும் என்ற நம்பிக்கை காணப்பட்டது.அவர்களின் பார்வையில் உரோமை ஆதிக்கம் முற்றுப்பெற்று கடவுள் நிலையான, நிறைவான ஆட்சியை நிறுவுவார் என்று காத்திருந்தனர். ஆனால் ஆண்டவர் இயேசுவின் பார்வையில் இறையாட்சி என்பது மாறுதலாக இருந்தது. இறையாட்சியின் மதிப்பீடுகள் மனித வாழ்வியலோடு தொடர்புடையது. உண்மை, அன்பு, நீதி, சமத்துவம் போன்ற மதிப்பீடுகளை உள்ளடக்கியது.

இயேசு வாழ்ந்த காலகட்டத்தில் பல்வேறு எதிர்பார்ப்புகள் மக்களிடம் இருந்தன. குறிப்பாக திருக்காட்சியினர், விடுதலைக் குழுக்கள், பரிசேயர்கள், சதுசேயர்கள், எசேனியர்கள் போன்றோர் மெசியா இவ்வுலகில் வந்து ஆட்சி செலுத்துவார். தங்களை அடிமைப்படுத்துபவர்களிடமிருந்து விடுதலை பெற்று, புதிய ஆட்சியை நிறுவுவார் என்ற நம்பிக்கையில் இருந்தனர்.

ஆனால் இயேசுவின் இலட்சிய இலக்கு அவர்களின் பார்வையிலிருந்து மாறுபட்டதாக இருந்தது. இறையாட்சி என்பது ஒரு மறைபொருள். ஆயினும் அது நம் அன்றாட வாழ்வோடு பின்னிப்பிணைந்தது. எனவேதான் இயேசு இறையாட்சி பற்றிய போதனைகள் செய்யும்பொழுது நம் அன்றாட வாழ்வில் அதிகம் பயன்படுத்துவதை உருவகமாக வைத்து உவமைகள் பல சொல்லி நம்மைத் திடப்படுத்தியுள்ளார்.



இந்த ஞாயிறு நற்செய்தியில் ஆண்டவர் இயேசு இறையாட்சியைப் பற்றி போதித்துள்ளார். முதலில் இறையாட்சியைத் தானாக முளைத்து வளரும் விதையோடு ஒப்பிட்டுள்ளார். இரண்டாவதாக இறையாட்சியை கடுகு விதையோடு ஒப்பிட்டுள்ளார்.

முதலாவதாக, இறையாட்சி தானாக முளைத்து வரும் விதைக்கு ஒப்பாகும். நிலத்தில் விதைப்பவர் விதைக்கிறார். அவர் எதுவும் செய்யாமல் சில நாட்கள் நகர்ந்து செல்கின்றன. அவருக்குத் தெரியாமல் விதை முளைத்து வளர்கிறது. முதலில் தளிர், பின்பு கதிர், அதன்பின் கதிர் நிறைய தானியம் என்று நிலம் தானாகவே விளைச்சல் அளிக்கிறது.

பயிர் விளைந்தது அறுவடைக் காலம் வந்ததும் அவர் அறிவாளோடு புறப்படுகிறார்; இந்த நிகழ்வு இறைவனின் திருவுளத்தை வெளிப்படுத்துகின்றது. இறையாட்சியில் இறை திருவுளம் தான் மேலோங்கி நிற்க வேண்டும் என்ற உண்மையை எடுத்துரைக்கிறது. விதைப்பவர்கள் நாமாய் இருந்தாலும், அதற்கான விளைச்சலைக் கொடுப்பவர் கடவுள் மட்டுமே. கடவுளின் திருவுளம் இருந்தால் மட்டுமே மிகுந்த பலன் கிடைக்கும். எனவே நம்முடைய வாழ்வில் நாம் எதைச் செய்தாலும் கடவுளின் திருவுளத்தை முன்னிறுத்தி செய்யும்பொழுது, நாம் மிகுந்த பலனைக் கொடுக்கின்றவர்களாக வாழ முடியும்.

எனவே இறையாட்சி என்பது கடவுளின் திருவுளத்துக்கு முழுவதுமாகக் கையளித்து நம் வாழ்வும் பிறர் வாழ்வும் வளம் பெற, நம் கடமையைச் செய்வது.

இரண்டாவதாக, இறையாட்சியை கடுகு விதையோடு இயேசு ஒப்பிடுகிறார். கடுகு விதை எல்லா விதைகளையும் விடச் சிறியது. ஆனால் அது விதைக்கப்பட்டபின் முளைத்தெழுந்து எல்லாச் செடிகளையும் விடப் பெரிதாகி, வானத்துப் பறவைகள் அதன் நிழலில் தங்கக் கூடிய அளவுக்குப் பெருங் கிளைகள் விடும்.

இது எதைச் சுட்டிக் காட்டுகிறது என்றால் இறையாட்சி என்ற மதிப்பீடு கண்ணுக்குக் கூட ஒழுங்காக தெரியாத சிறு விதையாக இருந்தாலும், அதன் தாக்கம் மிகப் பெரியதாகவும் பிறருக்கு பயனளிக்கக் கூடியதாகவும் இருக்கும். எனவே நம்முடைய அன்றாட வாழ்வில் இறையாட்சியின் மதிப்பீடுகளான உண்மை, அன்பு, நீதி, சமத்துவம் போன்ற மதிப்பீடுகளைச் சிறிய அளவாவது வாழ முயற்சி செய்யும்பொழுது, பெரிய தாக்கத்தை நாம் வாழும் சமூகத்தில் ஏற்படுத்த முடியும்.

நம்முடைய அன்றாட வாழ்வில் உண்மைக்குச் சான்று பகரும் பொழுது நம்மை ஏமாளி என்று விமர்சனப்படுத்துவர். பிறர் நலத்தோடும் தியாகம் நிறைந்த உள்ளத்தோடும் பகைவரை அன்பு செய்யும் பொழுது நம்மைக் கோழை என்றும் முட்டாள் என்றும் அழைப்பர். இருந்தபோதிலும் நாம் அவர்களை முழுமையாக அன்பு செய்யும் பொழுதே இறையாட்சியின் மதிப்பீடுகள் நம் வாழ்வால் வெளிப்படும். நீதிக்காகக் குரல் கொடுக்கும் பொழுது, நம்மை வன்முறையாளர் என்று விமர்சனப்படுத்துவர்.

ஆனால் அவற்றைக் கண்டு துவண்டுவிடாமல் மனத் துணிவோடு இறையாட்சியின் மதிப்பீட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பொழுது, சமூகம் இறையாட்சியின் மேன்மையை உணரும்.

அருட்பணி குழந்தை இயேசு பாபு

## பொருளாதார முன்னேற்றத்துக்கான

# வேலைத்திட்டம் ஜனாதிபதியால் வெற்றிகரமாக முன்னெடுப்பு

### இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல்



கொள்கைகளின் அடிப்படையிலேயே நாட்டை முன்னேற்ற முடியுமென்பதுடன், அவ்வாறின்றி தனிநபர்கள் அல்லது கட்சிகளால் அதனை செய்ய முடியாதென தெரிவித்த சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு தேவையான வேலைத்திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்கெனவே வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியுள்ளதாக கூறினார்.

சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு 50% நிவாரணம் வழங்க ஜனாதிபதி அனுமதியளித்துள்ளதாகவும், இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (17) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் தெரிவித்த இராஜாங்க அமைச்சர்,

"நாட்டு மக்களின் போராட்டத்தில் வலியுறுத்தப்பட்ட சீர்திருத்தங்களை தற்போதைய அரசாங்கம் வெற்றிகரமாக மேற்கொண்டு வருகிறது. அதற்கு மத்தியில் நாட்டை பொறுப்பேற்க பலர் முன்வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களிடத்தில் அதற்கான கொள்கைகள் எவையும் இல்லை.

நாட்டில் பலரும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தினை ஏற்றுக்கொண்டுள்ள போது, சிலர் மாத்திரம் அதற்கு புறம்பாக செயற்படுகிறார்கள்.

யார் எவ்வாறு அறிக்கைகளை வெளியிட்டாலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் கொண்டு வரப்பட்ட சீர்திருத்தங்கள் வெற்றியடைந்தமையே உண்மையாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் பொருளாதார முன்னேற்றத்துக்கு அடித்தளமிட்டுள்ளதுடன், அதனை எவ்வித பிரச்சினைகளும் இன்றி நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இந்நாட்டில் பொருளாதார முறைமை, பணவீக்கம், சமூக நலன் ஆகிய பிரிவுகளை நோக்கி நகர்கிறது.




புனித ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை நேற்று காலை காலிமுகத் திடலில் நடைபெற்ற போது...

## இன்றைய பலன்கள்

(18.06.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)





**மேஷம் :** சுப செலவுகள் அதிகரிக்கும். பணப்பற்றாக் குறை ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு.

**ரிஷபம் :** கணவன் மனைவி ஒற்றுமை பலப்படும். பெற்றோர் உடல் நலனில் கவனம் தேவை. வாரிசுகளின் வளர்ச்சி மகிழ்ச்சி தரும்.

**மிதுனம் :** குடும்ப ஒற்றுமை பலப்படும். தொழில் முன்னேற்றம் உண்டு. கடன் சுமை குறையும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள்.

**கடகம் :** பெண்களுக்கு குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். கணவன் மனைவி இருவரும் விட்டுக் கொடுத்துச் செல்வது நன்மை தரும். பணம் வந்த மறுநிமிடமே செலவாகிவிடும்.

**சிம்மம் :** பெண்களுக்கு மனக்கலக்கம் அதிகரிக்கும். தொழில் கூட்டாளிகளால் பிரச்சினை வரலாம். ஆதாயம் குறைவாகவும் அலைச்சல் கூடுதலாகவும் இருக்கும்.

**கன்னி :** பெண்களுக்கு அதிக விரயம் உண்டு. நிம்மதி குறையும். தொழிலைப் பொறுத்தவரை யாரை நம்பியும் எதுவும் செய்ய இயலாது. பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள்.

**துலாம் :** குடும்ப விஷயங்களை மூன்றாம் நபரிடம் சொல்ல வேண்டாம். இடமாற்றம், வீடு மாற்றம் ஏற்படும் பணி புரிபவர்களுக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும்.

**விருச்சிகம் :** உங்களின் திறமைக்கு ஓர் அங்கீகாரம் கிடைக்கும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். குடும்பத்தில் குழப்பத்தை ஏற்படுத்தியவர்களை கண்டறிந்து ஒதுக்குவீர்கள்.

**தனுசு :** யாரேனும் உங்களுடைய தவறுகளை சுட்டிக் காட்டினால் மாற்றிக் கொள்வது நல்லது. தவறு செய்யாமலேயே நீங்கள் தவறு செய்ததாக சிலர் வீண் பழி சுமத்துவார்கள்.

**மகரம் :** தந்தையாருக்கு சின்ன அறுவை சிகிச்சை, மூச்சுத் திணறல், வாயுக் கோளாறால் நெஞ்சு வலி வந்துப் போகும். எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக்குறை இருந்துக் கொண்டேயிருக்கும்.

**கும்பம் :** விட்டுக் கொடுத்து போவது நல்லது. அனுமதி பெறாமல் வீடு கட்டத் தொடங்க வேண்டாம். தாயாரின் உடல் நிலை பாதிக்கும். மனத்தாபங்களும் வந்து நீங்கும்.

**மீனம் :** கணவன் மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். சிலர் தனிக் குடித்தனம் செல்வீர்கள். திருமணம் தள்ளிப் போனவர்களுக்கு நல்ல விதத்தில் முடியும்.

## வருடத்தின் முதலாவது காலாண்டில்...

நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கைக்கமைய இந்தத் தகவல் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், அவர் கூறினார்.

நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"2022ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் 12 சதவீதத்துக்கும் குறைந்த எதிர்மறையான பொருளாதாரத்தை கொண்ட நாடாக இலங்கை பதிவானது. இந்த நிலைமையை நேர்மறையான கண்ணோட்டத்துடன் பார்ப்பவர்கள் இலங்கையின் பொருளாதார பயணத்தை நம்பிக்கையுடன் பார்க்க முடியும்.

உலக வங்கியின் கணிப்புக்கமைய இலங்கையின் பொருளாதாரம் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தில் 2.2 சதவீத வளர்ச்சியை எட்டும். இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாட்டின் பொருளாதாரம் மைனஸ் 7க்கு மேல் இருந்ததாக தெரிவிக்கப்பட்ட இந்த நாட்டில் இரண்டு வருடங்களில் 2 சதவீதத்துக்கும் அதிகமான பொருளாதார வளர்ச்சியை எட்ட முடிந்தமை சிறந்த சாதனையாகும்" எனத் தெரிவித்தார். நாடு பின்பற்றும் வேலைத்திட்டம் சர்வதேச நாணய நிதியத்தால் தெளிவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சர், எவ்வாறாயினும் அவதானமாக முனனோக்கி செல்ல வேண்டுமென்று அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளதாக தெரிவித்தார்.

## தேங்காய் எண்ணெய் விலை...

செய்யப்பட்டு வந்த தேங்காய் எண்ணெய், தற்போது சந்தைகளில் 550 ரூபாவை விட கூடிய விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை இந்த தேங்காய் எண்ணெய் விலை அதிகரிப்புக்கு பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தி உரிமையாளர்கள் சங்கம் எதிர்ப்பு தெரிவித்ததுடன், எதிர்வரும் பண்டிகைக் காலங்களை முன்னிட்டு பெருமளவிலான தேங்காய் எண்ணெயை பதுக்கி வைத்து அதன் விலையை தேங்காய் எண்ணெய் இறக்குமதியாளர்கள் அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக அச்சங்கத்தின் இணைப்புச் செயலாளர் புத்திக டி.சில்வா தெரிவித்த போது, தேங்காய் எண்ணெய் இறக்குமதியாளர்கள் தன்னிச்சையாக இந்த விலை அதிகரிப்பை மேற்கொண்டுள்ளதாகவும் இந்த நிலை தொடர்ந்தால் ஆயிரம் ரூபாவரை தேங்காய் எண்ணெய் விலை அதிகரிக்கலாமென்றார்.

இது தொடர்பாக நிதி அமைச்சு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு ஆகியன உரிய கவனம் செலுத்த வேண்டுமென கேட்டுக்கொண்டுள்ள அவர், தெங்கு அபிவிருத்தி அதிகார சபை இது தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுக்காமை கவலையளிப்பதாகவும் கூறினார்.

தேங்காய் எண்ணெய் விலையை கட்டுப்படுத்த தேசிய தேங்காய் எண்ணெய் கைத்தொழில் துறையினருக்கு தேவையான மூலப்பொருட்களை இறக்குமதி செய்ய சந்தர்ப்பம் வழங்க வேண்டுமென்று சங்கத்தின் சார்பாக அரசாங்கத்திடம் அவர் கேட்டுக்கொண்டார்.

## தமிழ் பொது வேட்பாளர்; தனியொரு...

“ஒட்டுமொத்தமாக வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் இலங்கையிலுள்ள தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைமைகள், அரசியல் கட்சி பிரதிநிதிகள், மக்கள் பிரதிநிதிகள், சிவில் அமைப்பு பிரதிநிதிகள், புத்திஜீவிகள் அனைவரையும் ஒன்றிணைத்தே தமிழ் பொது வேட்பாளர் விடயம் தொடர்பாக பேச வேண்டும். அதை விடுத்து மட்டக்களப்பில் நான்கு பேர் சேர்ந்து பொது வேட்பாளர்களை தீர்மானிக்கின்றனர்.

## பொது வேட்பாளர் ஒருவரை அனைவரும்...

போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் நிதி உதவியுடன் தாழங்குடா கடற்கரை வீதி சுமார் 92 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி மு.கோபாலரட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்து கொண்டு தொடர்ந்து உரையாற்றிய போது,

"நாட்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியால் இன்று எந்தக் கட்சியுமே பலமான நிலையில் இல்லை. ஒரு பொது வேட்பாளரை தெரிவு செய்து அனைத்து கட்சிகளும் ஆதரிக்கும் போது பலம் வாய்ந்த தலைவர் ஒருவரை தெரிவு செய்ய முடியும்.

ஜனாதிபதியாக வருவதற்கு தேர்தலில் 51சதவீதமான வாக்குகள் தேவையாகவுள்ளது. அவ்வாறான வாக்குகளை பெறும் நிலை இன்றைய நிலையில் எந்தக் கட்சிக்கும் கிடையாது.

கட்சிகளுக்கு இடையில் கடுமையான போட்டியே நிகழும். அதனால் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி அனைவரும் ஒன்றிணைந்து அவருக்கு ஆதரவு வழங்கும் போது வெற்றிக்கான வாய்ப்புகள் அதிகமாகவுள்ளது" எனத் தெரிவித்தார்.

## சட்டவிரோத சிகரெட்டுகளுடன்...

செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

இந்நிலையில் மேலதிக விசாரணைக்காக கடலோர பொலிஸ் நிலையத்தில் சந்தேக நபர்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இச்சந்தேக நபர்களிடமிருந்து பல்வேறு வகை சிகரெட் அடங்கிய பெட்டிகளை கைப்பற்றியுள்ளதாக தெரிவித்த பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், சட்டவிரோதமாக நாட்டுக்கு கடத்திக் கொண்டு வரப்பட்ட இச்சிகரெட்டுகள், நாடு முழுவதும் விநியோகிக்க தயாராக வைக்கப்பட்டிருந்தமை தமது விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் கூறினர்.

## டாக்டர்களுக்கான உணவகம்...

பணிப்புரையின் கீழ் நேற்று தெஹிவளை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அங்கு மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இவ்வாறு மனித பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டதாகவும், அவர் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை காரணமாக உணவுப் பொருட்கள் மற்றும் பானங்கள் ஆகியவற்றின் தயாரிப்பு நிலை, அவற்றின் தரம் தொடர்பாக பிரச்சினைகள் காணப்படுவதாக தமக்கு கிடைத்த தகவல்களுக்கு இணங்க கடந்த சில தினங்களாக களுபோவிலை போதனா வைத்தியசாலை மற்றும் அதனை அண்டிய சிற்றுண்டிச்சாலைகள், உணவகங்கள் இவ்வாறு சுற்றிவளைப்புக்கு உட்படுத்தப்பட்டன. அதன்போதே வைத்தியசாலையின் டாக்டர்களுக்கான இந்த உணவகமும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாகவும், அவர் கூறினார்.

களுபோவிலை வைத்தியசாலையில் இரண்டு உணவகங்கள் உள்ள நிலையில் அங்கு டாக்டர்களுக்கான உணவகத்தில் சுகாதார பாதுகாப்பற்ற நிலை காணப்படுவதாகவும் அவற்றில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள பொருட்களில் மனித பாவனைக்கு உதவாத பழைய பராட்டா உள்ளிட்ட உணவுகள், சமைத்த கறி வகைகள் பாத்திரங்களிலும் குளிரூட்டிகளிலும் வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாகவும், அவர் தெரிவித்தார்.

அங்கு ஈக்கள், எறும்புகள் மொய்த்த நிலையிலும் பல உணவுகள் காணப்பட்டதாகவும் அவற்றை அங்கிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், அவர் தெரிவித்தார்.

முறையான வகையில் உணவுகளை தயாரிப்பது மற்றும் பாதுகாப்பது தொடர்பாக அந்த உணவகத்தின் உரிமையாளர் மற்றும் ஊழியர்களுக்கு வழிகாட்டல் வழங்கப்பட்டதுடன், பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்கள் மற்றும் குளிர்பானங்களும் உணவகத்தின் உரிமையாளருக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் அதிகாரிகளால் அழிக்கப்பட்டதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி வைத்தியசாலையை அண்டிய பகுதிகளில் காணப்பட்ட உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் காணப்பட்ட மனித பாவனைக்கு பொருத்தமற்ற உணவுப் பொருட்கள் மற்றும் குளிர்பானங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அளிக்கப்பட்டதாகவும் அந்த வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் கங்கொடவில மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.


# இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

(2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் 17 வது பிரிவின் கீழான பொது அறிவிப்பு)

## உத்தேசிக்கப்பட்டுள்ள 2வது மின்சாரக் கட்டண திருத்தம் பொது ஆலோசனை கேட்டல் - 2024

2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 30 ஆவது பிரிவின் கீழ், உரிமதாரரால் (இலங்கை மின்சாரசபை) 2024 ஆம் ஆண்டிற்கான 2வது உத்தேசிக்கப்பட்ட மின்சாரக் கட்டணத்தைப் பற்றிய பொது ஆலோசனை கேட்டலை நடத்துவதற்கான முடிவை இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு இதன் மூலம் அறிவிக்கிறது.

இலங்கை மின்சார சபை, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட மின்சாரக் கட்டணத் திருத்த முன்மொழிவு மற்றும், அது தொடர்பான ஆலோசனை அறிக்கைகளை www.pucsl.gov.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

**முன்மொழியப்பட்டுள்ள 2வது மின்சார கட்டண திருத்தம் தொடர்பாக பொதுமக்களின் எழுத்துப்பூர்வ கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் 2024 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 08 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். இந்தக் கட்டணத் திருத்தம் தொடர்பான வாய்மூலக் கருத்துக்களை தெரிவிக்கும் அமர்வு 2024 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 09 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும்.**

2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் 17 வது பிரிவின் கீழ் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் இந்த பொது ஆலோசனை கேட்டல் நடத்தப்படுகிறது.

பொதுமக்களின் ஆலோசனைக் கேட்டல் முடிந்த பின்னர் ஆணைக்குழு தனது இறுதி முடிவை ஜுலை மாதம் 15ஆம் திகதியன்று அறிவிக்கும்.

முன்மொழியப்பட்ட கட்டணத் திருத்தம் தொடர்பான எழுத்துப்பூர்வ கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை பின்வரும் முகவரிக்கு அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய முறைகள் மூலம் சமர்ப்பிக்கலாம்.

“உத்தேசிக்கப்பட்டுள்ள 2வது மின்சாரக் கட்டண திருத்தம் 2024, பொது ஆலோகனை கேட்டல்”
தலைவர்
இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு,
6 வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இல.28, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03.

**பெக்ஸ்:** (011) 2392641 **இணையதளம்:** www.pucsl.gov.lk
**மின்னஞ்சல்:** consultation@pucsl.gov.lk முகநூல்: www.facebook.com/pucsl

**மேலதிக தகவல்களுக்கும் தெளிவுபடுத்துவதற்கும் திரு.ஹசங்க கம்புருகமுவ அவர்களை (011) 2392607/8 தொடர்பு கொள்ளவும்.**

தலைவர்
இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு
18.06.2024


## விசாரணை செய்யும் அதிகாரிகளின்...

இவ்வாறு அவர்களது தொழிலை உறுதிப்படுத்தும் அட்டையை கோருவதன் மூலம் குற்றச்செயல்களை கண்டறிந்து தடுக்க முடியுமெனவும், பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது. இது தொடர்பாக பொதுமக்களுக்கு அவசர பாதுகாப்பு எச்சரிக்கையை விடுத்துள்ள பொலிஸ் தலைமையகம் இவ்வாறு கூறியது.

மருதானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடவாமுல்ல சந்தியில் பொலிஸ் உத்தியோகத்தர்களென கூறிக்கொண்டு மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர், சுமார் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசி மற்றும் பணப்பையை திருடிக் கொண்டு தப்பிச் சென்றதுடன், இப்பொருட்கள் மீள பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் 35 ஆயிரம் ரூபாயுடன் மருதானை பொலிஸ் நிலையத்துக்கு வருமாறும் இவர்கள் கூறி விட்டுச் சென்றமை தொடர்பாக தமக்கு முறைப்பாடு கிடைத்ததாகவும், பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

## 'யுக்திய' விசேட நடவடிக்கையால்

புனர்வாழ்வளிக்கப்பட்ட போதைப் பொருள் பாவனையாளர்கள், அவர்களது குடும்பங்களுடன் ஒன்றிணைக்கும் நிகழ்வு பத்தரமுல்லையில் நடைபெற்ற போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

## தமிழரசுக் கட்சி தொடர்பான...

இரண்டாம் குறுக்குதெருவிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் (16) நடைபெற்றது. இதன் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே. அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடா்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"எதிராளிகள் அழைத்துள்ள ஆட்சேபனைகள் தொடர்பாக வழக்காளி தனது நிலைப்பாட்டை தெரியப்படுத்த வேண்டுமென்ற காரணத்துக்காகவே கடந்த தவணை வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆனால் இந்த வழக்கில் வழக்கை முடிவுறுத்த வேண்டுமென்ற நோக்கத்துக்காக நாம் குறுகிய தினத்தை கேட்டிருக்கிறோம்.

அன்றையதினம் வழக்காளி நீதிமன்றில் தெரிவித்த விடயத்துடன், எதிராளிகள் ஏழு பேரும் அழைத்திருக்கின்ற ஆட்சேபனைகளின் அடிப்படையில் மூன்று வித்தியாசமான நிலைப்பாடுகள் எடுக்கப்பட்டன.

குறிப்பாக, நானும் கட்சியின் பொதுச் செயலாளரும் நிர்வாக செயலாளரும் ஒரு நிலைப்பாட்டையும், மாவை சேனாதிராஜா மற்றும் யோகேஸ்வரன் ஆகியோர் வேறொரு நிலைப்பாட்டையும் சிறிதரன், குகதாசன் ஆகியோர் இன்னொரு நிலைப்பாட்டையும் எடுத்திருப்பது சுட்டிக்காட்டப்பட்டது.

## விவசாயிகளுக்கு நன்றி செலுத்தவே...

வேண்டியவர்களுக்கு அடுத்த இரு மாதங்களில் காணிகளை பெற்றுக்கொடுக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளேன். மாவட்ட செயலாளர்கள், நிள அளவையியல் திணைக்கள அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட அனைவரையும் ஒன்றிணைத்து இந்த பணிகளை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும். நாட்டில் 75 வருடங்களாக மக்களுக்கு காணி உறுதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. தற்போது சட்டபூர்வமாகவே அந்த உறுதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கிறோம். இது ஒரு வகையான புரட்சியாகும். நாடென்ற வகையில் அனைவருக்கும் நெருக்கடியான காலம் உருவாகியது. அதனால் அனைவருக்கும் நட்டம் ஏற்பட்டது. இப்போது நாடு நல்ல நிலையை அடையும் வேளையில் அதன் பலன்களும் மக்களை சென்றடைய வேண்டும். குறிப்பாக, நாட்டுக்கு சோறு தரும் விவசாய மக்களுக்கு அவை நிச்சயமாக கிடைக்க வேண்டும். விவசாயிகளுக்கு காணி உறுதிகளை வழங்கியது போலவே, கொழும்பு மக்களுக்கு அடுக்கு மாடி குடியிருப்புகளின் வீட்டு உரிமைகள் வழங்கப்படும். இதனால் 2 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு வீட்டு உரிமை கிடைக்கும். 1944 களில் சீ.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கரவின் யோசனைக்கமைய அரச மந்திரிகள் சபையினூடாக கல்வி அறிவை பகிர்ந்தளித்தோம். சுதந்திர கல்வியால் அந்த அறிவு அனைவருக்கும் பகிரப்பட்டது. தற்போதைய அரசாங்கம் அறிவுடன் உரிமையையும் பெற்றுத்தருகிறது.

## அநுராதபுரத்திலிருந்து மிஹிந்தலை

அமைச்சர் உள்ளிட்ட அதிதிகளின் தலைமையில் நடைபெற்றது. அநுராதபுரம் ரயில் நிலையத்தில் நடைபெற்ற இதற்கான அங்குரார்ப்பண நிகழ்வின் பின்னர் விசேட நினைவுப்பலகையை திரைநீக்கம் செய்த அமைச்சர் மற்றும் அதிதிகள், அநுராதபுரத்திலிருந்து மிஹிந்தலைவரையான புதிய ரயில் பாதையின் அங்குரார்ப்பண பயணத்தில் இணைந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன,

“வரலாற்றுச் சிறப்புமிக்க ரஜரட்டை நகருக்கு பொசன் பண்டிகையுடன் விசேட பெறுமதி சேர்ப்பதற்கு இது ஒரு சந்தர்ப்பமாகும். முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் ஆட்சிக் காலத்தில் 1993ஆம் ஆண்டு மே மாதம் 28ஆம் திகதி மிஹிந்தலை சந்தியிலிருந்து மிஹிந்தலை வரையான ரயில் பாதை திறக்கப்பட்ட போதிலும், வினைத்திறனுடனும் திறமையாகவும் பயன்படுத்துவதற்கு நாட்டினால் முடியவில்லை. பொசன் காலத்தில் பயன்படுத்துவதற்காக இந்த வீதியானது குறுகிய காலத்துக்கு மட்டுமே துப்புரவு செய்யப்பட்டு வருடத்துக் ஒரு முறை மட்டுமே பயன்படுத்தப்பட்டது. இந்நிலையை மாற்றும் வகையில் பாரிய அநுராதபுர நகர திட்டம் எனும் விசேட திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அநுராதபுரம் ஊடாக மிஹிந்தலைக்கும் மிஹிந்தலையிலிருந்து இருந்து மாகாணத்தில் உள்ள பத்து மாவட்டங்களுக்கு பொருட்களை விநியோகிப்பதற்கான பிரதான மையமாக மிஹிந்தலையை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். இப்பகுதிகளில் விவசாயப் பொருட்களை பரிமாறிக் கொள்வதற்கான மொத்த விற்பனை மையமாக இந்தப் பகுதியை பயன்படுத்துவதும் கருத்தாக்கத்தில் அடங்கும். மிஹிந்தலை பல்கலைக்கழகம் மற்றும் அதன் கல்விமான்கள், பிரதேச மக்கள் பிரதிநிதிகள் இணைந்து தயாரித்த திட்டத்தின் பிரகாரம், தற்போது தேவையான காணி விடுவிக்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம் முழு நாட்டின் வரலாற்றில் அநுராதபுரம் மிகவும் அபிவிருத்தியடைந்த மத்திய நகரமாக மாறியது போன்று அநுராதபுரமும் அபிவிருத்தியடைந்த பொருளாதார மையமாக மாறும் என நம்புகின்றோம். நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக புனரமைக்கப்படாமல் இருந்த வடக்கு ரயில் பாதையை மணிக்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் செல்லும் பாதையாக மாற்றியமைக்கும் பணியை பொறுப்பான அமைச்சராக என்னால் ஆரம்பித்து வைக்க முடிந்தது. அதற்காக இந்திய கடன் திட்டத்தின் கீழ் 3000 கோடி ரூபாய்க்கு மேல் கடனுதவி அளிக்கப்பட்டது.

ஆனால், இதற்கு முன்பு அந்தப் பொறுப்பில் இருந்த ஒவ்வொரு அமைச்சரும், ரயில் பாதையை சீரமைப்பதற்காக மூடுவது பொது மக்களின் எதிர்ப்பை ஏற்படுத்தும் என்று கருதி, திட்டத்தை தொடங்கத் தயங்கினார்கள்.

ஆனால் நாட்டின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு, சாதாரண மக்களின் போக்குவரத்தை எளிதாக்கும் வகையில், அநுராதபுரத்திலிருந்து ஓமந்தை வரையிலான வடக்கு ரயில்வேயின் மறுசீரமைப்பை ஆரம்பிக்க தீர்மானித்தோம்.

## உடனடியாக எரிபொருள்...

முறையாக மேற்கொள்ளப்பட வேண்டுமென, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்தார். சிங்கப்பூர் வர்த்தக குறியீட்டின்படி சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படுவதுடன், அங்கு தீர்மானிக்கப்படும் விலைக்கமைய இலங்கையில் எரிபொருள் விநியோகிக்கப்பட வேண்டுமெனவும், அவர் குறிப்பிட்டார்.

## கொழும்பு, மாளிகாவத்தையில்...

எந்தவித உயிர் ஆபத்தும் ஏற்படவில்லையெனவும், பொலிஸார் தெரிவித்தனர்.

மாளிகாவத்தை ஜயந்த வீரசேகர மாவத்தையிலுள்ள விழா மண்டபமொன்றிலேயே இந்த தீ விபத்து இடம்பெற்றதாகவும், மின்னொழுக்கு காரணமாகவே இந்த தீ விபத்து ஏற்பட்டதாகவும், பொலிஸார் கூறினர்.

# காத்தான்குடியில் பெருநாள் திடல் தொழுகை




புனித ஹஜ் பெருநாளையொட்டி காத்தான்குடி கடற்கரையிலும் ஆற்றங்கரையிலும் பெருநாள் திடல் தொழுகை(17) இடம்பெற்றது. காத்தான்குடி கடற்கரையில் இஸ்லாமிக் சென்டர் ஏற்பாட்டில் நடைபெற்ற ஹஜ் பெருநாள் தொழுகையையும் பெருநாள் குத்பா பிரசங்கத்தையும் அஷ்ஷெய்க் ஹாலிதீன் ஹாபிழ் நடத்தினார் . அதேபோன்று காத்தான்குடி ஆற்றங் கரையிலும் பெருநாள் தொழுகை இடம்பெற்றது. இங்கு தொழுகையினையும் பெருநாள் குத்பா பிரசங்கத்தையும் அஷ்ஷெய்க் சிராஜ் மௌலவி நடத்தினார். **புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



புனித ஹஜ் பெருநாளை கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மிகவும் அமைதியான முறையில் கொண்டாடினர். மாவட்டத்தின் பிரதான பெருநாள் தொழுகை காத்தான்குடி நகர சபை மைதானத்தில் இடம்பெற்றது. சுமார் 5000ற்கும் அதிகமான ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டனர். அஷ்ஷெய்க் எம்.ஏ.எம்.சிறார் பலாஹி பெருநாள் தொழுகையையும் குத்பாவையும் நடாத்தினார். **மட்டக்களப்பு குறூப் நிருபர்**

## கிண்ணியாவில் ஹஜ் பெருநாள் தொழுகை



ஹஜ் பெருநாள் தொழுகை கிண்ணியா மத்திய கல்லூரி மைதானத்திலும் மக்களின் பங்கேற்புடன் இடம் பெற்றது. முஸ்லிம்களின் தியாகத்திருநாளாம் ஈதுல் அழ்ஹா புனித ஹஜ் பெருநாள் தொழுகை வெகு சிறப்பாக இடம் பெற்றது. கிண்ணியா ஜெம்மியதுல் உலமா சபை ஏற்பாட்டில் இடம் பெற்ற இத் தொழுகைக்கு அதிகளவான மக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. தொழுகையையும் குத்பா பிரசங்கத்தினையும் அஸ்ஸெய்ஹ் மௌலவி முஹம்மது பர்சூக் நடாத்திவைத்தார். **கிண்ணியா மத்திய நிருபர்**



சின்னப் பாலமுனை அல் ஹிக்மா வித்தியாலய திறந்த திடலில் ஆண், பெண் இரு பாலருக்கும் அம்பாறை மாவட்ட ஜம்மியத்துல் உலாமாவின் தலைவர் மௌலவி ஐ.எல்.எம்.ஹாசீம் (மதனி) நடாத்திய ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை மற்றும் குத்பா பிரசாரத்தின் போது எடுக்கப்பட்ட படம். **படம்: ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**

## அம்பாறையில் பெருநாள்

**ஒலுவில் விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் நேற்று திங்கட்கிழமை (17) 'ஈதுல் அழ்ஹா' புனித ஹஜ்ஜுப் பெருநாளை மிகவும் மகிழ்ச்சியாகவும், அமைதியாகவும் கொண்டாடினர்.

பொத்துவில், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, இறக்காமம், பாலமுனை, ஒலுவில், நிந்தவூர், சாய்ந்தமருது, சம்மாந்துறை, மருதமுனை, கல்முனை ஆகிய பிரதேசங்களில் திறந்தவெளிகளிலும், மஸ்ஜித்துக்களிலும் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகைகள் நடைபெற்றது. இதில் ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களும் கலந்து கொண்டனர். அதிகாலை வேளையிலேயே பெருநாள் தொழுகை நடைபெற்றன.

ஹஜ்ஜின் மகத்துவம், கூட்டு உழ்ஹிய்யா, பெருநாளின் சிறப்புகள், சமூக ஒற்றுமை, இன நல்லுறவு, சகவாழ்வும் போன்ற கருப்பொருளில் குத்பா பேருரைகள் அமைந்திருந்ததோடு நாட்டில் அமைதி பெற வேண்டுமெனவும் மற்றும் பலஸ்தீன் மக்களுக்காக விசேட துஆ பிராத்தனைகளும் நிகழ்த்தப்பட்டது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

ஞாயிறு 2024.06.16

உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 5506
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.32,198,040.00
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 3 5 8 7 0 9

**அத சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 081
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 8 7 0 9

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம் 3748
சீட்டிழுப்பு திகதி 2024.06.16
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.61,500,697.96
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 26 31 34 36
விசேட எழுத்து O
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 92320

**Mega POWER**
சீட்டிழுப்பு இலக்கம் 1854
2024.06.16
26294
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.436,220,986.00
ஆங்கில எழுத்து X
சுப்பர் இலக்கம் 03
வெற்றி இலக்கங்கள் 04 07 14 78
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**Lucky 7 VIP**
திகதி 2024.06.16
சீட்டிழுப்பு இலக்கம் 0332
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 0 2 3 5 8 3
L7 எழுத்து L
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 31,406,153.12

**ராசி சுப பலன்**
திகதி 2024.06.16
சீட்டிழுப்பு இலக்கம் 815
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.3,120,286.24
வெற்றி இலக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 19 23 29 44
தனயோக இலக்கம் 49144
நாளுக்கான விதி எண் 10

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் 1536
2024.06.16
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 96,683,552.00
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 20 27 40 41
விசேட எழுத்து Q
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 73180


USAID FROM THE AMERICAN PEOPLE

SAFE Foundation

" මනු දම් රූ " சித்திரப் போட்டி - 2024

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவு விழா மற்றும் ஜூலை 30 ஆம் திகதி கொண்டாடப்படும் ஆட்கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினத்தை முன்னிட்டு கல்வி அமைச்சின் அனுமதியோடு, கட்புல மற்றும் அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்தின் கட்புல கலைகள் பீடத்தின் ஆலோசனையின் பேரில், சேவ் பவுண்டேசன் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் சர்வதேச ரீதியில் வியாபித்துள்ள குற்றச்செயலொன்றாகக் கருதப்படும் மனித வியாபாரம் தொடர்பில் பொது மக்களை அறிவூட்டும் நோக்கில் நாடளாவிய மட்டத்தில் நடத்தப்படும் "சித்திரப் போட்டி".

தலைப்பு

"மனித வியாபாரத்திற்கு ஆளாகமல் இருப்போம்"

முதலாம் இடம் ரூ. 50,000/=
இரண்டாம் இடம் ரூ. 40,000/=
மூன்றாம் இடம் ரூ. 30,000/=

ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி
2024 ஜூன் மாதம் 30 ஆம் திகதி

வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்கள், பணப் பரிசுகள் மற்றும் ஆறுதல் பரிசுகள்

- பின்வரும் மூன்று பிரிவுகளின் கீழ் போட்டிகள் நடைபெறும்.
  - 1 ஆவது பிரிவு - தரம் 10 - 11
  - 2 ஆவது பிரிவு - தரம் 12 - 13 } அரசாங்க பாடசாலைகள், அரச அங்கீகாரம்பெற்ற தனியார் பாடசாலைகள், சர்வதேச தனியார் பாடசாலைகள், பிரிவேனாக்கள்
  - 3 ஆவது பிரிவு - பல்கலைக்கழக மாணவ மாணவிகள்
- சகல ஆக்கங்களும் தலைப்புக்கு ஏற்ற வகையில் A3 அளவிலான திடமான தாளில் கையில் படாத எந்தவொரு வர்ண மூலத்தையும் பயன்படுத்தி வரைய முடியும்.
- ஒரு போட்டியாளர் ஒரு சித்திரத்தை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும்.
- சித்திரத்தின் பின்புறத்தில் பூரணப்படுத்திய விண்ணப்பத்தில் அதிபர் / பீடாதிபதியின் கையொப்பத்துடன் பதவி முத்திரையை இட வேண்டியது கட்டாயமாகும். ஆக்கத்திற்கான தங்களது கருத்தை தனியான ஒரு தாளில் தங்களது கையெழுத்தில் குறிப்பிட்டு அதனோடு இணைத்து அனுப்புதல் வேண்டும் (50 சொற்களுக்கு குறையாமல்)
- போட்டி தொடர்பில் ஏற்பாட்டுக்குழுவின் / நடுவர்களின் முடிவு இறுதியானது.

மற்றும் மேலதிக விபரங்களுக்கு பின்வரும் QR குறியீட்டை அல்லது vw.immigration.gov.lk இணையத்தளத்தைப் பயன்படுத்தவும்

ஆக்கங்களை அனுப்ப வேண்டிய / ஒப்படைக்க வேண்டிய முகவரி

"மனு தம் ரூ" சித்திரப் போட்டி 2024
ஆட்கடத்தலுக்கு எதிரான தேசிய வள நிலையம்
06 ஆம் மாடி, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,
"சுஹுருபாயா", ஸ்ரீ சுபூத்திபுர வீதி,
பத்தரமுல்லை.



# HNB FINANCE PLC
## பெறுமதிமிக்க ஏல விற்பனை

120 டீசல் மற்றும் பெட்ரோல் மோட்டார் வாகனங்கள், முச்சங்கர வண்டிகளின் பாரிய ஏல விற்பனை2024 ஜூன் 25 அன்று செவ்வாக்கிழமை மு.ப. 10.00

**HNB Finance PLC** பிலியந்தலையில் இடம்பெறும் -
இல. 94, முத்தெட்டுவ வத்த, ஹதிகம, பிலியந்தலை.

2024 ஜூன் 22, 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் மு.ப. 9.00 -– பி.ப. 4.00 இற்கு இடையெ பிலியந்தலை மற்றும் அநுராதபுரம் கூடத்தில் பரீட்சிக்கலாம்

பிலியந்தலை கூடம் - இல. 94, முத்தெட்டுவ வத்த, ஹதிகம, பிலியந்தலை. 0710 292 036 (வசந்த)
அநுராதபுர கூடம் - இல. 562/127, டி.எஸ். சேனநாயக்க மாவத்தை, அநுராதபுரம். 0710 292 198 (சனத்)

தலைமை அலுவலக இல. 0710 294 245 (தனஞ்சய)

| VEHICE NO. | MODEL | YEAR |
|---|---|---|
| | **PILIYANDALA YARD** | |
| | **MOTOR CAR** | |
| 19-6XXX | MAZDA - MISTER LX | 1995 |
| 300-4XXX | Audi A-3 1.8 TFSI1997 | 1997 |
| UP HV-3XXX | RENAULT - LAGUNA | 2003 |
| CP JI-7XXX | MARUTI - ZEN VXI | 2004 |
| WP CAP-1XXX | BMW- BMW I3 | 2014 |
| NW CAT-5XXX | MG6 - MG6 | 2014 |
| | **MOTOR LORRY & TIPPER** | |
| CP PR-3XXX | MAHINDRA - MAXXIMO | 2011 |
| CP PS-1XXX | MAHINDRA - MAXXIMO | 2011 |
| NC PT-6XXX | TATA - ACE | 2012 |
| NW PX-2XXX | TATA - ACE EX 2 | 2014 |
| SG PX-4XXX | MAHINDRA -MAXXIMO PLUS | 2014 |
| SP LG-4XXX | LANKA ASHOK LEYLAND - TAURUS 2516 TIPPER | 2009 |
| | **THREE WHEELERS** | |
| WP JY-6XXX | BAJAJ - AUTO RE 2 STORKE | 2005 |
| WP QC-1XXX | BAJAJ - AUTO RE 2 STORKE | 2005 |
| WP QA-9XXX | BAJAJ - AUTO RE 2 STORKE | 2005 |
| WP QB-3XXX | BAJAJ - AUTO RE 2 STORKE | 2005 |
| WP QF-1XXX | BAJAJ - AUTO RE 2 STORKE | 2006 |
| SG QG-2XXX | BAJAJ - AUTO RE 2 STORKE | 2006 |
| WP QG-2XXX | BAJAJ - AUTO RE 2 STORKE | 2006 |
| SG QL-3XXX | BAJAJ - AUTO AR4S | 2007 |
| WP QM-5XXX | BAJAJ - AUTO AR4S | 2007 |
| WP QK-7XXX | BAJAJ - AUTO AR4S | 2007 |
| WP QJ-4XXX | BAJAJ - AUTO RE 2 STORKE | 2007 |
| WP QL-1XXX | BAJAJ - AUTO AR4S | 2007 |
| CP QK-6XXX | BAJAJ - AUTO AR4S | 2007 |
| WP QK-2XXX | BAJAJ - AUTO AR4S | 2007 |
| SG QM-2XXX | BAJAJ - AUTO AR4S | 2007 |
| NW QM - 5XXX | BAJAJ - AUTO AR4S | 2007 |
| CP QP-0XXX | BAJAJ - AUTO AR4S | 2008 |
| SG QP-2XXX | BAJAJ - AUTO AR4S | 2008 |
| UP QQ-1XXX | BAJAJ - AUTO AR4S | 2008 |
| WP QO-9XXX | BAJAJ - AUTO AR4S | 2008 |
| CP QQ-3XXX | BAJAJ - AUTO AR4S | 2008 |
| WP QP-3XXX | BAJAJ - AUTO AR4S | 2008 |
| WP QU-7XXX | BAJAJ - BAJAJ 4 S | 2009 |
| SG QV-1XXX | BAJAJ - BAJAJ 4 S | 2009 |
| WP QV-3XXX | BAJAJ - BAJAJ 4 S | 2009 |
| NW QS-2XXX | BAJAJ - BAJAJ 4 S | 2009 |
| NW QU-2XXX | BAJAJ - BAJAJ 4 S | 2009 |
| WP QU-0XXX | BAJAJ - BAJAJ 4 S | 2009 |
| WP QV-5XXX | BAJAJ - BAJAJ 4 S | 2009 |
| WP QT-5XXX | BAJAJ - BAJAJ 4 S | 2009 |
| NW QV-8XXX | BAJAJ - BAJAJ 4 S | 2009 |
| WP QZ-9XXX | BAJAJ - AR4S-UG | 2010 |
| WP QX-8XXX | BAJAJ - AR4S-UG | 2010 |
| SG YB-0XXX | BAJAJ - AR4S-UG | 2010 |
| WP YD-2XXX | BAJAJ - AR4S-UG | 2010 |
| WP YF-2XXX | BAJAJ - RE 205 | 2010 |
| SG YB-7XXX | BAJAJ - AR4S-UG | 2010 |
| SG YF-0XXX | BAJAJ - RE 205 | 2010 |
| NW YD-8XXX | BAJAJ - AR4S-UG | 2010 |
| WP YB-1XXX | BAJAJ - AR4S-UG | 2010 |
| WP YO-6XXX | BAJAJ - RE 205 | 2011 |
| WP YP-3XXX | BAJAJ - RE 205 | 2011 |
| WP YJ-9XXX | BAJAJ - RE 205 | 2011 |
| WP AAD-0XXX | BAJAJ - RE 205 | 2012 |
| WP AAA-9XXX | BAJAJ - RE 205 | 2012 |
| WP YW-6XXX | PIAGGIO - APE | 2012 |
| WP AAI-1XXX | BAJAJ - RE 205 | 2013 |
| WP AAL-5XXX | BAJAJ - RE 205 | 2013 |
| CP AAH-5XXX | BAJAJ - RE205 | 2013 |
| WP AAL-6XXX | PIAGGIO - APE | 2013 |
| WP AAG-5XXX | BAJAJ - RE 205 | 2013 |
| SP AAN-3XXX | BAJAJ - RE | 2013 |
| WP AAR-1XXX | BAJAJ - RE | 2014 |
| CP AAZ-7XXX | BAJAJ - RE | 2015 |
| WP ABR-3XXX | BAJAJ - RE | 2018 |
| | **MOTOR CYCLE** | |
| SP BHC-5XXX | T V S - XL SUPPER HAVY DUTY | 2018 |
| NP BID-0XXX | HERO - HF DELUXE CAST SELF | 2019 |
| NP BIE-6XXX | HERO - HF DELUXE CAST SELF | 2019 |
| SP BIW-1XXX | APRILLA - SR-125 | 2019 |
| | **MOTOR JEEP** | |
| NC KH-9XXX | MICRO - KYRON 200XDI | 2009 |
| | **ANURDHAPURA YARD** | |
| | **MOTOR LORRY, TIPPER & VAN** | |
| NC PR-4XXX | TATA - ACE | 2011 |
| NW PX-7XXX | TATA - ACE EX 2 | 2014 |
| NW DAB-1XXX | MAHINDRA - MAXXIMO PLUS | 2015 |
| NC DAC-3XXX | TATA - SUPER ACE | 2015 |
| NW DAC-1XXX | TATA - ACE HT2 | 2015 |
| NW DAE-4XXX | TATA BENZ - ACE HT 2 | 2016 |
| CP LM-7XXX | LANKA ASHOK LEYLAND - 1616 | 2017 |
| 58-9XXX | NISSAN - VANTEE (VUGJC22) | 1991 |
| | **THREE WHEELERS** | |
| NC JS-0XXX | BAJAJ - AUTO RE 2 STORKE | 2004 |
| NW QG-7XXX | BAJAJ - AUTO RE 2 STORKE | 2006 |
| CP QI-9XXX | BAJAJ - AUTO RE 2 STORKE | 2006 |
| NW QG-2XXX | BAJAJ - AUTO RE 2 STORKE | 2006 |
| CP QG-8XXX | BAJAJ - AUTO RE 2 STORKE | 2006 |
| NW QD-8XXX | BAJAJ - AUTO RE 2 STORKE | 2006 |
| NW QH-2XXX | BAJAJ - AUTO RE 2 STORKE | 2006 |
| NW QM-3XXX | BAJAJ - AUTO AR4S | 2007 |
| CP QM-4XXX | BAJAJ - AUTO AR4S | 2007 |
| NW QK-4XXX | BAJAJ - AUTO AR4S | 2007 |
| NC QQ-5XXX | BAJAJ - AUTO AR4S | 2008 |
| NW QR-0XXX | BAJAJ - AUTO AR4S | 2008 |
| NW QP-8XXX | BAJAJ - AUTO AR4S | 2008 |
| NW QT-5XXX | BAJAJ - BAJAJ 4 S | 2009 |
| NW QV-1XXX | BAJAJ - BAJAJ 4 S | 2009 |
| CP QU-4XXX | BAJAJ - BAJAJ 4 S | 2009 |
| CP QU-7XXX | BAJAJ - BAJAJ 4 S | 2009 |
| CP QS-3XXX | BAJAJ - BAJAJ 4 S | 2009 |
| CP QS-9XXX | BAJAJ - BAJAJ 4 S | 2009 |
| NW QW-1XXX | BAJAJ - AR4S-UG | 2009 |
| CP QX-9XXX | BAJAJ - AR4S-UG | 2010 |
| NW YQ-1XXX | BAJAJ - RE 205 | 2011 |
| NW YO-6XXX | BAJAJ - RE 205 | 2011 |
| NW YN-1XXX | BAJAJ - RE 205 | 2011 |
| CP YK-4XXX | BAJAJ - RE 205 | 2011 |
| NW AAA-6XXX | BAJAJ - RE 205 | 2012 |
| NW YX-9XXX | BAJAJ - RE 205 | 2012 |
| CP AAU-0XXX | BAJAJ - RE | 2014 |
| EP ABE-3XXX | BAJAJ - RE | 2015 |
| EP ABG-2XXX | BAJAJ - RE | 2015 |
| CP ABP-9XXX | BAJAJ - RE | 2017 |
| CP ABU-7XXX | BAJAJ - RE | 2020 |
| | **MOTOR CYCLE** | |
| NC BFQ-6XXXX | MAHINDRA-GUSTRO | 2017 |
| NW BHZ-3XXX | HERO - MAESTRO EDGE | 2018 |
| NC BGP 0XXX | MAHINDRA - GUSTRO | 2018 |
| NC BIE-7XXX | YAMAHA- RAY-ZR | 2019 |
| NW BIF-0XXX | HONDA - DIO SCV 110 | 2019 |
| NC BIV-2XXX | T V S - APACHE 160 4V | 2019 |
| NC BJB-3XXX | T V S - XL 100 CC | 2019 |
| NC BIW-0XXX | T V S - XL 100 | 2019 |

**HNB Finance PLC** நிறுவனத்திற்கு அறவிடப்பட வேண்டிய கடன் தொகையை அறவிடுவதற்காக அவர்களின் கடனாளிகள் சார்பில் மேலுள்ள வாகன ஏல விற்பனை நடத்தப்படுகிறது.

**விற்பனை நிபந்தனைகள்:**

- உள் நுழைவு: ஏல விற்பனை தினத்தில் ஒருவருக்கு மீளளிக்கப்படாத ரூபா 2,000 அனுமதிச் சீட்டு மற்றும் ரூபா 10,000 மீளளிக்கப்படும் வைப்புத் தொகை மூலம்.
- கொடுப்பனவு: சுத்தியல் வைக்கப்பட்ட பின் ஆரம்பத்தில் மீளளிக்கப்படாத 25% ரொக்கப் பணம் வைப்புச் செய்ய வேண்டும் என்பதோடு எஞ்சிய 75% தொகையை 2024 ஜூன் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணி தாமதிக்காது இல. 168, நாவல வீதி, நுகேகொடை அல்லது எந்த ஒரு **HNB Finance PLC** கிளையிலும் செலுத்தி அகற்றிக்கொள்ளல் வேண்டும்.
- எந்த ஒரு வாகனம்/ வாகனங்களை முன் அறிவித்தல் இன்றி ஏல விற்பனையில் இருந்து அகற்றிக்கொள்ளும் உரிமை முகாமைத்துவம் வசமானது.
- ஏலதாரரின் முடிவு இறுதி முடிவாகும்.

ANA AUCTIONEER Black Tie Service with True Aloha!
ஏ என் அல்கெவத்த ஒக்ஷனிய(ர்)
**A N ALGEWATHTHA AUCTIONEER**
No.333, Janajayacity, Rajagiriya.
m. +94 71 790 5 790
e. algewaththaauctioneer@gmail.com
www.lankaauction.lk

# கிழக்கின் குரல்



## சுகாதார நிலையத்தை திறந்து வைத்த செந்தில் தொண்டமான்!



மூதூர் பெரியபாலத்தில் 16 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கிராமோதய சுகாதார நிலையத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திறந்து வைத்ததுடன், மக்கள் பாவனைக்காக கையளித்தார். இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அதுகோரல உட்பட அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## மருதமுனை கடற்கரை திறந்த வெளியில் ஹஜ்ஜூப் பெருநாள் தொழுகை

**பெரியநீலாவணை விசேட, மருதமுனை தினகரன் விசேட, பெரியநீலாவணை தினகரன் நிருபர்கள்**



மருதமுனை கடற்கரை திறந்த வெளியில் புனித ஈதுல் அல்ஹா ஹஜ்ஜூப் பெருநாள் தொழுகை நேற்று (17) காலை 6:15 மணிக்கு நடைபெற்றது.

இம்முறை கடற்கரை திறந்தவெளியில் இமாம் ஜமாத்தாக நடைபெற்ற புனித ஹஜ்ஜூப் பெருநாள் தொழுகையில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

பெருநாள் தொழுகை மற்றும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற குத்பா பிரசங்கத்தையும் மௌலவி அஷ்ஷெய்க் கலாநிதி எம்.எல். முபாறக் (மதனி) நடாத்தினார். ஆண்களுக்கும், பெண்களுக்கும் வெவ்வேறாக இட வசதிகள் ஒதுக்கப்பட்டு தொழுகை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பலஸ்தீன் மண்ணில் அப்பாவி சிறுவர்கள் படுகொலை செய்யப்படுவதை கண்டித்து இந்த ஹஜ்ஜூப்பெருநாள் தினத்தில் அனைவரும் பிரார்த்தனை செய்ய வேண்டும் என இங்கு குத்பா பிரசங்கத்தை நிகழ்த்திய மௌலவி பொதுமக்களை கேட்டுக் கொண்டார்.

## கல்முனையில் ஹஜ் பெருநாள் தொழுகை



புனித ஹஜ் பெருநாள் நபிவழித் திடல் தொழுகையும் குத்பா பிரசங்கமும் கல்முனை ஹுதா ஜும்ஆ பள்ளிவாசல் மற்றும் முஹம்மதியா ஜும்ஆ பள்ளிவாசல் களின் ஏற்பாட்டில் (17) நடைபெற்றது . இங்கு பெருநாள் தொழுகையையும் குத்பா பிரசங்கத்தையும் அஷ்ஷேய்க் ஆஷிக் இஸ்மாயில் (ஸலபி) நிகழ்த்தினார்.

கல்முனை மத்திய தினகரன் நிருபர்

## அக்கரைப்பற்றில் இம்பெற்ற ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை





**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று நூரானியா ஜும்ஆ பள்ளிவாசலில் திங்கட்கிழமை (17) நடைபெற்ற புனித ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை மற்றும் குத்பா பேருரை அக்கரைப்பற்று அபூபக்கர் சித்திக் இஸ்லாமிய அரபுக்கல்லூரி அதிபர் மௌலவி எம்.எம். கலாமுள் ளாஹ் (றஷாதி) அவர்களினால் நடாத்தப்பட்டது.

## காட்டுப் பாதை திறப்பதில் தீர்க்கமான தீர்வு தரவேண்டும்!

### ஜனாதிபதி, ஆளுநரிடம் கிழக்கிலுள்ள இந்து அமைப்புகள் கூட்டாக கோரிக்கை!



**காரைதீவு குறூப் நிருபர்**

கதிர்காமத்திற்கான காட்டுப் பாதை திறப்பதில் தீர்க்கமான தீர்வு தரவேண்டும் என்று ஜனாதிபதி மற்றும் கிழக்கு ஆளுநரிடம் கிழக்கிலுள்ள இந்து அமைப்புகள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளன.

திருகோணமலை மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட இந்து அமைப்புகள், சமூக அமைப்புகள் மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளன.

அத்தோடு நாட்குறைப்பு தொடர்பில் தமது கண்டனங்களையும் தெரிவித்து வருகின்றன. சந்நிதி கதிர்காமம் பாதயாத்திரை குழுவினரும் காட்டுப் பாதை திறப்பதில் பாரபட்சம் பாகுபாடு இல்லாமல் பத்து நாட்களுக்கு முன்னரே திறக்க வேண்டும் என்று கோரியுள்ளனர்.

இதேவேளை ஆலையடிவேம்பு பிரதேச அனைத்து இந்து ஆலயங்களும் ஒன்றிணைந்து கதிர்காம காட்டுப்பாதை திறக்கும் திகதியில் மாற்றம் ஏற்பட்டமையை கண்டித்து இன்று (18) செவ்வாக்கிழமை காலை 10.00 மணியளவில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர், கிழக்கு மாகாண ஆளுநர், நாட்டின் ஜனாதிபதி மற்றும் இதனுடன் சம்பந்தப்பட்ட பலருக்கும் மகஜர் கையளிக்க தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த தீர்மானம் ஆலையடிவேம்பு பிரதேச அனைத்து இந்து ஆலயங்களும் ஒன்றிணைந்து இடம்பெற்ற (16) சந்திப்பில் எடுக்கப்பட்டுள்ளது. கதிர்காமம் ஆலயத்தின் ஆடிவேல் உற்சவம் எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறவுள்ள நிலையில், ஆலயம் நோக்கிய பாதயாத்திரையினை மக்கள் தற்போது ஆரம்பித்துள்ளனர்.

எதிர்வரும் 30ஆம் திகதி லாகுகல பிரதேச செயலாளர் பகுதியில் அமைந்துள்ள உகந்தை காட்டுப் பாதை பக்தர்களுக்காக திறக்கப்பட்டு, ஜூலை 11ஆம் திகதி மூடப்படுவதாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் (07.06.2024) அன்று உகந்தை முருகன் ஆலயத்தில் நடத்தப்பட்ட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அதனை தொடர்ந்து, கதிர்காமம் ஆலயத்தில் கடந்த 12ஆம் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் உகந்தை காட்டுப்பாதை திறக்கும் திகதி பிற்போடப்பட்டு, எதிர்வரும் ஜூலை மாதம் 02ஆம் திகதி காட்டுப்பாதை திறக்கப்பட்டு, 14ஆம் திகதி மூடப்படவுள்ளதாக மொனராகலை மாவட்ட அரசாங்க அதிபர் ரத்னாயக்க அறிவித்திருக்கிறார்.

முன்னர் அறிவிக்கப்பட்டபடி, 30ஆம் திகதியினை கருத்திற்கொண்டு பக்தர்கள் பாதயாத்திரை செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்ட நிலையில், இந்த திகதி மாற்றமானது மக்கள் மத்தியில் பெரும் குழப்பத்தினை ஏற்படுத்தியுள்ளதாக சமூக அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

காட்டு வழியாக பாதயாத்திரை மேற்கொள்ள தற்போது அறிவிக்கப்பட்டுள்ள புதிய கால எல்லை போதாமல் உள்ளதாகவும் பல சமூக அமைப்புகள் தங்கள் நிலைப்பாட்டை தெரிவித்து வருகிறார்கள்.

அந்த வகையில் ஆலையடிவேம்பு பிரதேச அனைத்து இந்து ஆலயங்களும் கதிர்காம காட்டுப்பாதை திறக்கும் திகதியில் மாற்றம் ஏற்பட்டமையை கண்டித்தும் குறித்த தீர்மானத்தில் மாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தியுமே மகஜர் கையளிக்க இன்று தீர்மானம் மேற்கொண்டிருக்கின்றார்கள்.

## மட்டக்களப்பு நகரிலும் ஹஜ் பெருநாள் தொழுகை



**மட்டக்களப்பு சுழற்சி நிருபர்**

ஈதுல் அழ்கா ஹஜ் பெருநாள் தொழுகை மட்டக்களப்பு நகர ஜாமியுஸ் சலாம் ஜும்மா பெரிய பள்ளிவாசலும் சிறப்பாக நடைபெற்றது. இப்பள்ளிவாசலின் பேஷ் இமாம் றுசைத்துரகுமான் பலாஹி தலைமையில் நடைபெற்ற இந்த விசேட ஹஜ் பெருநாள் தொழுகையில் மட்டக்களப்பு நகரை அண்டிய கிராமங்களிலிருந்து பலர் இத்தொழுகையில் கலந்து கொண்டனர்.

இந்த விசேட ஹஜ் பெருநாள் தொழுகையின் போது நாட்டின் நலன் வேண்டியும் பலஸ்தீன காசா பேரழிவு நீங்க கோரியும் யுத்தத்தால் பலஸ்தீனில் முஸ்லிம்கள் அனுபவிக்கும் துன்பங்கள் நீங்க வேண்டியும் விசேட பிரார்த்தனையும் நடைபெற்றது .



நிந்தவூர் ஜாமிஉத் தௌஹீத் ஜும்மாப்பள்ளிவாசலின் ஏற்பாட்டில் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையானது, நேற்றைய தினம் (17) நிந்தவூர் அல்அஷ்றக் தேசியப்பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. இதில் மௌலவி எம்.எச்.றியாழ் (காஷிபி) குத்பாப் பிரசங்கம் நிகழ்த்துவதையும், நிகழ்வில் கலந்து கொண்டோர்களையும் படங்களில் காணலாம். படங்கள் : நிந்தவூர் குறூப் நிருபர்

## சம்மாந்துறையில் ஹஜ் தினத்தில் விபத்து வயோதிபர் அவசர சிகிச்சை பிரிவில்

**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**



சம்மாந்துறை பொலிஸ் வீதியில் நேற்று (17) காலை 10 மணியளவில் மோட்டார் வாகனத்தில் இளைஞர்கள் வேகமாக வந்துகொண்டிருந்த நிலையில் அவ்வீதியால் துவிச்சக்கரவண்டியில் பயணித்த வயோதிபருடன் மோதி விபத்துக்குள்ளானதில் வயோதிபர் ஆபத்தான நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, வீட்டின் முன்னால் அமர்ந்து இருந்த சிறுவன் மீதும் அதே மோட்டார் சைக்கிள் மோதியதுடன், அச்சிறுவனும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சம்பவ இடத்தில் இருந்த பொதுமக்கள் தெரிவித்தனர். இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தோப்பூர் பிரதேசத்தில் பெருநாள் தொழுகை



**தோப்பூர் குறூப் நிருபர்**

புனித ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை தோப்பூர் பிரதேசத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் சிறப்பாக தொழுகை நடத்தப்பட்டன.

காலை 6.30 மணிக்கு பெண்களுக்கான ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையும் 7.30 மணிக்கு ஆண்களுக்கான ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை தொழுவிக்கப்பட்டு ஒருவருக்கொருவர் முஸாபாகா செய்து சந்தோசத்தினை பகிர்ந்து கொண்டனர்.

ஜும்ஆ பிரசங்கம் நிகழ்த்தப்பட்டதை அடுத்து தொழுகை நடத்தப்பட்டு விசேட துஆப் பிரார்த்தனையும் மேற்கொள்ளப்பட்டது. தோப்பூர் பிரதேசத்தில் மரபு ரீதியாக திடலுக்குச் சென்று தொழுவதை தவிர்த்து பள்ளிவாசல்களிலே பெருநாள் தொழுகைகள் தொழுவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அக்கரைப்பற்றிலுள்ள எட்டு பள்ளிவாயல்களில் விசேட தொழுகை

**அட்டாளைச்சேனை குறூப் நிருபர்**



இவ்வருட புனித ஹஜ்ஜூப் பெருநாள் அக்கரைப்பற்றிலுள்ள எட்டு பிரதான பள்ளிவாயல்களில் விசேட தொழுகை, குத்பா பிரசங்கம், துஆப் பிராத்தனைகளுடன் சிறப்பாக நடைபெற்றன.

அக்கரைப்ப்று பெரிய ஜூம்மாப்பள்ளி வாயலில் நடைபெற்ற விசேட தொழுகை, குத்பா பிரசங்கம் மற்றும், துஆப் பிராத்தனைகளை அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபையின் அக்கரைப்பற்று கிளையின் தலைவர் கலாநிதி அஸ்ஷேய்க் எம்.ஐ..எம் சித்தீக் ஹாபீஸ் நடாத்தி வைத்தார்.

பெருந்தொகையான முஸ்லிம்கள் கலந்துகொண்ட இத்தொழுகையில் பெண்களின் தொழுகைக்கென விசேட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டதிருந்தன. விசேட துஆப் பிரார்த்தனையயடுத்து சலாம் கூறி ஆரத்தழுவி கைலாகும் செய்து கொண்டனர்.

## கலதுர தோட்டத்தில் தொழிலாளி தாக்கப்பட்ட சம்பவம்

# சட்ட நடவடிக்கை எடுக்குமாறு இ.தொ.கா ரூபன் பெருமாள் வலியுறுத்தல்

இரத்தினபுரி, கிரியெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கலதுர தோட்டத்தில், தொழில் புரியும் தோட்டத்தொழிலாளியொருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு இ.தொ.காங்கிரஸின் அரசியல் அமைப்பாளர் ரூபன் பெருமாள் தெரிவித்துள்ளார்.

44 வயதுடைய வீராசாமி ஜெகதீஸ்வரன் என்பவரே இவ்வாறு தாக்கப்பட்டு தற்போது இரத்தினபுரி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

எனினும், இதுவரை அசம்பாவிதத்திற்கு காரணமான ஐவரில் ஒருவரையேனும் பொலிஸார் கைது செய்ய நடவடிக்கை எடுக்கவில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர்.



இவ்விடயம் தொடர்பாக தோட்ட இளைஞர்கள் தொலைபேசி மூலமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் அமைச்சருமாகிய ஜீவன் தொண்டமானுக்கு தெரிவித்ததையடுத்து ரூபன் பெருமாள் அவ்விடத்துக்கு விரைந்து சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார். தாக்குதலுக்குள்ளான குடும்ப உறுப்பினர்களுடன் கலந்துரையாடி உடனடியாக அவ்விடத்துக்கு வருமாறு கிரியல்ல பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த கிரியெல்ல பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் இவ்வாறான அசம்பாவிதங்களை நிகழ்த்தும் நபர்களை உடனடியாக கைது செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார். எமது தோட்ட மக்களுக்கு நடக்கும் அசாதாரணங்களுக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் முன்னெடுக்கும் உடனடி நடவடிக்கைகளை பொறுத்துக்கொள்ள முடியாதவர்களே, கடந்த வாரம் நுவரெலியா பீட்று தோட்ட மக்களுக்காக அமைச்சர் ஜீவன் தொண்டமான் களமிறங்கிய போது எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் மக்கள் மத்தியில் ஒரு பிழையான செய்திகளை கொண்டு செல்ல முயற்சித்தமை தெட்டத் தெளிவாகின்றது என ரூபன் பெருமாள் மேலும் தெரிவித்தார்.

## மலைச்சாரல்



க.பொ.த உயர்தர பரீட்சையின் பொறியியல் தொழில்நுட்பம் பிரிவில் அகில இலங்கை ரீதியில் முதலிடத்தைப்பெற்ற கினிகத்தேன மத்திய கல்லூரி மாணவி எம்.ஆர். செஹானி நவோதயாவுக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் மடிக்கணினியொன்றை வழங்கிவைத்தார். (படம்: பொகவந்தலாவ நிருபர்)

## கொட்டகலையில் முச்சக்கர வண்டி விபத்து; நால்வர் படுகாயம்

(நானுஓயா நிருபர்)

ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியில் கொட்டகலை பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து முச்சக்கரவண்டியொன்று விபத்துக்குள்ளானதில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

கொட்டகலை வைத்தியசாலைக்கு அருகாமையில் நேற்றுமுன்தினம் (16) பிற்பகல் இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த முச்சக்கரவண்டி சாரதி மற்றும் அதில் பயணித்த நால்வரும் கொட்டகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளங்கன் மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

## வேலாபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயிலின் தேர்பவனி விழா

நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

களுத்துரை நகரில் அமைந்திருக்கும் கோவிவேலாபுரம் ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோயிலின் வருடாந்த அலங்கார உற்சவ தேர்பவனி விழா இன்று 18.06.24ஆம் திகதி காலை 9.30 மணிக்கு மஹா கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகும்.

இங்கு நாளை 19.06.2024 ஆம் திகதி காலை 10.15 கொடியேற்றமும் நடைபெறவுள்ளது. 20.06.24 காலை 6.00 மணிக்கு சங்காபிஷேகம் 1009வும், காலை 7.30 மணிக்கு பாற்குட பவனியும் நடைபெறுவதோடு அன்னதானமும் வழங்கப்படும். எதிர்வரும் 21.06.24ஆம் திகதி காலை 6.00 மணிக்கு வசந்த மண்டப பூஜை நடைபெற்று காலை 9.00மணிக்கு தேர்பவனி நடைபெறும்.

மேள தாளங்கள் மற்றும் நடன போன்ற கலை நிகழ்ச்சிகளுடன், வரலாற்றில் முதல் தடவையாக கட்டுக்குருந்தையில் அமைந்திருக்கும் பழைய முருகன் ஆலயத்திற்கு சென்று மீண்டும் ஆலயத்திற்கு வரும். எதிர்வரும் 22.06.24 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு களுத்துறையிலுள்ள களு கங்கை ஆற்றில் தீர்த்தம் நடைபெற்று மாலை 5.00 மணிக்கு திருக்கல்யாணமும் இரவு அன்னதானமும் வழங்கப்படும். எதிர்வரும் 23.06.24 ஆம் திகதி மாலை 4.30 வைரவர் மடை திருவடி மாலை ஏலம் ஆகியன நடைபெறவுள்ளன.



மாத்தளை நிககொள்ள ஜாமிஉல் அன்வர் ஜும்மா பள்ளிவாசலில் நேற்று (17) புனித ஹஜ்ஜுப் பெருநாள் (ஈதுல் அல்ஹா) தொழுகை மற்றும் பேருரை பள்ளிவாசல் பேஷ் இமாம் அஷ்ஷெய்க் மௌலவி யூசுபினால் நடத்தி வைக்கப்பட்டது. (படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

## தேங்காய் தலையில் விழுந்து 11 மாத பெண் குழந்தை பலி

தேங்காய் ஒன்று தலையில் விழுந்ததில் 11 மாத பெண் குழந்தை உயிரிழுந்துள்ளதாக கலஹா பொலிஸார் தெரிவித்தனர். கலஹா, தெல்தோட்டை பிரதேசத்திலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கலஹா தெல்தோட்டை நாரன்ஹின்ன தோட்டத்தில் வசிக்கும் லோகேஸ்வரன் கியாங்ஷினி என்ற சிறுமியே துரதிஷ்டவசமாக உயிரிழந்துள்ளார்.

தந்தை சிறுமியை பக்கத்து வீட்டுக்கு அழைத்துச் சென்றுவிட்டு திரும்பி வந்து கொண்டிருந்தபோது, வீட்டின் முன்புறம் முப்பது அடி தூரத்தில் இருந்த தென்னை மரத்தில் இருந்து காய்ந்த காய் ஒன்று அவள் தலையில் விழுந்தது.

பின்னர் அதே சிறுமியை முச்சக்கர வண்டியில் தெல்தோட்டை பிரதேச வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அந்த வைத்தியசாலையில் இருந்து சிறுமியின் நிலைமை மிகவும் மோசமாக இருந்ததால் பேராதனை போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இவர்கள் வசிக்கும் வரிசை வீடுகளுக்கு அருகாமையில் உள்ள தென்னை மரங்களில் இருந்தே தேங்காய் விழுந்ததாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



பசறை புனித பர்னபா ஆலயத்தின் பவள விழாவை முன்னிட்டு சிறப்பு ஆராதனையும் வழிபாடும் நேற்றுமுன்தினம் இலங்கை திருச்சபையின் கொழும்பு மறைமாவட்ட பேராயர் வணக்கத்துக்குரிய துஷாந்த லக்ஷமன் ரொட்ரிகோ தலைமையில் நடைபெற்றது. இதன்போது குருவானர் ஜோன்சப் ஜோசப், இறையியற் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி குருவானவர் சாந்தகுமார் சுரேஷ்குமார், புனித பர்னபா ஆலய குருவானவர் தயாளன் பிலிப்பையா உள்ளிட்ட பலர் பங்குபற்றினர். (படங்கள்: லுணுகல நிருபர் )

## யாழ். கடலில் மிதந்து வந்த மர்ம பெட்டி!

(யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணத்தில் கடலில் அடித்து வரப்பட்டு, கரையொதுங்கிய மர்ம பெட்டி ஒன்றில் இருந்து தொலைத் தொடர்புசாதனம்மீட்கப்பட்டுள்ளது.

அல்லைப்பிட்டி கடற்பரப்பில் மிதந்து வந்த மர்ம பெட்டி ஒன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கரையொதுங்கியுள்ளது.

அது தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் கரையொதுங்கிய பெட்டியை திறந்து பார்த்த வேளை அதனுள் தொலைத்தொடர்பு சாதனம் ஒன்று காணப்பட்டுள்ளது. அதனை மீட்டு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் இருந்தும் அவசர சிகிச்சைப் பிரிவு இயங்கவில்லை

## தென்மராட்சியின் பொது அமைப்புக்கள் கவலை

(சாவகச்சேரி விசேட நிருபர்)

தென்மராட்சி அபிவிருத்திக் கழகமானத ரோட்டரிக் கழகத்தின் பங்களி ப்போடு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிட்சைப் பிரிவை இயக்க வைப்பதற்குத் தேவையான பல மில்லியன் ரூபாய் பெறுமதியான மருத்துவ உபகரணங்களை வழங்கியிருந்த போதிலும் இன்று வரை அந்த அவசர சிகிச்சைப் பிரிவை இயங்க வைக்க முடியவில்லை. இருப்பினும் குறித்த கட்டடம் இதுவரை மூன்று தடவைகள் திறக்கப்பட்டுள்ளன.

ஆளணிப் பற்றாக்குறையைக் காரணம் காட்டி தீவிர சிகிச்சைப் பிரிவை இயக்காமல் உள்ளனர். இதனால் தென்மராட்சி மற்றும் பளைப் பகுதிகளில் இடம்பெறுகின்ற விபத்துச் சம்பவங்களுக்கான சிகிச்சையைப் பெற யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையையே நாட வேண்டிய தேவை உள்ளது.

அண்மையில் சாவகச்சேரி நகர சபையின் பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்ற "பொதுப் பணச் செலவளிப்பு" தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்ட தென்மராட்சிப் பிரதேச பொது அமைப்புக்களுடைய அங்கத்தவர்கள் கருத்துத் தெரிவித்த போதே அவர்கள் இதனை வலியுறுத்தியிருந்தனர்.

## வடக்கின் உதயம்

## யாழ். இந்திய துணைத்தூதரகத்தை முற்றுகையிடவுள்ள கடற்றொழிலாளர்கள்

(யாழ். விசேட நிருபர்

இந்திய இழுவை மடி படகுகளின் அத்துமீறல் செயற்பாட்டை தடுத்து நிறுத்த கோரி இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டு போராட்டம் ஒன்றினை முன்னெடுக்கவுள்ளதாக யாழ்ப்பாண கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் அலுவலகத்தில் நேற்றைய தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை தடுத்து நிறுத்தி, எமக்கு விரைவில் தீர்வினை பெற்று தராது விட்டால் நாங்கள் நாடாளுமன்றை முற்றுகையிட்டு போராடுவோம் எனவும் அறிவித்துள்ளனர்.

# மன்னாரில் சிறப்பாக இடம்பெற்ற ஹஜ் பெருநாள் தொழுகை

(மன்னார் குறூப் நிருபர் எஸ்.ஆர். லெம்பேட்)

உலகம் முழுவதும் உள்ள இஸ்லாமிய மக்களால் ஹஜ் பெருநாள் கொண்டாடப்பட்டு வருகின்ற நிலையில் மன்னார் மாவட்டத்திலும் இஸ்லாமியர்களால் ஹஜ் பெருநாள் நிகழ்வுகள் நேற்று (17) திங்கட்கிழமை சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மன்னார் மூர்வீதி ஜும்மா பள்ளிவாசலில் நேற்றைய தினம் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகைகள் இடம் பெற்றது. காலை 6.45 மணிக்கு பெண்களுக்கும் காலை 7.30 மணியளவில் ஆண்களுக்கும் பெருநாள் தொழுகை இடம் பெற்றது.



இத் தொழுகை மூர்வீதி ஜும்மா பள்ளிவாசலின் மௌலவி எம்.அஸீம் தலைமையில் நடைபெற்றது. இதன்போது ஹஜ்ஜுப் பெருநாளின் முக்கியத்துவம், அல்குர்ஆன் சமய நற்சிந்தனைகள், பற்றியும் இங்கு எடுத்துக் கூறப்பட்டது. மேலும் விசேடமாக துவா தொழுகையும் இடம் பெற்றது. மேலும் மாவட்டத்தில் உள்ள ஏனைய பள்ளிவாசல்களிலும் பெருநாள் தொழுகைகள் சிறப்பாக இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கோப்பாயில் ஆய்வு நூல் வெளியீடு

அமரர் கலாநிதி கார்த்திகேசு திருப்பதி தனது கலாநிதி பட்டத்திற்காக ஆக்கிய மாணிக்கவாசகரும் பெரியாழ்வாரும் கையாண்ட இலக்கிய உத்திகள் என்ற நூலின் வெளியீட்டு நிகழ்வு கோப்பாய் சரவணபவனந்த வித்தியாலயத்தில் ஐ. சிவலோகநாதன் தலைமையில் நடைபெற்றது

நூலை நூலாசிரியரின் சகோதரன் கா. ஞானபண்டிதன் வெளியிட்டு வைக்க பேராசிரியர் ம. இரகுநாதன் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ம. இரகுநாதன் கலந்து கொண்டார்.



நூலின் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசனும் நயப்புரைகளை எழுத்தாளர் கோப்பாய் சிவம் மற்றும் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அதிபர் அ. ஆனந்தராசா ஆகியோரும் ஏற்புரையை மக்கள் வங்கி பிரதி முகாமையாளர் தெ. ஹர்சனும் ஆற்றினர். ஆசிரியர்களான அ. பேரின்பநாயகம் செ. மோகநாதன் ஆகியோர் நிகழ்வுகளை தொகுத்து வழங்கினர்.



## யாழ்ப்பாண முஸ்லிம்கள் ஜின்னா மைதானத்தில் பெருநாள் தொழுகை

யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்களின் ஈதுல் அல்ஹா ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை வழமை போன்று இம்முறையும் யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி ஜின்னா மைதானத்தில் மௌலவி எம்.ஏ.பைசர் (மதனி) அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

நேற்றைய பெருநாள் தொழுகையானது மர்யம் மஸ்ஜித்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றிருந்தது.

மௌலவி எம்.ஏ.பைசர் (மதனி) அவர்கள் பெருநாள் தொழுகையை நடாத்தியிருந்ததுடன், ஹஜ்ஜுப் பெருநாளின் முக்கியத்தும், நபி இப்ராஹீம் அலை அவர்களின் வாழ்வின் தியாகங்கள், அவரின் வாழ்க்கையின் முக்கிய படிப்பினைகளை கருப்பொருளாகக் கொண்டு பெருநாள் விசேட உரையும் நிகழ்த்தியிருந்தார்.

பெருநாள் தொழுகைக்காக ஜின்னா மைதான திடலில் உலமாக்கள், ஆண்கள், பெண்கள், முதியவர்கள், இளைஞர்கள், யுவதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், யாழ்ப்பாணம் தேசியக் கல்வியற் கல்லூரி மாணவர்கள் மற்றும் சிறுவர்கள் என சுமார் ஆயிரக்கணக்கானோர் அணி திரண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

கலாபூஷணம் பரீட் இக்பால்

## வீதியில் மயங்கி விழுந்த மாணவன் உயிரிழப்பு

(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் நண்பர் ஒருவருடன் வீதியில் பயணித்துக்கொண்டிருந்த மாணவன் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

தொல்புரம் பகுதியைச் சேர்ந்த 16 வயதுடைய தவராசா கோபிக்குமரன் எனும் மாணவனே உயிரிழந்துள்ளார். மாணவன் அவரது நண்பருடன் மதியம் கடைக்கு சென்று விட்டு, வீடு திரும்பும் போது, மயங்கி விழுந்துள்ளார்.



வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்ற அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழா 2024 இன் மூன்றாம் நாள் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் கோவிலூர் ஆதீனகர்த்தா சீரவளர் சீர் நாராயண ஞானதேசிகன் சுவாமிகள் தலைமையில் ஆரம்பமானது. ஸ்ரீ மயூரபதி தேவஸ்தான அறங்காவலர் பி.சுந்தரலிங்கம் தம்பதியினர் மங்கல விளக்கேற்றுவதையும், செல்வி. வைஷாலி யோகராஜா கடவுள் வாழ்த்து இசைப்பதையும், டெல்லி கம்பன் கழக தலைவர் கே.வி.கே.பெருமாள் தொடக்கவுரை ஆற்றுவதையும் இலக்கியப்புரவலர் ஹாசிம் உமர் இஸ்லாமிய இலக்கியப் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கு பரிசு வழங்குவதையும் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.



அநுராதபுரம் கியுளேகட ஜும்ஆப் பள்ளி வாசலில் ஹஜ்ஜுப் பெருநாள் பிரசங்கமும் பெருநாள் தொழுகையும் நேற்று நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம்.
(படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)



ஹஜ் பெருநாள் தொழுகையை நிறைவேற்றுவதற்காக நாச்சியாதீவு ஜும்மா பள்ளிவாசலில் ஒன்றுகூடிய பொதுமக்களில் ஒரு பகுதியினரை படத்தில் காணலாம்.
(படம் :திறப்பனை தினகரன் நிருபர்)

# பேருவளை சீனன்கோட்டை பாஸியா பெரிய பள்ளிவாசலில் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை

**(பேருவளை விசேட நிருபர்)**

பேருவளை சீனன்கோட்டை பாஸியா பெரிய பள்ளிவாசலில் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை வெகு சிறப்பாக நடைபெற்றது.

கலீபதுஷ்ஷாதுலி அஷ் செய்ஹ் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) தொழுகை மற்றும் குத்பா பிரசங்கம் நடாத்தினர்.நாட்டின் சாந்தி,சமாதானத்துக்காகவும் பலஸ்தீன மக்களுக்காகவும் துவா பிரார்த்தனையும் இடம்பெற்றுமை இங்கு குறிப்பிடத்தக்கது.





பள்ளிச் சங்க தலைவர் ஏ.எச்.எம். முக்தார் ஹாஜியார்,இணைச் செயலாளர் எம்.எம்.எம்.சிஹாப் ஹாஜியார் உட்பட உறுப்பினர்கள் பெருமளவிலான இஹ்வான்கள் தொழுகையில் பங்குபற்றினர்.

தொழுகையின் பின்னர் முஸாபஹாவும் அதன்பின்னர் ஹழரா திக்ர் மஜ்லிஸும் நடைபெற்றது.சீனன்கோட்டை பள்ளிசங்கத்தின் கீழ் உள்ள 6 ஜும்மா பள்ளிவாசல்கள் மற்றும் ஸாவியா மஸ்ஜிதுகளிலும் பெருநாள் தொழுகை நடைபெற்றது.

# மறைத்து வைக்கப்பட்டிருந்த பீடி இலைகள் மீட்பு

**(கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்)**



கற்பிட்டி தளுவ பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஒருதொகை பீடி இலைகள் கடந்த சனிக்கிழமை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 42, 44 வயதுகளையுடையவர் எனவும், இவர்கள் மன்னார் மற்றும் மதுரங்குளி பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வடமேற்கு கடற்படை கட்டளையின் கற்பிட்டி உச்சமுனை கடற்படையினரால் தளுவ பிரதேசத்தில் விசேட தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட போதே பீடி இலைகள் அடைக்கப்பட்ட உர மூடைகள் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது, 19 உர மூட்டைகளில் அடைக்கப்பட்ட 702 கிலோகிராம் பீடி இலைகள் இருந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், குறித்த பீடி இலைகளை தளுவ பகுதியிலிருந்து வேறு ஒரு இடத்திற்கு கொண்டு செல்வதற்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் முச்சக்கரவண்டி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கடற்படையினரால், கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும், கைப்பற்றப்பட்ட 702 கிலோகிராம் பீடி இலைகள் மற்றும் முச்சக்கரவண்டி என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் கலால் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளதாகவும் கடற்படையினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில மாதங்களில் கற்பிட்டி பிரதேசத்தில் பத்தலங்குண்டு, இப்பந்தீவு, கீரிமுந்தல், மாம்புரி, தேத்தாப்பொல மற்றும் தளுவ உள்ளிட்ட பகுதிகளிலிருந்து சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பலகோடி ரூபா பெறுமதியான பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு சொந்தமான கடல் மற்றும் கரையோர பகுதியில் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்கும் வகையில் இலங்கை கடற்படையினர் தொடர்ந்தும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




இஸ்லாமிய விவகார, அழைப்பு மற்றும் வழிகாட்டுதல் அமைச்சரும் இரு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலரின் விருந்தினர் திட்டத்திற்கு பொறுப்பானவருமான அஷ்ஷைக் அப்துல் லதீப் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஷைக்கின் விஷேட அழைப்பின் பேரில் மினாவில் உள்ள அவரது அமைச்சு அலுவலகத்தில் அல் ஹிக்மா நிறுவன பணிப்பாளர் அஷ்ஷைக் ஷேஹுத்தீன் மதனி சந்தித்து கலந்துரையாடியதோடு அமைச்சரின் சேவைகளைப் பாராட்டி அவருக்கு நினைவுச் சின்னமொன்றை வழங்கிக் கௌரவித்தார். இச்சமயம் அமைச்சரும் ஷேஹுத்தீன் மதனிக்கு ஞாபகச்சின்னமொன்றை வழங்கி வைத்தார்.




குருநாகல் நகர் சிவில் சமூக அமைப்புகள் இணைந்து சுதந்திர பலஸ்தீன மக்களின் விடுதலைக்கு ஆதரவு தெரிவித்து குருநாகல் பெரிய ஜும்ஆப் பள்ளிவாசல் முன்னால் 'இனப்படுகொலையை நிறுத்தி சுதந்திர பலஸ்தீனத்தை வழங்கக் கோரி நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது குருநாகல் முன்னாள் மாநகர சபை உறுப்பினர் மொஹினுதீன் அஸார்தீன் சமூகப்பணியாளர் நஸார் உள்ளிட்ட பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர்.
(படம்: மாவத்தகம நிருபர்)

# இறைதூதர் இப்ராஹிமின் முன்மாதிரிகள் இலட்சிய பயணத்துக்கான அடித்தளம்



இறைதூதர் இப்ராஹிமின் முன்மாதிரிகள் இலட்சிய பயணத்துக்கான அடித்தளமாக அமைந்துள்ளதென, வடமேல் மாகாண ஆளுநரும் ஜனநாயக ஐக்கிய முன்னணியின் தலைவருமான நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

புனித ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் ஆளுநர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளதாவது,

அல்லாஹ்வின் கட்டளைக்கு முற்றிலும் அடிபணிந்த குடும்பத்தின் தியாகங்களைப் புலப்படுத்துவதே, ஹஜ்ஜின் நோக்கமாகும். ஐயாயிரம் வருடங்களுக்கு முன்னர், மத்திய கிழக்கில் இறைதூதர் இப்றாஹீம் செய்த தியாகங்கள் மற்றும் முன்னெடுத்த திடகாத்திரங்களே முழு உலகுக்கும் நாகரிகத்தை அறிமுகஞ் செய்துள்ளது. இதனால்தான், "இப்றாஹிமின் தியாகத்தை முழு சமூகத்துக்கும் மார்க்கமாக்கியுள்ளோம்" என, புனித குர்ஆன் கூறுகிறது. அன்னாரின் முன்மாதிரிகள் உலகம் உள்ளவரைக்கும் நிலைக்கும். இந்த தத்துவம் இறைவனின் இந்த வாக்கியத்தில் பொதிந்துள்ளது.

பலஸ்தீனத்திலும் மக்காவிலும் இறைதூதர் இப்றாஹிமின் குடும்பத்தினர் புரிந்த மிகப்பெரிய தியாகங்களில் பல படிப்பினைகள் உள்ளன. இறைவனின் ஏவல்களுக்கு முற்றிலும் அடிபணிந்த இறைதூதர் இப்றாஹிம், அல்லாஹ்வால் அங்கீகரிக்கப்பட்ட மார்க்கத்துக்கு அடித்தளமிட்டார். இவரது வாயிலாகவே எமக்கு இன்று இஸ்லாம் மார்க்கமாக கிடைத்துள்ளது.

இப்றாஹிம் (அலை) அவர்களின் வாழ்வில், ஷெய்த்தானுக்கு துளியளவும் இடமிருந்ததில்லை. இதுபோலவே, அவரது குடும்பத்தினரும் அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டனர். நவீன உலகில் நம்மை எதிர்கொள்ளும் சோதனைகள், கஷ்டங்கள் நீங்குவதற்கு இறைவனை நெருங்குவதைத் தவிர வேறு வழியே இல்லை. மனிதனை புனிதனாக புடம்போடுவதற்கு ஹஜ் கிரியைகள் பயிற்சியளிக்கின்றன. அன்னை ஹாஜறாவின் பொறுமை பெண்களுக்கும் தந்தை இப்றாஹிமின் (அலை) திடகாத்திரம் ஆண்களிடமும் இருப்பதும் அவசியம்.

சர்வதேச அளவில் முஸ்லிம்களுக்கு எதிராகப் போடப்படும் சதிகள் குறித்து விழிப்புடன் செயற்பட வேண்டிய காலமிது. நிதானம், பொறுமை மற்றும் பக்குவங்களாலேயே இவற்றை தோற்கடிக்க முடியும். தீவிரவாதம் மற்றும் அடிப்படைவாதம் என்ற அடைமொழிகளுக்குள் முஸ்லிம்களை முடக்க சிலர் சதி செய்கின்றனர். இந்த சதிகளுக்கு இரையாகமல் நடப்பதே நமக்குள்ள பாதுகாப்பு.

ஆகையால், ஹஜ் கால கிரியைகளை மிக நிதானமாக முன்னெடுக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# இலங்கையில் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்யும் செரண்டிப் கோதுமை ஆலை





கொழும்பில் ஊடகவியலாளர்களுக்கென ஏற்பாடு செய்யப்பட்ட விசேட ஆலைச் சுற்றுப்பயணத்தின் மூலம், செரண்டிப் கோதுமை மா ஆலை நிறுவனமானது, நாட்டின் உணவுப் பாதுகாப்புக்கு எவ்வாறு பங்களித்து வருகின்றது என்பதை அறிந்து கொள்ளக்கூடியதாகவிருந்தது.

துபாயைத் தலைமையகமாகக் கொண்ட ஐக்கிய அரபு இராச்சியத்தில் உள்ள முன்னணி பல்வகை குடும்ப வணிகங்களில் ஒன்றான நிறுவனத்தின் முழு உரிமையைக் கொண்ட உபநிறுவனமான செரண்டிப் கோதுமை மா ஆலை நிறுவனம் Al Ghurair கொழும்பு துறைமுகத்தில் உள்ள தனது அதிநவீன ஆலையில் ஊடகவியலாளர்களுக்கான விசேட சுற்றுப் பயணமொன்றை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது. இந்தச் சுற்றுப் பயணத்தின் ஊடாக இலங்கையின் உணவுப் பாதுகாப்பு, கோதுமை தயாரிப்புத் தொழில்துறையில் புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் நிலைபேறு தன்மையை மேம்படுத்துவதில் செரண்டிப் கோதுமை ஆலை நிறுவனம் கொண்டிருக்கும் அர்ப்பணிப்பு என்பன வெளிப்பட்டன.

நிலைபேறுதன்மை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு முன்னுரிமையளிக்கும் வகையில் செரண்டிப் கோதுமை மா நிறுவனத்தின் செயற்பாடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. சுற்றுச்சூழல் நிலைபேறுதன்மைக்கு கணிசமான பங்களிப்பைச் செலுத்தும் நோக்கில், பாரிய தொழில்துறை வாடிக்கையாளர்களுக்கு (SFML) செயற்பாடுகளை வழங்கி, எரிசக்தி நுகர்வு, மற்றும் பணியாளர் தேவையைக் குறைத்து, நிலப்பரப்புக் கழிவுகளை குறைக்கும் வகையில் இந்நிறுவனம் இயங்கி வருகின்றது.

இலங்கையின் உணவுப் பாதுகாப்பைப் பேணுவதற்கான தனது அர்ப்பணிப்பை வெளிக்காட்டும் வகையில், வருடம் முழுவதும் தடைப்படாத விநியோகத்தை உறுதிசெய்வதற்காக செரண்டிப் கோதுமை மா ஆலை நிறுவனம் எப்பொழுதும் மூன்று மாதங்களுக்குத் தேவையான கோதுமை இருப்புத் தொகையைப் பேணி வருகின்றது. நிறுவனத்தினால் முகாமைத்துவம் செய்யப்படும்; ஐந்து களஞ்சியங்கள் மூலோபாய ரீதியில் நாடு முழுவதிலும் அமைந்திருப்பதுடன், இதன் ஊடாக செரண்டிப் கோதுமை ஆலை நிறுவனம் தனது உற்பத்தி, நாடு முழுவதிலும் கிடைக்கப் பெறுவதை உறுதிசெய்கின்றது.

செரண்டிப் கோதுமை மா ஆலை நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி விஜய் ஷர்மா, உடகவியலாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கும் போது. "நிலைபேறான மற்றும் புதிய கண்டுபிடிப்புக்களுடன் கூடிய உணவுத் தீர்வுகள் மூலம் இலங்கை முழுவதிலுமுள்ளவர்களுக்கு ஊட்டமளிப்பதற்கு நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது மற்றும் கூட்டுப்பொறுப்பின் உயர் தரத்தை நிலைநாட்டி எமது தேசத்தின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் நம்பிக்கையுள்ள பங்காளராக விளங்குவதுமே எமது நோக்கமாகும்" என்றார்.

செரண்டிப் கோதுமை மா ஆலை நிறுவனம் தனது கோதுமை தயாரிப்புக்களுக்கு அப்பால் சமூகப் பொறுப்பு மிக்க முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளது. முதியோர் இல்லங்களில் உள்ள சிரேஷ்ட பிரஜைகள் எசல பெரஹரவைப் பார்வையிடுவதற்கான வாய்ப்பை வழங்கும் 'செரண்டிப் உத்தம தலதா' நிகழ்ச்சித் திட்டம் இதில் ஒன்றாகும். இதனை விடவும், ஒதுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த சமூகத்தை வலுவூட்டும் '7 ஸ்டார் மனுசத்கார' நிகழ்ச்சித் திட்டம் சமூக முன்னேற்றம் தொடர்பான செரண்டிப் கோதுமை மா ஆலையின் அர்ப்பணிப்புக்கு சிறந்த உதாரணமாக அமைந்துள்ளது.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட தரம்மிக்க கோதுமை மாவை நுகர்வது எப்போதும் வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பானதாக இருக்கும் என்பதை செரண்டிப் கோதுமை மா ஆலை நிறுவனம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது. உயர் தரம் மற்றும் கடுமையான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைப் பின்பற்றுவதில் நிறுவனம் கொண்டுள்ள உறுதிப்பாட்டின் ஊடாக அனைத்து இலங்கையர்களுக்கும் ஊட்டச்சத்து மிக்க சிறந்த கோதுமை மா வழங்கப்படுவதும் உறுதிசெய்யப்படுகின்றது.

- அபி -

மத்திய கிழக்கில் உள்ள பாரிய பல்வகை குடும்ப வணிகக் குழுமங்களில் ஒன்றாக விளங்கும் Al Ghurair நிறுவனம், உணவு மற்றும் ஆராய்ச்சி, ஆதனங்கள், கட்டுமானம் மற்றும் சேவைகள், வலுசக்தி, இயக்கம் மற்றும் தொழில்முயற்சி ஆகிய ஆறு முக்கிய தொழில்துறைகளில் தனது வணிகத்தை வியாபித்துள்ளது. 1960ஆம் ஆண்டு வர்த்தக வணிகமாக ஆரம்பிக்கப்பட்ட Al Ghurair நிறுவனம், வளர்ச்சியுற்று வரும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் தொழில்துறை மற்றும் வணிகத்தின் முதலாவது தூண்களில் ஒன்றாகவும் விளங்கியது.

எளிமையான தொடக்கத்தில் ஆரம்பித்து, புத்தாக்கம் மற்றும் தொழில்முயற்சியின் பெருமையான வரலாற்றுடன், Al Ghurair குடும்பத்தின் பெயரானது மதிப்புமிக்க நாட்டின் பாரம்பரியம், பரிணாம வளர்ச்சி மற்றும் நோக்கம் என்பவற்றின் மறுபெயராகவும் பதிவாகியுள்ளது.

டியேராவை தலைமையகமாகக் கொண்டுள்ள இந்த நிறுவனம், உலகம் முழுவதிலும் 50க்கும் மேற்பட்ட நாடுகளில் தனது பல்வகையான வணிகச் செயற்பாடுகளை முன்னெடுத்திருப்பதுடன், ஏறத்தாள 28,000க்கும் அதிகமான பணியாளர்கள் இதில் பணியாற்றுகின்றனர். நிறுவனம் அதன் 60 வருடங்களுக்கும் மேலான பாரம்பரியத்தைத் தொடர்ந்தும் பேணி வருவதுடன், 'வாழ்க்கையை மேம்படுத்தல்' என்ற நோக்கத்தின் கீழ் தான் செயற்படும் சமூகங்கள் மத்தியில் அர்த்தமுள்ள மற்றும் நிலைபேறான மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிகளை எடுத்துவருகின்றது.




# பசுமைக் கடனை அறிமுகப்படுத்தியுள்ள அசட்லைன் பைனான்ஸ் லிமிடட்




சூரிய சக்தியில் முதலீடு செய்ய விரும்பும் தனி நபர்கள், மைக்ரோ, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களை வலுப்படுத்துவதை நோக்காகக் கொண்டு தனிப்பயனாக்கப்பட்ட நிதி உதவிகளை வழங்குவதற்காக அசட்லைன் பைனான்ஸ் லிமிடட் நிறுவனம் அசட்லைன் பசுமைக் கடனை அறிமுகப்படுத்தியுள்ளது. சூரிய சக்திப் பயன்பாட்டுக்கான அணுகல் மற்றும் அதற்காக செலவு செய்யக் கூடிய தன்மையை ஊக்குவிக்கும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய வலுசக்தி முறைகளுக்கு மாற்றீடாக மாறியுள்ள சூரிய சக்தி, நிலைபேறு தன்மை மிக்கதாகவும், செலவுச் சிக்கனம் நிறைந்ததாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளதால், வாடிக்கையாளர்களுக்கு அதன் நிலைத்தன்மை நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாக புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் பலன்களைப் பயன்படுத்த உதவுவதில் அசட்லைன் பைனான்ஸ் உறுதியாக உள்ளது.

"நீங்கள் சூரிய சக்திக்கு மாறுவதற்கு எதிர்பார்த்திருக்கும் வீட்டின் உரிமையாளராக இருந்தாலும் சரி, செயற்பாட்டுக்கான செலவு மற்றும் சுற்றுச்சூழலுக்கான பாதிப்பைக் குறைப்பதற்கு எதிர்பார்த்திருக்கும் வணிகமொன்றைக் கொண்டிருப்பவராக இருந்தாலும் சரி உங்களுக்கு அசட்லைன் பசுமைக் கடன், நிலையான நடைமுறைகளை எளிதில் ஏற்றுக்கொள்ள சிறந்த வாய்ப்பை வழங்குகின்றது" என அசட்லைன் பைனான்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அஷான் நிசங்க தெரிவித்தார்.

கடன் பெறுபவர்கள் தமக்கான சூரியப் படலங்களை மலிவாக, இலகுவான முறையில் நிறுவிக்கொள்வதற்கு ஏற்ற வகையில் போட்டித் தன்மையான வட்டியை அசட்லைன் பைனான்ஸ் வழங்குகின்றது.

# ஆசிய சர்வதேச அகடமியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை எட்டியுள்ள HNB FINANCE



இலங்கையின் நிதிச் சேவைகள் துறையில் முன்னணியில் இருக்கும் HNB FINANCE, சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட கல்வி மற்றும் உயர்கல்வி நிறுவனமான Asian International Academy (AIA) உடன் அண்மையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் HNB FINANCE இன் கிளை முகாமைத்துவ மட்ட அதிகாரிகளின் கடன் முகாமைத்துவம் தொடர்பான தொழில் சார் அறிவை அதிகரிப்பதற்கும், அதன் மூலம் அவர்களின் வாடிக்கையாளர்களுக்கு திறமையான மற்றும் வசதியான சேவையை வழங்குவதற்குமான நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டது. AsianInternational Academy (AIA) உடனான இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முதல் கட்டத்தின் கீழ், நாடு முழுவதும் பரந்து விரிந்துள்ள HNB FINANCE கிளை வலையமைப்பின் அனைத்து கிளை முகாமையாளர்களுக்கும் டிப்ளோமா படிப்புகளை படிக்க வாய்ப்பு வழங்கப்படும். அப்போது நிர்வாக மட்டத்தில் இருந்து விற்பனை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வரை அனைவருக்கும் இந்த சந்தர்ப்பம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இது குறித்து HNB FINANCE இன் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சமிந்த பிரபாத் கருத்து தெரிவிக்கையில், "இந்த நாட்டில் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பெற்ற ஒரு நிதி நிறுவனம் HNB FINANCE எனத் தெரிவித்தார்.

# ஷங்கிரி–லா கொழும்பு ஹோட்டலுடனான ஒத்துழைப்பை நீடித்துள்ள ஸ்பா சிலோன்



உலகின் மிகப் பாரிய ஆடம்பர ஆயுள்வேத ஆரோக்கிய வர்த்தகநாமமான ஸ்பா சிலோன் (Spa Ceylon) 'Wellness Month' நிகழ்வை ஆரம்பிப்பதற்கு ஷங்கிரிலா கொழும்பு ஹோட்டலுடனான ஒத்துழைப்பை வெற்றிகரமாக நீடித்துள்ளது.

ஜூன் மாதம் முழுவதும் இடம்பெறவுள்ள தொடர் ஆரோக்கிய நிகழ்வுகள், இம்மாதத்தில் கொண்டாடப்படுகின்ற முக்கிய தினங்களான சர்வதேச ஆரோக்கிய தினம் மற்றும் சர்வதேச யோகா தினம் போன்றவற்றை அடியொற்றியதாக திட்டமிடப்பட்டுள்ளது.

'Wellness Month 2024' நிகழ்வின் உத்தியோகபூர்வ ஆரம்பத்தைக் குறிக்கும் வகையில், ஸ்பா சிலோன் மற்றும் ஷங்கிரிலா கொழும்பு ஆகியன இணைந்து, 2024 ஜூன் 07ஆம் திகதியன்று பத்திரிகையாளர் மாநாடொன்றை ஷங்கிரிலா கொழும்பு ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்தது.

"பொறுப்புணர்வுமிக்க சர்வதேச ஆரோக்கிய வர்த்தகநாமம் என்ற வகையில், ஆரோக்கியம் என்பது வெறுமனே ஒரு நாட்டம் அல்லாது, அது ஒரு வாழ்க்கை முறை என்றே நாம் நம்புகின்றோம். பணியிட ஆரோக்கியம் என்பது இந்த ஆண்டில் எமது உச்ச முன்னுரிமைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. நிறுவனங்கள் மத்தியில் விழிப்புணர்வைக் கட்டியெழுப்பி, பணியிட ஆரோக்கிய நடைமுறைகளை ஸ்தாபிப்பதற்காக இந்த ஆண்டு முழுவதும் பல்வேறு நிறுவனங்களுடன் இணைந்து நாம் செயற்பட்டு வருகின்றோம்," என்று ஸ்பா சிலோன் நிறுவனத்தின் இணை ஸ்தாபகரும், பணிப்பாளருமான ஷாலின் பாலசூரிய தெரிவித்தார்.

# உலக சுற்றுச்சூழல் தினத்தை கொண்டாடிய NDB வங்கி




NDB வங்கியானது, 'வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்புச் சங்கத்தின்' (WNPS) இளைஞர் பிரிவுடன் இணைந்து, பிரிட்ஷ் ஸ்கூல் ஒப் கொழும்பிற்காக [British School of Colombo] சிறப்பாகத் தொகுக்கப்பட்ட நிகழ்வுடன், 'உலக சுற்றுச்சூழல் தினம் 2024'யை (WED24) கொண்டாடியது. உலக சுற்றுச்சூழல் தினத்தின் தொனிப்பொருளான 'நில மறுசீரமைப்பு, பாலைவனமாக்கல் மற்றும் வறட்சியைத் தாங்கும் தன்மை' ஆகி யவற்றுடன் தொடர்புறும் வகையில் பூமி யைக் கொண்டாடவும், பாதுகாக்கவும் மற்றும் மீட்டெடுக்கவும் தேவையான மாற்றங்களை ஊக்குவிக்கும் வகையில் அமர்வுகள் நடத்தப்பட்டன. இந்த நிகழ்வின் நோக்கமானது மீள்காடாக்கம்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், நிலைபேண் மீள்காடாக்கத்தை ஊக்குவிக்கும் அர்த்தமுள்ள நடவடிக்கைகளில் பாடசாலை சமூகத்தை ஈடுபடுத்துவதும் ஆகும். இந் நிகழ்வின் முதல் கட்டமானது , சுற்றுச்சூழல், உள்ளூர் உயிரினங்கள், இலங்கையின் தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் மற்றும் காடழிப்பு, மாசடைதல் உள்ளிட்ட தற்போதைய இயற்கை உலகம் எதிர்கொள்ளும் சவால்கள் ஆகியவை தொடர்பாக மாணவர்களுக்கு அறிவுறுத்துவதாக அமைந்திருந்தது. இந்த விழிப்புணர்வு அமர்வில் மாணவர்கள் பெற்ற அறிவினைத் தக்கவைத்துக் கொள்ளும் முகமாக இடைவினைச் செயல்பாடுகளும் நடத்தப்பட்டன. மரக்கன்றுகள் நடும் விழாவுடன் இந்நிகழ்வானது நிறைவடைந்தது.

# கொமர்ஷல் வங்கியின் ஏற்பாட்டில் நிதியியல் அறிவூட்டல் நிகழ்வு





அண்மையில் இலங்கையின் கொமர்ஷல் வங்கியானது பல முக்கிய நிறுவனங்களுடன் இணைந்து நடத்திய நிலையான தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் மாரவில மற்றும் வென்னப்புவ பிரதேசங்களில் உள்ள சுமார் 100 நுண் மற்றும் சிறிய வர்த்தக உரிமையாளர்கள் பயனடைந்தனர்.

கொமர்ஷல் வங்கியின் 'திரிசக்தி நிலையான தொழில்முயற்சியாளர் அபிவிருத்தி முயற்சிகளின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கருத்தரங்கு மற்றும் பயிற்சிப் பட்டறையானது அவர்களின் தொழில்நுட்ப மற்றும் நிதியியல் அறிவாற்றலை மேம்படுத்துவதற்கு தேவையான அறிவினை வழங்கியதுடன் தமது வர்த்தக செயற்பாடுகளை வளர்ச்சி அடையச் செய்வதற்கான வர்த்தக பதிவு நடைமுறைகள், மற்றும் அவர்களுக்கு கிடைக்கும் வங்கி தயாரிப்புகள் மற்றும் சேவைகள் உள்ளிட்ட தொடர்புடைய தலைப்புகள் தொடர்பான தகவல்களை வழங்கியது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கான வளவாளர்கள் இலங்கை மத்திய வங்கி, வென்னப்புவ பிரதேச செயலகத்தின் முக்கிய திணைக்களங்கள் மற்றும் கொமர்ஷல் வங்கிக்கு உரித்தான அபிவிருத்தி கடன் திணைக்களம் மற்றும் விவசாயம் மற்றும் நுண் நிதி பிரிவு (AMFU) மற்றும் வங்கியின் சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோரைப் பிரதிநிதித்துவப் படுத்தினர்.

நிதி மற்றும் தொழில்முயற்சியாளர்களின் திறன்களை மேம்படுத்துதல், நிதிக்கான அணுகலை அதிகரித்தல், தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அதிகாரம் அளித்தல் மற்றும் சமூக அபிவிருத்திக்கு பங்களித்தல் ஆகியவை இத் திட்டத்தின் பிரதான நோக்கங்களாகும் என்று வங்கி தெரிவித்துள்ளது.

## கம்பனிகள் பதிவாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளும் உரிமமொன்று 2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்ட 7 ஆம் இலக்கத்தின் 34 ஆம் பிரிவின் பிரகாரம்

### "INDEPENDENT ART FOUNDATION"

என்ற பெயர் மற்றும் பாணியின் கீழ் உருவாக்கப்படும் ஒரு மன்றமானது வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் அதன் பெயருடன் ''லிமிட்டட்'' என்ற சொல்லை சேர்க்காமல் பதிவு செய்வதற்கான உரிமத்திற்காக கம்பனிகளின் பதிவாளர் நாயகத்திற்கு விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மன்றத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

(அ) எந்தவொரு அரசியல் கோட்பாடு அல்லது கட்சி, தேசியம், மதம் அல்லது அரசியல் சார்பு இல்லாமல் சுதந்திரமான கலைஞர்களுக்கு பொதுவான தீர்வுகளை மேம்படுத்துதல் மற்றும் முதுமாணி மற்றும் பயின்று கலைஞர்களைப் பாராட்டுதல் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட கலைப் படைப்புகளுக்கான பாதைகளை உருவாக்க அவர்களை ஊக்குவிப்பது மற்றும் பெருமைமிக்க கலை நிபுணத்துவம் ஆகியனவே முதன்மையான நோக்கமாகும்.

(ஆ) தொழிற்பயிற்சி, முதுநிலை அல்லது சிறந்த கலை வல்லுநர்களுக்கு தேசிய இனத்துடன் எந்த தொடர்பும் இல்லாமல் உரிய இடத்தை வழங்குதல் மற்றும் அவர்களின் மரியாதைக்கு எதிர்ப்பு தெரிவித்து சமூக பாதுகாப்பு, நலன், முன்னேற்றம் மற்றும் நிவாரணம் போன்ற பல்வேறு திட்டங்களை உருவாக்குதல்.

(இ) இலங்கையின் கலைத்துறையின் முன்னேற்றத்திற்காக கலைஞர்களை உரிய பொறுப்புடனும் தகுதியுடனும் கௌரவத்துடனும் உருவாக்குதல்


(ஈ) சங்கத்தின் அங்கத்தினர்களின் தொழிற்சங்க உரிமைகளை பாதுகாத்து அத்துடன் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.

(உ) பொதுவான பிரச்சினைகளுக்காக தேவையான மத்தியஸ்தத்தை வழங்குவதுடன் தேவைப்படும் தன்மையில் சங்கத்தின் அங்கத்தினர்களுக்கு ஆதரவு வழங்கல்.

இந்த விண்ணப்பத்திற்கெதிராக ஆட்சேபனை தெரிவிக்க விரும்பும் எந்தவொரு நபர், கம்பனி அல்லது கூட்டுத்தாபனம் அவ்வாறான ஆட்சேபனைகளை இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 21 நாட்களில் கடித மூலம் கொழும்பு-10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, 400 ஆம் இலக்கத்திலுள்ள ''சமாகம் மெதுர'' என்ற முகவரியின் கம்பனிகளின் பதிவாளர் நாயகத்திற்கு தெரிவிக்கலாமென இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.


18.06.2024. தாபகர்: ஜே.எம். அன்ரன் நிஷாந்த பெரேரா (நிஷாந்த ஜயகொடி)

# சிறு விளம்பரம்




## மோட்டார் வாகனங்கள்





### 106 கார்கள் விற்பனைக்கு

19 9571 DAEWOO CIELO CAR அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216, தி ங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 040376



### 117 வேன்கள் விற்பனைக்கு

SGGU - 3485 NISSAN VANETTE VANஅதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 0774789216, தி ங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமைவரை மாத்திரம் அழைக்கவும். 040374

50 SRI 7886 TOYOTA HIACE VANஅதி யு யர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி . 0770107270, 077 4789216, தி ங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 040384




### 119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

LG-4918 TATA ACE 2009 Lorry, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 0711 210810. 040046

QL-0223 Bajaj 2 0 07 Three-wheel, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழு ம்பு 03. தொலைபேசி 0711 210810. 040038

WPPQ - 7868 MAH I NDRA MAXXIMO TRUCK அ தியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216, தி ங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 040373

WPPQ - 8924 MAHI-NDRA M AXXIMO TRUCK அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, க ண்டி . 07701072 70, 077 4789216, தி ங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 040379



### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

EP BJD - 5563 TVS NTORQ BIKE அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216, தி ங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 040370

EP B JD - 8687 BAJAJ DIS-COVE R 125அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 0774789216, தி ங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 040371

NC BIK - 8067 YAMAHA RAY - ZRஅ தி யுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, க ண்டி . 0770107270, 077 4789216, தி ங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 040369

SG BHM - 7137 YAMAHA RAY - ZR BIKE அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பி எல்சி, கண்டி. 0770107270, 0774789216, திங்கட்கிழமையிலி ருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 040382

SPBHL - 9892 YAMAHA FZ BIKE அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216, திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 040377

WPYN - 6189 MAHINDRA ALFA THREE WHEELERஅதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216, திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 040380


Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams


# MINISTRY OF EDUCATION
## VOCATIONAL TRAINING AUTHORITY OF SRI LANKA

VTA

## Invitation for Bids (IFB)

### Construction Work in Vocational Training Centers of Vocational Training Authority of Sri Lanka.

| S. No | District | Description (Title) | Procurement No. | Engineer's Estimate (Without Contingencies & Vat) Rs.Mn | Value of Refundable Bid Security | Eligibility of Bidder CIDA (Successor to ICTAD) Grading (Building) | Non Refundable Document fee |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | Gampaha | Construction of Steel Roof on Concrete Column – Beam Structure on the First Floor Slab of Existing Building at District Vocational Training Centre at Veyangoda | VTA/PROC/ Works/MSF/NCB/ 2023/29 | 26.40 | Cash **Rs.198,000.00** (payable to cashier of VTA) or **Rs.396,000.00** Bid Security from Bank | C - 05 or C – 04 | 3500.00 |
| 2. | Nuwaraeliya | Construction of Steel Roof on Concrete Column – Beam Structure on the First Floor Slab of Existing Building at District Vocational Training Centre at Nuwaraeliya | VTA/PROC/ Works/MSF/NCB/ 2023/28 | 17.90 | Cash **Rs.134,000.00** (payable to cashier of VTA) or **Rs. 268,000.00** Bid Security from Bank | C - 06 or C – 05 | 3500.00 |
| 3. | Kegalle | Construction of Steel Roof on Concrete Column – Beam Structure on the First Floor Slab of Existing Building at District Vocational Training Centre at Ballapana | VTA/PROC/ Works/MSF/NCB/ 2023/30 | 23.00 | Cash **Rs.173,000.00** (payable to cashier of VTA) or **Rs.346,000.00** Bid Security from Bank. | C - 06 or C – 05 | 3500.00 |
| 4. | Anuradha pura | Construction of Steel Roof on Concrete Column – Beam Structure on the First Floor Slab of Existing Building at District Vocational Training Centre at Bulnewa | VTA/PROC/ Works/MSF/NCB/ 2023/31 | 10.70 | Cash **Rs.75,000.00** (payable to cashier of VTA) or **Rs. 150,000.00** Bid Security from Bank | C - 06 or C – 05 | 3500.00 |
| 5. | Nuwaraeliya | Rehabilitation and Improvements of Existing Retaining Wall & Fence District Vocational Training Center at Nuwaraeliya, Nuwaraeliya District | VTA/PROC/ Works/TF/NCB/ 2024/01 | 5.00 | Cash **Rs.28,500.00** (payable to cashier of VTA) or **Rs. 57,000.00** Bid Security from Bank | C - 08 or above | 2000.00 |

01. The Chairman, Department Procurement Committee on behalf of the Vocational Training Authority of Sri Lanka now invites sealed bids from eligible and qualified bidders for above Construction work of the Vocational Training Centers.

02. Bidding will be conducted through National Competitive Bidding. (NCB). Since the Estimated value of work to be performed under this procurement (excluding VAT and Taxes) is below Rs.50Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in the Public Finance Circular No. 04/ 2016 (iii) (Expect Construction of Serial no 5 of above)

03. Bidders who have not been black listed are eligible to award contract and they are informed to go through the Pre-Qualification requirements to Qualify for the contract award of the above Construction Works stated in the section 4 and 5 of each bidding document.

04. Interested eligible bidders may obtain further information from the Assistant Director (Procurement) of VTA from **18/06/2024 to 08/07/2024**, from **09.00 A.M to 3.00 P.M** on working days and inspecting of the Bidding Documents can be done at the address given below.

Assistant Director (Procurement)
Procurement Unit
Vocational Training Authority of Sri Lanka
4th Floor, "Nipunatha Piyasa", 354/2,
Elvitigala Mawatha, Narahenpita, Colombo 05
Tel. 011-2596516, 071 9476753

05. A complete set of bidding documents prepared in English Language may be purchased by the interested bidders on submission of a written application with the copy of CIDA (**Successor to ICTAD**) registration by the Bidder himself or by bidders' representatives to the address given above (in item 4) and upon payment of non-refundable document fee as per the above schedule for each procurement document, from **9.00 A.M to 3.00 P.M** from **18/06/2024 to 08/07/2024** on Working days. The mode of payment shall be in cash in favor of Chairman, Vocational Training Authority of Sri Lanka.

06. Refundable Bid Security as per the above schedule should be either by Cash to Cashier of VTA or from any Commercial Bank approved by the Central Bank of Sri Lanka and should be addressed to the Chairman, Vocational Training Authority of Sri Lanka.

07. **Pre-Bid Meeting** will be held on **28/06/2024 at 10.30 a.m.** at the **Procurement Unit**, 4th Floor at Vocational Training Authority of Sri Lanka, Colombo 05.

08. Completed bids in two copies in two separate envelops indicating the name of the project in upper left corner as **Original** & **Duplicate,** and encase them in one envelop, sealed, and must be delivered by registered post or by courier service to the address given below or can be deposited in the Bid Box kept at the Procurement Unit, 4th floor of the "Nipunatha Piyasa", Vocational Training Authority on or before **2.30 P.M** on **09/07/2024**. Late bids will be rejected. Bids will be opened in the presence of the bidders or their representative's right after the bid closing.

09. Any bidder can bid for one or several contracts indicated in the schedule and submit separate bids. Each and every bid shall be accompanied by a Bid Security of amount described in the above table.

10. The title of the bid should be clearly mentioned in the top left corner of the bid submission envelope as specified in Procurement No. mentioned in the above Table and the Description of the Procurement.

11. The decision of this Department Procurement Committee is final and conclusive. The Department Procurement Committee is empowered to reject any Bid at its own discretion.

Chairman,
Department Procurement Committee,
Vocational Training Authority of Sri Lanka
4th floor "Nipunatha piyasa", 354/2, Elvitigala Mawatha,
Narahenpita,, Colombo 05

# சுகாதார அமைச்சு

## விலைமனு கோரல்

### எய்ட்ஸ், காச நோய் மற்றும் மலேரியா ஆகியவற்றுக்கான உலகளாவிய நிதித் திட்டம் (GFATM)

**procurement of Non-health product items need to be managed STI (Sexual Transmission Infection) in key populations, Refurbishment of pharmacy and pharmacy stores and storage facilities for pharmaceutical items for the National STD/AIDS Control Program**

முக்கிய சமூகங்களில் STI (பாலியல் ரீதியாக பரவுகின்ற தொற்று) நிர்வகித்தல், மருந்துகள் மற்றும் மருந்தகங்களின் மருசீரமைப்பு மற்றும் தேசிய பாலியல் நோய்/ எய்ட்ஸ் தடுப்பு வேலைத்திட்டத்திற்கான மருந்து பொருட்களுக்கு களஞ்சிய வசதிகளுக்கான சுகாதாரம் அல்லாத தயாரிப்பு பொருட்களின் பெறுகைக்காக தகுதியுடைய வழங்குநர்களிடம் இருந்து புகுயுவுஆ திட்டத்தின் கீழான தேசிய பாலியல் நோய்/ எய்ட்ஸ் தடுப்பு வேலைத்திட்டத்தின் சார்பில் பிராந்திய பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

| LOT | Description | Quantity | Bid Security (LKR) | File Number (Procurement Number) | Bid SecurityValidity period in Days |
|---|---|---|---|---|---|
| LOT-1 | Multimedia Projector | 9nos | 18000 | NSACP/GFATM/43/31 7/NON/2023 | 90 days from the bid closing date |
| LOT-2 | Speaker | 10nos | 600 | | |
| LOT-3 | Screen | 15nos | 3750 | | |
| LOT-1 | Supply fabric and fixing cupboard | 294ft | 15122.625 | NSACP/GFATM/43/318/NON/2023 | |
| LOT-1 | Storage steel glass cupboard | 5nos | 2448.75 | NSACP/GFATM/43/319/NON/2023 | |
| LOT-2 | Office table | 2nos | 869.5 | | |
| LOT-3 | Office chair | 2nos | 497.5 | | |
| LOT-4 | Sitting chair | 20nos | 3800 | | |
| LOT-5 | Double-side step ladder | 1nos | 90 | | |
| LOT-6 | Steel 4 drawers filing cabinet | 2nos | 4262.56 | | |
| LOT-1 | Air Conditioner 18000BTU | 10nos | 38000 | NSACP/GFATM/43/320/NON/2023 | |
| LOT-2 | Refrigerator 225L above | 18nos | 81000 | | |
| LOT-1 | Cool boxes | 20nos | 2000 | NSACP/GFATM/43/321/NON/2023 | |
| LOT-1 | Spot lamps | 10nos | 2000 | NSACP/GFATM/43/322/NON/2023 | |

1. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.

2. அனைத்து தொகுதிக்காகவும் 2000 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு கோரிக்கை கடிதம் ஒன்றை சமர்ப்பித்து பொது விடுமுறை நாட்கள் தவிர்த்து 2024 ஜூன் 18ம் திகதி முதல் 2024 ஜூலை 18ம் திகதி வரை, திங்கள் தொடக்கம் வெள்ளி வரை அந்த இரண்டு நாட்களும் உட்பட மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை வரை தேசிய பாலியல் நோய்/ எய்ட்ஸ் தடுப்பு வேலைத்திட்டம், சுகாதார அமைச்சு, இல. 29, டி சேரம் பிளேஸ், கொழும்பு 10 இல் ஆர்வமுடைய விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை பெறலாம்.

   ஒவ்வொரு பெறுகைக்காகவும் விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும்.

3. முறையாக பூர்த்தி செய்யப்பட்டு வெற்று தபால் உறையில் இடப்பட்ட ஓர் அசல் உடன் ஒரு நகலைக் கொண்ட அனைத்து விலைமனுக்களையும் 2024 ஜூலை 18ம் திகதி விலைமனுக்கள் மூடப்படும் நேரமான மு.ப. 10.00 அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது நிர்வாக அதிகாரியின் அறையில் (A/O), தேசிய பாலியல் நோய்/ எய்ட்ஸ் தடுப்பு வேலைத்திட்டம், சுகாதார அமைச்சு, இல. 29, டி சேரம் பிளேஸ், கொழும்பு 10 இல் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தொடர்புடைய கொள்முதல் இல குறிப்பிடப்பட வேண்டும். (உதாரணம்: "**NSACP/GFATM/43/317/NON/2023**")

4. ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் GFATM-NSACP பெறுகை அலுவலகம், சுகாதார அமைச்சு, 7ஆவது மாடி, மிட்ஹவுஸ் கட்டிடம், இல. 26, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10 இல் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு அலுவலக நேரங்களில் விலைமனு ஆவணத்தை பரீட்சிக்க முடியும்.

5. விலைமனுக்களை திறக்கும் நேரத்தில் பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் பொதுவெளியில் அதன் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

6. தேர்வு செய்யப்பட்ட விலைமனுதாரர்கள் நாடு முழுவதும் அமைந்துள்ள உள்ள எமது STD சிகிச்சை நிலையங்களுக்கு (எமது STD சிகிச்சை நிலையங்கள் - கொழும்பு/ கம்பஹா/ வத்துபிட்டிவெல/ களுபோவில/ இரத்தினபுரி/ சிலாபம்/ கேகாலை/ பொலன்னறுவை/ கிளிநொச்சி/ மாத்தறை/ நீர்கொழும்பு/ பதுளை/ குருநாகல்/ ஹோமாகம/ அநுராதபுரம்) பொருட்களை விநியோகிப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

தலைவர்,
பிராந்திய கொள்முதல் குழு,
தேசிய பாலியல் நோய்/ எய்ட்ஸ் தடுப்பு வேலைத்திட்டம்,
இல. 29, டி சேரம் பிளேஸ், கொழும்பு 10.

தொலைபேசி: 070 4986708

# ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

## கேள்வி கோரல்களுக்கான அழைத்தல்

**Ref. No.: Q 279/24**

## SUPPLY, INSTALLATION & MAINTAIN OF GAS ANALYZER ON CONSUMABLE BASIS

A. 5 வருடங்களுக்கு **Blood Gas Analyzer** on consumable with machine investment basis (Supply, installation & maintain of 01 No. Blood Gas Analyzer) என்பதற்காக ஆர்வமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விக் கோரல்களை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

B. கேள்விக் கோரலானது தேசிய போட்டிரீதியிலான கேள்விக்கோரல் நடைமுறையினூடாக நடத்தப்படும்.

C. 2024.06.19 ஆம் திகதியிலிருந்து 2024.07.10 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மூவாயிரத்து ஐந்நூறு ரூபாவை செலுத்திய பின்னர், நுகேகொட, தளபத்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை, வழங்கல் அலுவலருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் ஆங்கில மொழியிலுள்ள கேள்விக் கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள கேள்விதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

D. கேள்விக் கோரல்கள் 2024.07.11 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கேள்விக் கோரல்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை, தளபத்பிட்டிய என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். கேள்விக்கோரல்கள் சமுகமளித்திருக்கும் கேள்விதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.

E. 2024.07.03 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு வைத்தியசாலையின் சபை அறையில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தளபத்பிட்டிய,**
**நுகேகொட.**



## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**(இலங்கை அரசினால் நிதியளிக்கப்பட்ட திட்டங்கள்)**

### காலி – கரன்தெனிய, யட்டகல, கைத்தொழில் பேட்டையில் உடைக்கற் சுவர் மற்றும் பாதுகாப்பு அறையுடன் நுழைவாயில், பெயர் பலகையின் நிர்மாணம்

கீழ் விபரிக்கப்பட்டவாறு செலவு மதிப்பீட்டுடன் காலி - கரன்தெனிய, யட்டகல, கைத்தொழில் பேட்டையில் உடைக்கற் சுவர் மற்றும் பாதுகாப்பு அறையுடன் நுழைவாயில், பெயர் பலகையின் நிர்மாணத்திற்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து காலி - மாவட்ட செயலக, மாவட்ட செயலாளரின் சார்பில் காலி, மாவட்ட செயலக, பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

| விபரம் | மீளளிக்கப் படாத விலைனு ஆவணக் கட்டணம் (ரூபா) | மீளளிக்கப் படும் விலைமனு பிணை (ரூபா) | நிர்மாணக் காலம் (நாட்கள்) | மதிப்பிடப்படும் செலவு (மில். ரூபா) |
|---|---|---|---|---|
| காலி - கரன்தெனிய, யட்டகல, கைத்தொழில் பேட்டையில் உடைக்கற் சுவர் மற்றும் பாதுகாப்பு அறையுடன் நுழைவாயில், பெயர் பலகையின் நிர்மாணம் | 3,500.00 | 100,000.00 | 90 நாட்கள் | 9.8 |

2. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்
3. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்குத் தேவையான தகைமை பின்வருமாறு:
   - விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதிருத்தல் வேண்டும்.
   - C6 அல்லது C7 தரத்திற்கு CIDA பதிவு மற்றும் வர்த்தகப் பதிவு
4. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் 091-4944806 காலி - மாவட்ட செயலக, மாவட்ட பொறியியலாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2024.07.08 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை அலுவலக நேரங்களில் மேலுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
5. மீளளிக்கப்படாத கட்டணமாக 3500 ரூபாவை செலுத்தி 2024.06.08 ஆம் திகதி தொடக்கம் 2024.07.08 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை காலி, மாவட்ட செயலகம், மாவட்ட செயலாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் வைப்புச் செய்யப்படல் வேண்டும் என்பதோடு காலி, மாவட்ட செயலகம், 2ஆவது மாடியில் சிறாப்பரினால் வழங்கப்படும் பற்றுச்சீட்டை பெறுதல் வேண்டும்.
6. விலைமனுக்களை 2024.07.09 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், காலி என்ற கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் இரு பிரதிகளாக அனுப்புவது அல்லது அதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.
7. விலைமனு மூடப்படும் திகதியில் இருந்து 77 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும். விலைமனு செல்லுபடிக் காலத்திற்கு அப்பால் 28 நாட்கள் வரை விலைமனு பிணை செல்லுபடியாக இருத்தல் வேண்டும். எனவே விலைமனுப் பிணை 2024.10.22 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் முறையே செல்லுபடியான தொகை மற்றும் எழுத்திலான முதல் கோரலில் கிடைக்கும் வகையுடன் இந்த விலைமனு ஆவணத்தில் தரப்பட்ட வடிவத்திற்கு இக்கட்டான பிறழ்வு ஒன்று இன்றி வழங்கப்பட்ட நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்க விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். ரூபா 100,000.00 இன் ஏற்க முடியுமான விலைமனு பிணை இலங்கை மத்திய வங்கியின் கீழ் செயற்படும் வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்டது ஏற்கப்படும்.

   **அல்லது**

   காலி, மாவட்ட செயலக, 2அவது மாடியில் உள்ள சிறாப்பருக்கு ரொக்கப்பணத்தில் வைப்புச் செய்து விலைமனுவுடன் பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**மேல் குறிப்பிடப்பட்ட முகவரியானது:**
**மாவட்ட செயலாளர்,**
**மாவட்ட செயலகம், காலி.**

திகதி: 2024.06.18




## காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**லக்கல பிரதேச செயலாளரின் குறிப்பு இல: 11/3/3/1/14J/02**
**காணி அமைச்சின் குறிப்பு இல.: LD/05/2008/MV/408I**

இங்கு கீழே காட்டப்பட்டிருக்கும் அட்டவணையில் விபரிக்கப்படும் காணியை மொரகஹகந்த களுகங்கை அபிவிருத்தித் திட்டத்திற்காக எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள். மேலதிக விபரங்களுக்கு இலக்கம் 2374/25 கொண்ட 2024.03.06 திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு அதிவிஷேட வர்த்தமானியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| மாவட்டம் | : | மாத்தறை |
| பிரதேச செயலாகப் பிரிவு | : | லக்கல பல்லேகம |
| கிராம அலுவலர் பிரிவு | : | இல. E 396 B அகரஹெடிய |
| கிராமம் | : | அகரஹெடிய (குறிப்பிட்ட ஆரம்ப வரைபடத்திற்கு இணங்க) |
| காணியின் பெயர் | : | மேற்குறித்த இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின்படி |
| வரைபட இலக்கம் | : | க.சீ. 310243, வலய இல. 28 பத்திர இல. 2 |
| துண்டு இலக்கம் | : | 1 |
| விஸ்தீரணம் | : | 1.1378 ஹெக்டயார் |

**ச்வர்ணா பெரேரா,**
**பிரதேச செயலாளர்,**
**லக்கல**

**2024.06.11ஆம் திகதி**
**லக்கல பிரதேச செயலகத்தில்**

## காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**லக்கல பிரதேச செயலாளரின் குறிப்பு இல: 11/3/3/1/14J/01**
**காணி அமைச்சின் குறிப்பு இல.: LD/05/2008/MV/408K**

இங்கு கீழே காட்டப்பட்டிருக்கும் அட்டவணையில் விபரிக்கப்படும் காணியை மொரகஹகந்த களுகங்கை அபிவிருத்தித் திட்டத்திற்காக எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள். மேலதிக விபரங்களுக்கு இலக்கம் 2374/25 கொண்ட 2024.03.06 திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு அதிவிஷேட வர்த்தமானியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| மாவட்டம் | : | மாத்தளை |
| பிரதேச செயலாகப் பிரிவு | : | லக்கல பல்லேகம |
| கிராம அலுவலர் பிரிவு | : | இல. E 396 B அகரஹெடிய |
| கிராமம் | : | அகரஹெடிய (குறிப்பிட்ட ஆரம்ப வரைபடத்திற்கு இணங்க) |
| காணியின் பெயர் | : | மேற்குறித்த இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின்படி |
| வரைபட இலக்கம் | : | க.சீ. 310243, வலய இல. 28 பத்திர இல.1 |
| துண்டு இலக்கம் | : | 1 |
| விஸ்தீரணம் | : | 6.9013 ஹெக்டயார் |

**ச்வர்ணா பெரேரா,**
**பிரதேச செயலாளர்,**
**லக்கல**

**2024.06.11ஆம் திகதி**
**லக்கல பிரதேச செயலகத்தில்**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### பிரதான அமைச்சு
### சப்ரகமுவ மாகாண சபை

சப்ரகமுவ மாகாணத்தின் மாகாண வைத்தியசாலைகளில் பின்வரும் அத்தியாவசிய அபிவிருத்தி செயற்றிட்டத்திற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள மற்றும ஆற்றல் உள்ள விலைமனுதாரர்களிடமிருந்து சப்ரகமுவ மாகாண சபை பிரதான அமைச்சின் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

- மேலதிக விபரங்களை www.sg.gov.lk எனும் இணையதளத்திற்குப் பிரவேசித்து அங்குள்ள பிரதான அமைச்சின் இணைதள பக்கத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
- இது தொடர்பிலான மேலதிக தகவல்களை பிரதான அமைச்சிற்கு வருகை தந்து அல்லது 045-2222204 எனும் தொலைபேசி இலக்கத்தில் அலுவலக வேலை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். தேவையானவர்கள் வேலை நாட்களில் விலைமனுக்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
- 2024-06-18ஆம் திகதி முதல் 2024-07-09ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைமனுக்கள் வழங்கப்படும்.
- 2024-07-10ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தலைவர்,**
**பிரதான அமைச்சின் பெறுகைக் குழு,**
**பிரதான அமைச்சு,**
**சப்ரகமுவ மாகாண சபை,**
**புதிய நகரம்,**
**இரத்தினபுரி.**
**தொலைபேசி: 045-2222204**

**2024-06-18ஆம் திகதி**

## பொதுமக்களின் கருத்துரைகளுக்கான இலங்கை தரநிருணய கட்டளைகளின் வரைவு

1. பயணிகள் கார் டயர்களுக்கான இலங்கை தரநிருணய கட்டளைகளின் விபரக்குறிப்புக்கள்.
   (முதலாம் மீள்பதிப்பு) SLS 1212:20XX
2. 1 ஆம் மற்றும் 2 ஆம் வகையான நீர் வழங்கல் முறைகளுக்காக சுகாதார குழாய் பொருள் - தனி குழாய்கள் மற்றும் இணைந்த குழாய்களுக்கான இலங்கை தரநிருணய கட்டளைகளின் விபரக்குறிப்புக்கள் - தொழில்நுட்ப விபரக்குறிப்புக்கள் SLS XXX: 20XX

மேலேயுள்ள வரைவு தரநிருணய கட்டளைகளுக்கான கருத்துரைகளை பொதுமக்கள் மற்றும் ஏனைய ஆர்வமுள்ள குழுக்களிடமிருந்து இலங்கை தரநிருணய கட்டளைகள் நிறுவனமானது கோருகின்றது.

இந்த வரைவுகள் இறுதி வடிவம் பெறுவதற்கு முன்னராக இலங்கை தரநிருணய கட்டளைகள் நிறுவனத்தின் உரித்தான குழுக்களினால் பெற்றுக் கொண்ட கருத்துரைகள் பரிசீலனை செய்யப்படும்.

மேலேயுள்ள திருத்த தரநிருணய கட்டளைகளின் பிரதிகளை இலங்கை தரநிருணய கட்டளைகள் நிறுவன ஆவணமாக்கல் மற்றும் தகவல் பிரிவிலிருந்து இலவசமாக பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் www.slsi.lk என்ற இணையத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்யலாம்.

2024.08.18 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கருத்துரைகள் பணிப்பாளர் நாயகத்தை வந்தடைதல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை தரநிருணய கட்டளைகள் நிறுவனம்,
இல. 17, விக்டோரியா இடம்,
எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு-08.

தொலைபேசி : 011-2671567-72
மின்னஞ்சல் : dg@slsi.lk
இணையம் : www.slsi.lk

**இலங்கை தரநிருணய கட்டளைகள் நிறுவனம்**
**தொழில்நுட்பவியல் அமைச்சு.**

# INVITATION FOR BIDS (IFB)

## Department of Agrarian Development, Batticaloa District

01. The Chairman of the District Procurement Committee of Department of Agrarian Development, Batticaloa invites sealed Bids from eligible and qualified Bidders for the renovation of Minor tank as described in the table below.
02. Bidding will be conducted through National Competitive Bidding (NCB). Since the Estimate value of work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 Mn,. Regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016 (iii).
03. If the bid value is 30% or higher percentage less than the engineer's estimate, the bid will be rejected as per public finance circular No. 03/2020(i) of 11.01.2021
04. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the CIDA/ICTAD registration and qualification listed below. Additional details are provided in the Bidding Documents.
05. Interested eligible bidders may obtain further information and inspect the bidding documents at the Department of Agrarian Development, Temple Road, Kalliyankadu, Batticaloa during office hours.
06. A complete set of bidding documents in English language should be purchased by interested bidders on the submission of a written application to the Deputy Commissioner, Department of Agrarian Development, Temple Road, Kalliyankadu, Batticaloa from 20.06.2024 to 05.07.2024 from 9.00 hrs to 14.00 hrs, upon payment of a non-refundable fee of Rs. 2,500.00 for each set. The method of payment will be by cash.
07. Bids shall be delivered with duplicate copy in a separate envelope to the **Chairman, District Procurement Committee, Department of Agrarian Development, Temple Road, Kalliyankadu, Batticaloa** at or before **14.00 hrs on 08.07.2024.** Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
08. All bids shall be accompanied by a Bid security issued by a commercial bank operating in Sri Lanka, and approved by the Central Bank of Sri Lanka, shall be valid up to 90 days after the deadline for bid submission. The amount of Bid Security shall be as per the details given below.
09. VAT payment will be paid to the Bidders who attach the valid VAT Registration Certificate with Bids.
10. Pre-Bid meeting will be held at Department of Agrarian Development, Temple Road, Kalliyankadu, Batticaloa, commencing at 10.00 a.m. on 03.07.2024.
11. The table referred to above is:

| No. | Contract No. | Title of Contract | Estimated value of work (Excluding VAT & other taxes) | Required ICTAD Registration | Bid Security Amount (Rs) | Bid Security Valid Period | Contract Period (Calendar Days) |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | BT/DAD/MI/ MAVETTUWAN | Renovation of Mavettuwan Tank at Kiran ASC | 7.30 Mn | C8, C7 & C6 (Irrigation) | 146,000.00 | 05.10.2024 | 90 days |

**Chairman,**
**District Procurement Committee,**
**Department of Agrarian Development,**
**Batticaloa.**

# தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு உறுப்பினர் ஒருவரை நியமித்தல்

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவி ஒன்றுக்கு ஏற்பட்டிருக்கும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு இது தொடர்பில் ஆர்வம் காட்டுகின்ற நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 155அ சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், மாகாண சபை உறுப்பினர் ஒருவர் அல்லது உள்ளூராட்சி நிறுவன உறுப்பினராயின் அவ்வாறான ஒருவர் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவராக நியமிப்பதற்கு தகுதி இல்லை என்பதாகும். மேலும், ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவராக நியமிப்பதற்கு முன்னர் அரச அதிகாரி அல்லது நீதிமன்ற அதிகாரியாக அரச சேவையில் இருந்த அனைவரும் அந்த நியமனம் அமுலுக்கு வந்த உடன் தாம் வகித்த பதவியை துறக்க வேண்டும் என்பதோடு அரச அதிகாரி ஒருவர் அல்லது நீதிமன்ற அதிகாரி ஒருவராக தொடர்ந்தும் நியமிப்பதற்கு அவர் தகுதியற்றவராவார்.

விண்ணப்பங்களை, பாராளுமன்ற இணையதளத்தில் (www.parliament.lk) விரைவான இணைப்பின் கீழ் 'தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்களை நியமித்தல்' என்ற பெயரில் வெளியிடப்பட்டிருக்கும் மாதிரிக்கு அமைய தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு, முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2024 ஜூலை மாதம் 01 திகதி அல்லது அன்றைக்கு முன்னர்,

**அரசியலமைப்புச் சபையின் பொதுச் செயலாளர்**
**அரசியலமைப்புச் சபை - அலுவலகம்**
**இலங்கை பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே.**

என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது constitutionalcouncil@parliament.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்/ மின்னஞ்சலில் விடயமாக 'தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்களை நியமித்தல் என்று குறிப்பிடவும்.

அரசியலமைப்புச் சபையின் ஆணைக்கு அமைய வெளியிடப்பட்டது.

**அரசியலமைப்புச் சபையின் பொதுச் செயலாளர்**
**அரசியலமைப்புச் சபை - அலுவலகம்**
**இலங்கை பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே.**

2024.06.16

இணைப்பு-01

## 2011ஆம் ஆண்டு 40ஆம் இலக்கச் சட்டத்தின் திருத்தப்பட்ட 2006ஆம் ஆண்டு 5ஆம் இலக்கம் எனும், நிதி மோசடியை தடுக்கும் சட்டத்தின் 8(3) பிரிவின் பிரகாரம் விடுக்கப்படும் அறிவித்தல்

2023-05-10ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் HC SPL/13/2024 இலக்கத்தின் கீழ் 2011ஆம் ஆண்டு 40ஆம் இலக்கச் சட்டத்தின் திருத்தப்பட்ட 2006ஆம் ஆண்டு 5ஆம் இலக்கம் எனும், நிதி மோசடியை தடுக்கும் சட்டத்தின் 8(2) (ஆ) பிரிவின் பிரகாரம் இல. 05, சென் ஆன்ஸ் வீதி, வெலிகம்பிட்டிய, ஜாஎல எனும் முகவரியில் வசிக்கும் வர்ணகுலசூரிய சத்துரிகா அனுவாரி வீரசூரிய என்பவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள WP CBE 1746 எனும் இலக்க டொயோட்டா பிரிமியோ வகையான மோட்டார் வாகனம் தொடர்பாக சட்டவிரோத சொத்துக்கள் விசாரணை பிரிவினால் 2006ஆம் ஆண்டு 5ஆம் இலக்கம் எனும், நிதி மோசடியை தடுக்கும் சட்டத்திற்கு அமைய அந்தச் சட்டத்தின் 7(1) அத்தியாயத்தின் பிரகாரம் 2024-05-06ஆம் திகதி முதல் 07 நாட்களுக்கு வலுவிழக்கச் செய்யும் கட்டளை பிறப்பிக்கப்பட்டதன் பின் இந்தச் சட்டத்தின் 8(2) அத்தியாயத்தின் பிரகாரம் கால எல்லையை நீடிப்பதற்காக செய்யப்பட்ட வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் வழக்கு இலக்கம் HC SPL/13/2024 என்பதன் கீழ் 2006ஆம் ஆண்டு 5ஆம் இலக்கம் எனும், நிதி மோசடியை தடுக்கும் சட்டத்தின் 8(2) (ஆ) பிரிவின் பிரகாரம் 2024-05-12ஆம் திகதி முதல் எதிர்வரும் 03 மாத காலத்திற்கு அமுலாகும் வகையில் வலுவிழக்கச் செய்யும் கட்டளை நீடிக்கப்பட்டுள்ளது என்பதுடன், மூன்றாம் தரப்பினருக்கு வசதிகள் வழங்கும்பொருட்டு அறிந்துகொள்வதற்காக பிரசுரிக்கப்படுகின்றது.

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## மீட்கப்படாத அடகுத் தங்க நகைகளை பகிரங்க ஏலத்தில் விற்றல்

வரையறுக்கப்பட்ட வயம்ப கூட்டுறவு கிராமிய வங்கி சங்கத்தின் பிரதிநிதிகளாக செயற்படுகின்ற வரையறுக்கப்பட்ட அலவ்வ பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அலவ்வ அடகுப் பிரிவு, ஹும்முலுவ, உடுமுல்ல, நவதல்வத்த, மடவள, வில்கமுவ, மஹரச்சிமுல்ல, போயவலான, பம்பதெனிய, கல்கடுவ, பொரமடல, புஜ்ஜொமுவ, வலக்கும்புர, அப்போவ, கந்தேகெதர ஆகிய கிராமிய வங்கிக் கிளைகளில் 2023.04.30ம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு 2024 ஏப்ரல் 30ம் திகதி வரை மீட்கப்படாத தங்க நகைகள் அடகுப் பொருட்கள் 2024 ஜூலை 27ம் திகதி மு.ப. 10.00 இற்கு வரையறுக்கப்பட்ட அலவ்வ பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமையக கூட்ட மண்டபத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**பொது முகாமையாளர்,**
**வரையறுக்கப்பட்ட அலவ்வ பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**நாரம்மல வீதி, அலவ்வ.**
**037-2278131**

## கம்பனிகள் பதிவாளர் நாயகத்திடம் இருந்து உரிமம் ஒன்றுக்கான விண்ணப்பம்

2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 34ஆவது பிரிவின் கொள்வனவில், சீஹெல சொபா தம் கம்மானய என்ற பெயரின் கீழ் சம்மேளனம் ஒன்றாக நிறுவுவதற்கு, அதன் பெயருக்கு வரையறுக்கப்பட்ட என்ற மேலதிக வார்த்தை இன்றி வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் பதிவு செய்து உரிமம் பெறுவதற்காக கம்பனிகள் பதிவாளர் நாயகத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்மேளனத்திற்கான நோக்கங்களாக நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டவை:-

a) ''சீஹெல சொபா தம் கம்மானய'' வின் உறுப்பினர்கள் இடையே கூட்டுறவு, ஒருமைப்பாடு மற்றும் சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்தல்
b) கிராம மக்களிடையே பரஸ்பரம் புரிந்துணர்வை வளர்ப்பது மற்றும் 'ஹெல' மரபு பொறிமுறைகளை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை அளித்தல், பரஸ்பரம் மரியாதையை உறுதிப்படுத்தல். தமக்கிடையிலான அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்தல் மற்றும் சம்பிரதாய அறிவை பரிமாற்றும் அதேநேரம் கிராம மக்களிடையே ஐக்கியத்தை ஊக்குவித்தல்.
c) சம்பிரதாய விவசாய அறிவை பாதுகாத்தல் மற்றும் ஊக்குவித்தல்.
d) பாரம்பரிய பெறுமானங்கள் மற்றும் கூட்டு உரிமைகளை மேம்படுத்தல். மோதல்கள் இன்றி நிலம் மற்றும் வளங்களை பகிர்ந்து கொள்ளும் நடைமுறைகளை ஊக்குவித்தல் மற்றும் ஆதரவு வழங்கல்.
e) சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலையான வாழ்க்கை. சுற்றுச்சூழலுடன் இணங்கி வாழ்வதற்கான அறிவு மற்றும் விலங்குகள் மற்றும் தாவரங்களை பாதுகாப்பதை உறுதி செய்தல்.
f) கூட்டு உரிமை மற்றும் சமூக வள முகாமைத்துவத்தின் நன்மைகள் தொடர்பில் சமூகங்களை அறிவூட்டல்.
g) சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டில் செயலூக்கத்துடன் பங்கேற்பதற்கு பெண்கள், இளைஞர்கள் மற்றும் அனைத்து சமூக உறுப்பினர்களையும் வலுவூட்டல்.
h) பொது சொத்துகளை விற்பது, பரிமாற்றுவது, உப பிரிவுகளாக்கல் அல்லது அடமானம் வைக்க முடியாது.
i) ''சீஹெல சொபா தம் கம்மானய'' வின் உறுப்பினர்களின் நலன்புரிக்கான வீதிகள், சமூக மைய ஆலயம், காணிகள், கட்டிடங்கள் மற்றும் ஏனைய சொத்துகள் போன்ற பொது வளங்களை நிர்வகித்தல்.
j) உறுப்பினர்களின் நலன்புரி செயற்பாடுகளை மேம்படுத்தல் மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான சேவைகளை வழங்கல்.
k) பல்வேறு சமய செயற்பாடுகள், சமய விழாக்கள், கலாசார நிகழ்ச்சிகள், கலாசார மரபு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, விவசாய அபிவிருத்தி, கல்வி நிகழ்ச்சிகள், இலக்கிய செயற்பாடுகள் மற்றும் கலாசார நிகழ்ச்சிகள் அதேபோன்று அவர்களின் மேம்பாடுகளை ஊக்குவித்தல்.
l) சமூக பங்கேற்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்ற அனர்த்த முகாமைத்துவத்திற்கு சமூகம் சார்ந்த அணுகுமுறையை உருவாக்குதல்.
m) கல்வி வழி உள்ளூர் அறிவை மீட்டெடுத்தல், கலாசார புரிதலை ஊக்குவித்தல், உற்பத்தி செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்கு கிராம மக்களை ஊக்குவித்தல், மற்றும் உள்ளூராட்சி மற்றும் சம்பிரதாய தலைமைத்துவ கட்டமைப்புகளை வலுப்படுத்தல்.
n) சமய செயற்பாடுகள் மற்றும் ஏற்கனவே நிறுவப்பட்ட இடங்களை தொடர்தல் மற்றும் மேம்படுத்தல்.
o) பாரம்பரிய மருத்துவம் மற்றும் சிகிச்சை நுட்பங்களுக்கு புத்துயிர் அளித்தல்.
p) சுற்றுச்சூழலுக்கு சாதகமான தொழில்நுட்பங்களின் மேம்பாடு.
q) கூட்டுறவு மற்றும் பரஸ்பர மரியாதையை உறுதி செய்யும் உரையாடல் மற்றும் முன்முயற்சிகளை வளர்த்தல்.
r) நிறுவனத்தின் மேற்கூறிய நோக்கங்களுக்கு பொருந்தும் மற்றும் செயற்படும் அது போன்ற மற்ற நடவடிக்கைகள் மற்றும் விடயங்கள்.

சம்மேளனத்தின் நோக்கங்கள் சம்மேளன சரத்துகளில் அமைக்கப்பட்டுள்ளன. அதன் பிரதி ஒன்றை கம்பனிகள் பதிவாளர் நாயகத்திடம் பரீட்சிக்கலாம் என்பதோடு, ''கொழும்பு 10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, இல. 400, சமாகம் மெதுர, கம்பனிகள் பதிவாளர் நாயகத்திற்கு'' பெயரிடப்பட்ட கடிதம் ஒன்றின் மூலம் 2024 ஜூலை 10 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர், ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அனுப்ப முடியும்.

Repeat Your Ad For Better Offers

## காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**லக்கல பிரதேச செயலாளரின் குறிப்பு இல. 11/3/3/1/14 S**

**காணி அமைச்சின் குறிப்பு இல. LD/05/2008/MV/408 H**

இங்கு கீழே காட்டப்பட்டிருக்கும் அட்டவணையில் விபரிக்கப்படும் காணியை மொரகஹகந்த, களுகங்கை அபிவிருத்தித்திட்டத்திற்காக எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள். மேலதிக விபரங்களுக்கு இலக்கம் 2374/27 கொண்ட 2024.03.07 திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு அதிவிஷேட வர்த்தமானியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

மாவட்டம் : மாத்தளை
பிரதேசச் செயலகப் பிரிவு : லக்கல - பல்லேகம
கிராம அலுவலர் பிரிவு : இல.E 396 B அகரஹெடிய
கிராமம் : அகரஹெடிய

(குறிப்பிட்ட ஆரம்ப வரைபடத்திற்கு இணங்க)
காணியின் பெயர் : மேற்குறித்த இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின்படி
வரைபட இலக்கம் : க.சீ 310243, வலய இல.16 பத்திர இல.2
துண்டு இலக்கம் : 1,3
விஸ்தீரணம் : 1.5865 ஹெக்டயார்

**ச்வர்ணா பெரேரா**
**பிரதேச செயலாளர்**
**லக்கல.**

**2024 / 06 / 06 ஆம் திகதி**
**லக்கல பிரதேச செயலகத்தில்**

## பெறுகை அறிவித்தல்

### கல்வி அமைச்சு
### தொழில்நுட்பக்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்
### பொருட்களின் பெறுகை

### தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் (NCB)

**மேசைக் கணனிகள், புகைப்படப் பிரதி இயந்திரங்கள் மற்றும் பேஸ்ட்ரி மற்றும் பேக்கரி, தொழில்சார்ந்த சமையல் கற்கைநெறிகளுக்கான உபகரணங்களை வழங்குதல், நிறுவுதல், நடைமுறைப்படுத்தல் மற்றும் பரீட்சித்தல் - 2024**

தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து 01ஆம், 02ஆம் மற்றும் 03ஆம் விலைக்கோரல் இலக்கப் பொருட்களுக்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழு பணிப்பாளர் நாயகம் கோருகின்றார்.

| பொருட்கள் | எண்ணிக்கை | வருடாந்த சராசரி புரள்வு | மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் ரூபா | விநியோகிக்க வேண்டிய இடம் |
|---|---|---|---|---|
| **விலைக்கோரல் இல. 01**<br>மேசைக் கணனிகள் | 60 | 20 மில்லியன் | 5,000.00 | தொழில்நுட்பக்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் |
| **விலைக்கோரல் இல. 02**<br>புகைப்படப் பிரதி இயந்திரங்கள்<br>1) பொதுவானவை<br>2) கனரகம் | <br><br>- 17<br>- 01 | 10 மில்லியன் | 3,000.00 | தொழில்நுட்பக்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் மற்றும் அம்பாறை, அநுராதபுரம், காலி, குருநாகல், கண்டி, பலப்பிட்டிய, களுத்துறை, கேகாலை, மெதகம, சம்மாந்துறை, வாரியபொல, ஹசலக்க தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பவியல் கல்லூரிகள் |
| **விலைக்கோரல் இல. 03**<br>பேஸ்ட்ரி மற்றும் பேக்கரி மற்றும் தொழில்சார்ந்த சமையல் கற்கை நெறிகளுக்கான உபகரணங்கள்<br>1) Stainless steel work table<br>2) 4 gas burners cooker top<br>3) Stainless steel stand support for cooker Top<br>4) 10L spiral mixer<br>5) Deck oven (Two Door Four Tray)<br>6) Dough sheter<br>7) Fly killer | <br><br>- 14<br>- 05<br>- 08<br>- 04<br>- 03<br>- 04<br>- 04 | 15 மில்லியன் | 5,000.00 | குருநாகல், கண்டி, ஆனமடுவ, நுவரெலியா தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பவியல் கல்லூரிகள் |

1. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரலின் (NCB) ஊடாக விலைமனுக்கோரல்கள் இடம்பெறும்.
2. ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்களுக்கு விலைக்கோர விலைமனுதாரர்கள் அனுமதிக்கப்படுவர்.
3. பல்வகை (Multiple) விருப்பத் தெரிவுகள் அனுமதிக்கப்பட மாட்டாது.
4. விலைமனுதாரர்கள் மேற்கூறிய வருடாந்த சராசரி புரள்வுகள் சகிதம் 01ஆம் மற்றும் 2ஆம் விலைக்கோரல் இலக்கத்திற்காக 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்கான மற்றும் 03ஆம் இலக்க விலைக்கோரலுக்காக 3 வருடங்களுக்கு மேற்பட்ட செல்லுபடியாகும் வியாபாரப் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். தேவைப்பாடுகளை நிரூபிப்பதற்கு தேவையான ஆவணங்களை வழங்குதல் வேண்டும்.
5. 01ஆம் 02ஆம் மற்றும் 03ஆம் இலக்க விலைக்கோரல் ஆவணங்களுக்காக மீளளிக்கப்படாத கட்டணங்களைச் செலுத்தி மற்றும் 2024 ஜூன் 18ஆம் திகதி முதல் 2024 ஜூலை 09ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 09.30 மணி முதல் பி.ப. 2.45 மணி வரை பின்வரும் முகவரிக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கொழும்பு 10, த.பெ. இல. 557, ஒல்கொட் மாவத்தை, தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் தொழில்நுட்ப ஒத்துழைப்பு சேவை பிரிவிலிருந்து ஆங்கில மொழியிலான விலைக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை கொழும்பு 10, த.பெ. இல. 557, ஒல்கொட் மாவத்தை, தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் நிதிப் பிரிவு காசாளர் கருமபீடத்திற்கு ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் வேலை நாட்களில் (தொலைபேசி: 0112327008, மின்னஞ்சல்: dss@dtet.gov.lk) அல்லது கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள இணையதளத்தின் ஊடாக மேலதிக தகவல்களை இந்தத் திணைக்களத்தின் தொழில்நுட்ப ஒத்துழைப்பு சேவை பிரிவிலிருந்து இந்தக் காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் விலைக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. விலைமனுக்களை 2024 ஜூலை 11ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும் என்பதுடன் பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் தொழில்நுட்ப ஒத்துழைப்பு சேவை பிரிவில் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''விலைக்கோரல் இலக்கம் மற்றும் விலைக்கோரலின் பெயர்'' என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும்.
8. ஒவ்வொரு விலைமனுவுடனும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு வர்த்தக வங்கியிலிருந்தும் பெற்றுக்கொண்ட 01ஆம் இலக்க விலைக்கோரலுக்கு 90,000.00 ரூபா மற்றும் 02ஆம் மற்றும் 03ஆம் இலக்க விலைக்கோரல்களுக்கு 75,000.00 ரூபா பெறுமதியான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 2024 நவம்பர் 08ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும் என்பதுடன் அது தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும்.
9. சகல உபகரணங்களுக்குமான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024 ஜூன் 26ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் மாநாட்டு அறையில் (2ஆம் மாடி) இடம்பெறும்.
10. மேற்கூறிய எந்தவொரு அல்லது சகல கேள்விகளையும் நிராகரிக்கும் உரிமையையும் மற்றும் காரணம் காட்டாமல் எந்தவொரு கேள்வியின் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரிமையையும் மற்றும் ஆகக்குறைந்த கேள்வியை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கடப்பாடு இல்லை என்பதையும் தன்னகத்தே கொண்டுள்ளார்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்,**
**த.பெ. இல. 557, ஒல்கொட் மாவத்தை,**
**கொழும்பு - 10.**
**2024-06-18.**

**இணையதளம்:** www.diet.gov.lk

## சுகாதார அமைச்சு

### மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கான பெறுகை அறிவித்தல்

**02 MRI ஸ்கேனர்கள் மற்றும் 03 CT ஸ்கேனர்களின் (64 துண்டு) வழங்கல், விநியோகம், நிறுவுதல், செயற்படவைத்தல் மற்றும் பராமரிப்பு**

**(ஒப்பந்த இல.: BES/PE/PLAN/2024/01 மற்றும் BES/PC/PLAN/2024/04)**

1. கீழ் குறிப்பிடப்பட்ட இறுதித் திகதியில் மு.ப. 10.00 வரை கொழும்பு 10, சங்கராஜ மாவத்தை, மெடி ஹவுஸ் கட்டிடம், இல. 26, 2ஆவது மாடி, சுகாதார அமைச்சு, நிலையான அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழு, தலைவரினால் மேல் குறிப்பிடப்பட்ட மருத்துவ உபகரணங்களின் வழங்கல், விநியோகம், நிறுவுதல், செயற்படவைத்தல் மற்றும் பராமரிப்புக்கான முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்கப்படும்.

| | உருப்படி | சு.அ. அலுவலகத்தில் மேற்கொள்வதற்கு மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | மதிப்பிடப்பட்ட செலவு (ரூபா) மில்லியனில் | விலைமனு ஆவணங்களை பெறும் காலம் | | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | தொடக்கம் | வரை | |
| 1 | 02 MRI ஸ்கேனர்கள் | 100,000.00 | 1000 | 2024.06.18 | 2024.07.09 | 2024.07.10 மு.ப. 10.00 |
| 2 | 03 CT ஸ்கேனர்கள் | 60,000.00 | 600 | | | |

2. இலங்கை சந்தைக்கு மருத்துவ உபகரணங்களின் உற்பத்தியாளர்களது பரிந்துரைக்கப்பட்ட ஏக பிரதிநிதிகள்/ அங்கீகாரம் பெற்ற முகவர்கள் மாத்திரமே இந்தப் பெறுகையில் பங்கேற்க தகுதி பெறுவர்.
3. மேல் குறிப்பிடப்பட்ட காலத்தில் மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 14.00 இற்கு இடையே கொழும்பு 10, சங்கராஜ மாவத்தை, மெடி ஹவுஸ் கட்டிடம், இல. 26, 2ஆவது மாடி, சுகாதார அமைச்சு, மேலதிகச் செயலாளரிடம் (பெறுகை) இருந்து எந்த ஒரு ஆர்வமுடைய தகுதிபெற்ற விலைமனுதாரர்களினால் இரு பிரதிகளில் விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்ய முடியும்.

   (தொ. இல.: 011-2112713, 2112715 – தொலைநகல் இல.: 011-2112745)
4. விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் கொழும்பு 10, சங்கராஜ மாவத்தை, மெடி ஹவுஸ் கட்டிடம், இல. 26, 2ஆவது மாடி, சுகாதார அமைச்சு, மேலதிக செயலாளரின் (பெறுகை) அலுவலகத்தில் அவை உடன் திறக்கப்படும்.
5. விலைமனு ஆவணங்களை கொழும்பு 10, சங்கராஜ மாவத்தை, மெடி ஹவுஸ் கட்டிடம், இல. 26, 2ஆவது மாடி, சுகாதார அமைச்சு, மேலதிக செயலாளரின் (பெறுகை) அலுவலகத்தில் கட்டணம் இன்றி பரீட்சிக்கலாம்.
6. அனைத்து விலைமனுக்களும் MRI இயந்திரங்களுக்காக 15,000,000.00 இலங்கை ரூபா மற்றும் CT ஸ்கேனர்களுக்காக 9,000,000.00 இலங்கை ரூபாவின் விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணையானது கொழும்பு 10, சங்கைக்குரிய பத்தேகம விமலவன்ச தேரர் மாவத்தை, 385, சுகாதார அமைச்சு செயலாளரின் பெயரில் விலைமனு மூடப்பட்ட திகதியில் இருந்து 2024.12.04 திகதி வரை (147 நாட்கள்) செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
7. மேலதிக விபரங்களை 011-2112713 என்ற தொலைபேசி இலக்கத்தில் மேலதிக செயலாளரிடம் (பெறுகை) இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
8. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு கொழும்பு 10, டி சேரம் மாவத்தை, 27, சுகாதார அமைச்சு, DDG/ உயிர் மருத்துவ பொறியியல் சேவைகள் அலுவலகத்தில் 2024.06.28 ஆம் திகதி மு.ப. 10.00 இற்கு இடம்பெறும்.

**தலைவர்,**
**நிலையான அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழு, சுகாதார அமைச்சு,**
**2ஆவது மாடி, இல. 26, மெடி ஹவுஸ் கட்டிடம்,**
**சங்கராஜ மாவத்தை,**
**கொழும்பு 10**

## காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**லக்கல பிரதேச செயலாளரின் குறிப்பு இல. 11/3/3/1/14 I/1**

**காணி அமைச்சின் குறிப்பு இல. LD/05/2008/MV/408 E**

இங்கு கீழே காட்டப்பட்டிருக்கும் அட்டவணையில் விபரிக்கப்படும் காணியை மொரகஹகந்த, களுகங்கை அபிவிருத்தித் திட்டத்திட்காக எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள். மேலதிக விபரங்களுக்கு இலக்கம் 2374/27 கொண்ட 2024.03.07 திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு அதிவிஷேட வர்த்தமானியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

மாவட்டம் : மாத்தளை

பிரதேசச் செயலகப் பிரிவு : லக்கல - பல்லேகம

கிராம அலுவலர் பிரிவு: இல.E 396 B அகரஹெடிய

கிராமம் : வெளிவிட்ட

(குறிப்பிட்ட ஆரம்ப வரைபடத்திற்கு இணங்க)

காணியின் பெயர் : மேற்குறித்த இலக்கம் கொண்ட

அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின்படி

வரைபட இலக்கம் : க.சீ 310243,வலய இல.28 பத்திர இல.7

துண்டு இலக்கம் : 1

விஸ்தீரணம் : 0.1549 ஹெக்டயார்

வரைபட இலக்கம் : க.சீ 310243,வலய இல.28 பத்திர இல.8

துண்டு இலக்கம் : 1,2

விஸ்தீரணம் : 0.0376 ஹெக்டயார்

வரைபட இலக்கம் : க.சீ 310243, வலய இல.28 பத்திர இல.9

துண்டு இலக்கம் : 1,2

விஸ்தீரணம் : 3.5381 ஹெக்டயார்

**ச்வர்ணா பெரேரா**
**பிரதேச செயலாளர்,**
**லக்கல**

**2024 / 06 / 06 ஆம் திகதி**
**லக்கல பிரதேச செயலகத்தில்**

---

## சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு
## இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA)
# ஆர்வ வெளிப்பாடு (EOI)

### மதிப்புமிக்க சுற்றுலா விருதுகள் 2024 நிகழ்வை வடிவமைத்தல் மற்றும் நடத்துவதற்கான தனிப்பட்ட ஆலோசகர் ஒருவரை பணியமர்த்தல்

**ஒப்பந்த இல.: SLTDA/IRU/S/NS/ProjectManager-Tourism Award/2024/43**

1. மதிப்புமிக்க சுற்றுலா விருதுகள் 2024 நிகழ்வை வடிவமைத்தல் மற்றும் நடத்துவதற்கான தனிப்பட்ட ஆலோசனை சேவைகளை வழங்குவதற்கு தமது ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கு பொருத்தமான மற்றும் தகுதியுடைய ஆலோசகர்களுக்கு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் திணைக்கள ஆலோசனை பெறுகைக் குழு, தலைவரினால் அழைப்பு விடுக்கப்படுகிறது.
2. அதன்படி, ஆர்வமுடைய தனிப்பட்ட ஆலோசகர்கள் குறிப்பு விதிமுறைகளில் (TOR) தரப்பட்டுள்ள குறிப்பிடப்பட்ட சேவைகளை மேற்கொள்வதற்காக தகுதியை குறிப்பிடும் விபரங்களை வழங்கல் வேண்டும்.
3. விரிவான குறிப்பு விதிமுறைகள் (TOR) 2024 ஜூன் 18 ஆம் திகதி தொடக்கம் 2024 ஜூன் 28 ஆம் திகதி வரை உங்களது பார்வைக்காக SLTDA இணையதளத்தில் (http://www.sltda.lk/careers) கிடைக்கப்பெறும் என்பதோடு TOR இனை பார்ப்பதற்கு கோரப்படுகின்றனர்.
4. ஆர்வமுடைய ஆலோசகர்கள் மின்னஞ்சல்: sltdaproc@srilanka.travel அல்லது sagarikaw@srilanka.travel, தொலைபேசி இலக்கம்: 0112426800, கொழும்பு 03, காலி வீதி, இல. 80, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, பெறுகைப் பிரிவு (4ஆவது மாடி), உதவிப் பணிப்பாளர் (பெறுகை) இடமிருந்து மேலதிக விபரங்களை பெறலாம்.
5. ஆர்வமுடைய தனிப்பட்ட ஆலோசகர்கள் தேவையான தொடர்புடைய முந்தைய தகைமை மற்றும் தொடர்புடைய முந்தைய அனுபவத்தை நிரூபிப்பதற்கு சான்றிதழ்களின் பிரதிகளுடன் தமது சுயவிபரக்கோவையை 2024 ஜூன் 28 அன்று 14.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'மதிப்புமிக்க சுற்றுலா விருதுகள் 2024 நிகழ்வை வடிவமைத்தல் மற்றும் நடத்துவதற்கான தனிப்பட்ட ஆலோசகர' என்று குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.
6. குறுகிய பட்டியலில் சேர்க்கப்பட்ட தனி நபர்களுக்கு நேர்முகப்பரீட்சை நடைபெறும் என்பதோடு திணைக்கள ஆலோசனை பெறுகைக் குழுவின் முடிவு தேர்வு நடைமுறையின் இறுதி முடிவாகும்.

**தலைவர்,**
**திணைக்கள ஆலோசனை பெறுகைக் குழு,**
**பெறுகைப் பிரிவு (4ஆவது மாடி)**
**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை,**
**இல. 80, காலி வீதி, கொழும்பு 03.**

---

# கேள்விக்கான அழைப்பு

## இலங்கை தேசிய வைத்தியசாலை - கொழும்பு - 10
## (சுகாதார அமைச்சு)

### சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்கள் கொள்வனவு செய்தல்

01. 2024.07.09 மு.ப.10.00 வரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் கீழே குறிப்பிடப்படும் சத்திரசிகிச்சை பொருட்கள் வழங்குவதற்காக பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

| உருப்படி இல | உருப்படி | தொடர் இல | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூ) |
|---|---|---|---|
| 01 | Drug Eluting Coronary Stent | SG/19E/2024/03 | 1,500.00 |
| 02 | Single Chamber ICD | SG/19(S)/2024/03 | 2,000.00 |
| 03 | CRT - P Generator | SG/19(CP)/2024/01<br>SG/19(CP)/2024/02 | 7,000.00 |
| 04 | CRT - D Device | SG/19(CD)/2024/01 | 4,000.00 |
| 05 | Left Proximal Tibia Mega Prosthesis | SG/41(77)/2024/02 | 1,000.00 |
| 06 | Percutaneous Introducer Sets & Guide-wire | SG-IV/18/2024/40 | 4,000.00 |
| 07 | Guidewire | SG-IV/18/2024/41 | 4,000.00 |
| 08 | Nephrostomy Drainage Sets | SG-IV/18/2024/42 | 4,000.00 |
| 09 | Visaral Catheter Picard | SG-IV/18/2024/43 | 4,000.00 |
| 10 | Angiographic Puncture Needle | SG-IV/18/2024/39 | 4,000.00 |

02. இலங்கை சந்தைக்கு உபகரணங்களை உற்பத்தி செய்து வழங்கும் உற்பத்தியாளர்களால் பெயர் குறிப்பிடப்படும் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் மட்டும் இக்கேள்வி அழைப்பிற்காக சமுகமளிப்பதற்கு தகைமை பெறுவீர்.
03. இவ் ஆவணங்களை 2024.06.18 முதல் 2024.07.08 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.30 முதல் பி.ப.3.00 வரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு மேலே தரப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டை சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல - 0112691111 நீடிப்பு - 2722)
04. பொறியிடப்பட்ட கேள்விகள் 2024.07.09 மு.ப.10.00 இற்கு முன்பு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைப்பதாயின், இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதம கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அவை திறக்கப்படும்.
05. மேலதிக தகவல்கள் தேவையாயின் இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதம கணக்காளரிடம் விசாரித்துப் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல - 011-2694595)

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை**
**கொழும்பு - 10**

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## முதல் அமைச்சு,
## வட மேல் மாகாண சபை

1. அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு நிர்மாணங்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து வ.மே.மா. - முதல் அமைச்சு, செயலாளரின் சார்பில் குருநாகல், மாகாண சபை அலுவலகத் தொகுதி, 'பி' வாயில், 1ஆவது மாடி, வ.மே.மா. – முதல் அமைச்சு, அமைச்சு பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.
2. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும். (24/CM/PW-NCB/OT-02 விலைமனு குறிப்பு தவிர்த்து) 04/2016(ii) ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டவாறு இந்தப் பெறுகையின் மதிப்பிடப்படும் மொத்த செலவு 50 மில். ரூபாவுக்கு உட்பட்டதாக இருக்கும் வரை பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை பொருந்தும்.
3. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் CIDA பதிவின் பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தம் வழங்குதற்கான தகுதிக்குத் தேவையான தகைமையில் உள்ளடங்குவன: விலைமனு ஆவணத்தில் உள்ளடக்கப்பட்ட தொழில்நுட்ப, நிதி, சட்டம் மற்றும் மற்ற தேவைகள்.
5. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் cmprac20@gmail.com என்ற மின்னஞ்சல், 037 2228188 என்ற தொலைபேசி மற்றும் தொலைநகல் இலக்கத்தில் குருநாகல், மாகாண சபை அலுவலகத் தொகுதி, முதல் அமைச்சு – வ.மே.மா., தலைமை கணக்காளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும். கணக்கு பிரிவு, முதல் அமைச்சு, தரைத் தளம், 'விதுசர' ('பி' வாயில்), மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல்.
6. கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை 2024 ஜூன் 18 ஆம் திகதி தொடக்கம் 2024 ஜூலை 15ஆம் திகதி வரை குருநாகல், மாகாண சபை அலுவலகத் தொகுதி, முதல் அமைச்சு – வ.மே.மா., தலைமை கணக்காளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியை வாங்கலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.
7. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு குருநாகல், மாகாண சபை அலுவலகத் தொகுதி, லிச்சவி மண்டபத்தில் 2024 ஜூலை 02 ஆம் திகதி 10.00 மணிக்கு இடம்பெறும்.
8. விலைமனுக்களை 2024 ஜூலை 16 ஆம் திகதி மு.ப. 10.00 அல்லது அதற்கு முன்னர் தலைவர், அமைச்சு பெறுகைக் குழு, முதல் அமைச்சு – வ.மே.மா., 1ஆவது மாடி, 'பி' வாயில், மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல் என்ற முகவரிக்கு இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். வ.மே.மா. – முதல் அமைச்சின் கணக்குப் பிரிவில் (தரைத் தளம், 'விதுசர' 'பி' வாயில்) வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இட வேண்டும். பங்கேற்பதற்கு விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முந்நிலையில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.
9. விலைமனுதாரர்கள் 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் 2.2 உப பிரிவின் கீழ் (5 மில்லியனுக்கு மேற்பட்ட மதிப்பிடும் செலவு) பதிவு செய்த சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

| விலைமனு இல. | ஒப்பந்தத் தலைப்பு | பிரதேச பொறியியலாளர் அலுவலகம் | தேவையான CIDA தரம் (கட்டிடம்) | விலை மனுக்களின் செல்லுபடிக் காலம் | விலைமனு பிணை தொகை (ரூபா) | விலைமனு பிணை செல்லுபடிக் காலம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| 24/CM/PW-NCB/PSDG-19 | சாகுரா மாதிரி பாலர் பாடசாலையில் கூரையை சீரமைத்தல் | குருநாகல் | C9 மற்றும் C8 | 02.09.2024 | 9,000.00 | 30.09.2024 | 500.00 |
| 24/CM/PW-NCB/PSDG-20 | சாகுரா மாதிரி பாலர் பாடசாலையில் கழிப்பறையை சீரமைத்தல் | குருநாகல் | C8 மற்றும் C7 | 16.09.2024 | 28,000.00 | 14.10.2024 | 1,500.00 |
| 24/CM/PW-NCB/PSDG-21 | புத்தளத்தில் தமிழ் ஆசிரியர்கள் பயிற்சி நிலையத்தை சீரமைத்தல் | புத்தளம் | C9 மற்றும் C8 | 02.09.2024 | 16,500.00 | 30.09.2024 | 1,200.00 |
| 24/CM/PW-NCB/PSDG-22 | குருநாகல் ஹோட்டல் பாடசாலையில் வாயில் கதவு காவல் கூடத்தின் நிர்மாணம் | குருநாகல் | C8 மற்றும் C7 | 16.09.2024 | 27,000.00 | 14.10.2024 | 1,500.00 |
| 24/CM/PW-NCB/PSDG-23 | கிரி/ ஹம்புலுவாவ ம.வி. இல் பெண்கள் கழிப்பறை தொகுதியின் நிர்மாணம் | குருநாகல் | C8 மற்றும் C7 | 16.09.2024 | 28,000.00 | 14.10.2024 | 1,500.00 |
| 24/CM/PW-NCB/PSDG-24 | கு/ அலகொலதெனிய பௌத்த வித்தியாலயத்தில் பெண்கள் கழிப்பறை தொகுதியின் நிர்மாணம் | ரிதிகம | C8 மற்றும் C7 | 16.09.2024 | 27,000.00 | 14.10.2024 | 1,500.00 |
| 24/CM/PW-NCB/PSDG-25 | இப்பாகமுவ ஆதர்ஷ ம.வி. இல் ஆண்கள் கழிப்பறை தொகுதியின் நிர்மாணம் | ரிதிகம | C8 மற்றும் C7 | 16.09.2024 | 24,000.00 | 14.10.2024 | 1,500.00 |
| 24/CM/PW-NCB/PSDG-26 | அனுக்கன முஸ். வி. இல் ஆண்கள் கழிப்பறை தொகுதியின் நிர்மாணம் | குளியாப்பிட்டி | C8 மற்றும் C7 | 16.09.2024 | 24,000.00 | 14.10.2024 | 1,500.00 |
| 24/CM/PW-NCB/PSDG-27 | தெமட்டுலுவ ம.வி. இல் பெண்கள் கழிப்பறை தொகுதியின் நிர்மாணம் | வாரியபொல | C8 மற்றும் C7 | 16.09.2024 | 27,500.00 | 14.10.2024 | 1,500.00 |
| 24/CM/PW-NCB/PSDG-28 | பொத்துவட்டவன ம.வி. இல் பெண்கள் கழிப்பறை தொகுதியின் நிர்மாணம் | வென்னப்புவ | C8 மற்றும் C7 | 16.09.2024 | 27,500.00 | 14.10.2024 | 1,500.00 |
| 24/CM/PW-NCB/PSDG-29 | குணபால மலலசேகர வி. பெண்கள் கழிப்பறை தொகுதியின் நிர்மாணம் | மாஹோ | C8 மற்றும் C7 | 16.09.2024 | 27,000.00 | 14.10.2024 | 1,500.00 |
| 24/CM/PW-NCB/PSDG-30 | கன்னங்கர க.வி. இல் பெண்கள் கழிப்பறை தொகுதியின் நிர்மாணம் | புத்தளம் | C8 மற்றும் C7 | 16.09.2024 | 27,500.00 | 14.10.2024 | 1,500.00 |
| 24/CM/PW-NCB/PSDG-31 | குளியாப்பிட்டிய, செய்கி மாதிரி பாலர் பாடசாலையில் கட்டிட புனரமைப்பு | குளியாப்பிட்டி | C9 மற்றும் C8 | 02.09.2024 | 15,500.00 | 30.09.2024 | 500.00 |
| 24/CM/PW-NCB/PSDG-32 | குருநாகல், சகுரா பாலர் பாடசாலையின் எல்லைச் சுவர் நிர்மாணம் | குருநாகல் | C8 மற்றும் C7 | 16.09.2024 | 26,000.00 | 14.10.2024 | 1,500.00 |
| 24/CM/PW-NCB/PSDG-33 | நாத்தாண்டி, ஜனாதிபதி கல்லூரியில் 110x25 மூன்று மாடி வகுப்பறைக் கட்டிடத்தின் (கட்டம் ii) நிர்மாணம் | வென்னப்புவ | C6 மற்றும் C5 | 30.09.2024 | 238,000.00 | 28.10.2024 | 6,500.00 |
| 24/CM/PW-NCB/PSDG-34 | மாதம்பை, செபஸ்தோனியன் க.வி. இல் 90x25 மூன்று மாடி வகுப்பறைக் கட்டிடத்தின் (கட்டம் ii) நிர்மாணம் | வென்னப்புவ | C6 மற்றும் C5 | 30.09.2024 | 148,000.00 | 28.10.2024 | 4,500.00 |
| 24/CM/PW-NCB/PSDG-35 | நி/ மினுவன்கடே பி.வி. இல் தரைத்தள மண்டபத்துடன் 90x25 இரண்டு மாடி கட்டிடத்தின் முதல் மாடி வகுப்பறையின் (கட்டம் ii) எஞ்சிய வேலை | வாரியபொல | C6 மற்றும் C5 | 30.09.2024 | 170,000.00 | 28.10.2024 | 5,000.00 |
| 24/CM/PW-NCB/PSDG-36 | பொல்கஹவெல, பேர்னாதெத் மாதிரி மகா வித்தியாலயத்தின் மூன்று மாடி வகுப்பறை கட்டிடத்தின் நிர்மாணம் (கட்டம் iii) | குருநாகல் | C4 மற்றும் அதற்கு மேல் | 14.10.2024 | 560,000.00 | 11.11.2024 | 13,000.00 |
| 24/CM/PW-NCB/PSDG-37 | போயகனே ம.வி. இல் பெண்கள் கழிப்பறை தொகுதியின் நிர்மாணம் | குருநாகல் | C9 மற்றும் C8 | 02.09.2024 | 12,000.00 | 30.09.2024 | 1,000.00 |
| 24/CM/PW-NCB/PSDG-38 | வாரியபொலவில் கட்டுமுலுவ க.வி. இன் கழிப்பறை தொகுதியின் (2ஆவது) நிர்மாணம் | வாரியபொல | C9 மற்றும் C8 | 02.09.2024 | 9,000.00 | 30.09.2024 | 500.00 |
| 24/CM/PW-NCB/PCF-01 | ஜனாதிபதி விஞ்ஞானக் கல்லூரியில் 90x25 மூன்று மாடி வகுப்பறைக் கட்டிடத்தின் 1ஆவது மாடியின் (கட்டம் ii) நிர்மாணம் | புத்தளம் | C6 மற்றும் C5 | 30.09.2024 | 134,000.00 | 28.10.2024 | 4,500.00 |
| 24/CM/PW-NCB/PCF-02 | லுனுவில பௌத்த பி.வி. இன் 70x25 இரண்டு மாடி வகுப்பறைக் கட்டிடத்தின் (கட்டம் ii) நிர்மாணம் | வென்னப்புவ | C6 மற்றும் C5 | 30.09.2024 | 120,000.00 | 28.10.2024 | 4,000.00 |
| 24/CM/PW-NCB/PCF-03 | அம்பகொடேவில் அல்/அஸ்ரக் ம.வி. 90x25 மூன்று மாடி கட்டிடத்தின் (கட்டம் iii) எஞ்சிய வேலை | ரிதிகம | C6 மற்றும் C5 | 30.09.2024 | 149,000.00 | 28.10.2024 | 4,500.00 |
| 24/CM/PW-NCB/PCF-04 | அத்துகல்புர வத்ஹிமி பி.வி. இல் 70x25 மூன்று மாடி கட்டிடத்தில் 2ஆவது மாடியின் (கட்டம் iii) நிர்மாணம் | குருநாகல் | C6 மற்றும் C5 | 30.09.2024 | 114,000.00 | 28.10.2024 | 4,000.00 |
| 24/CM/PW-NCB/PCF-05 | மஹாமிலிய க.வி. இல் 90x25 மூன்று மாடி கட்டிடத்தின் (கட்டம் ii) நிர்மாணம் | வென்னப்புவ | C6 மற்றும் C5 | 30.09.2024 | 160,000.000 | 28.10.2024 | 5,000.00 |
| 24/CM/PW-NCB/PCF-06 | மாதம்பை கல்முருவ ஹேரத் குணரத்ன ம.வி. இல் 90x25 மூன்று மாடி வகுப்பறை கட்டிடத்தின் (கட்டம் ii மற்றும் iii) நிர்மாணம் (எஞ்சிய வேலை) | வென்னப்புவ | C6 மற்றும் C5 | 30.09.2024 | 120,000.00 | 28.10.2024 | 4,000.00 |
| 24/CM/PW-NCB/PCF-07 | சாலியவெவ சாலிய பி.வி. (சித்தார்த்த பிவி) இல் 90x25 இரண்டு மாடி வகுப்பறை கட்டிடத்தின் (கட்டம் ii) நிர்மாணம் | புத்தளம் | C6 மற்றும் C5 | 30.09.2024 | 171,000.00 | 28.10.2024 | 5,500.00 |
| 24/CM/PW-NCB/PCF-08 | வேஹர குருநாகல், எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க கல்லூரியின் 90x25 மூன்று மாடி கட்டிடத்தின் இரண்டாவது மாடியின் நிர்மாணம் | குருநாகல் | C6 மற்றும் C5 | 30.09.2024 | 234,000.00 | 28.10.2024 | 6,500.00 |
| 24/CM/PW-NCB/NSBS-04 | கும்புக்வெவ ம.வி. இல் இரண்டு மாடி தொழில்நுட்பக் கட்டிடத்தின் நிர்மாணம் (எஞ்சிய வேலை) | ரிதிகம | C7 மற்றும் C6 | 30.09.2024 | 93,000.00 | 28.10.2024 | 3,500.00 |
| 24/CM/PW-NCB/NSBS-05 | ரம்படகல்ல ம.வி. இல் இரண்டு மாடி தொழில்நுட்பக் கட்டிடத்தின் நிர்மாணம் (எஞ்சிய வேலை) | ரிதிகம | C6 மற்றும் C5 | 30.09.2024 | 132,000.00 | 28.10.2024 | 4,500.00 |
| 24/CM/PW-NCB/NSBS-06 | தொடுவெவ, புனித அந்தோனியார் நவோத்யா பாடசாலையில் கேட்போர் கூடத்துடன் 90x25 மூன்று மாடி வகுப்பறை கட்டிடத்தின் நிர்மாணம் (எஞ்சிய வேலை) | வென்னப்புவ | C5 மற்றும் C 4 | 14.10.2024 | 282,000.00 | 11.11.2024 | 7,500.00 |

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**முதல் அமைச்சு - வ.மே.மா.,**
**1ஆவது மாடி, "விதுசர" "பி" வாயில்,**
**மாகாண சபை அலுவலக தொகுதி, குருநாகல்,**
தொ.பே. 037-2225364
2024.08.18

# இலங்கையை வந்தடைந்த வீர வீராங்கனைகள்!



தென்கொரியாவின் மோக்போ நகரில் நடைபெற்ற Asian Throwing Championships 2024 போட்டிகளில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி தங்கப் பதக்கம் மற்றும் 2 வெண்கலப்ப தக்கங்களை வென்ற இலங்கை வீர, வீராங்கனைகள் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

சுமார் 20 ஆசிய நாடுகள் பங்கேற்ற இந்தப் போட்டி கடந்த 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் தென்கொரியாவின் மோக்போ நகரில் நடைபெற்றது.

இப்போட்டிகளில் ஈட்டி எறிதல் போட்டியில் கலந்து கொண்ட இலங்கை விமானப் படையை பிரதிநிதித்துவப்படுத்தும் 21 வயதான ருமேஷ் தரங்க 85.45 மீற்றர் தூரம் ஈட்டி எறிந்து இலங்கை சாதனையையும் போட்டி சாதனையையும் முறியடித்தார்.

இந்த எறிதல் தூரம் ஒலிம்பிக் சாதனையை விட 5 செ.மீ குறைவாகவிருந்தது, இதன் மூலம் ருமேஷ் தரங்க உலக தரவரிசையில் 9 ஆவது இடத்தை பெற்றுள்ளார்.

இந்த போட்டியில் கலந்து கொண்ட இலங்கை இராணுவத்தின் தில்ஹானி மற்றும் சுமேதா ரணசிங்க ஆகியோர் வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளனர்.

# திருமண பந்தத்தில் இணைந்தார் தர்ஜினி சிவலிங்கம்



இலங்கையின் வலைப்பந்து நாமத்தை சர்வதேசம் வரை கொண்டு செல்வதற்கு முக்கிய காரணமாக அமைந்தவர், ஆசியாவின் உயரமான வலைப்பந்து வீராங்கனை (208CM) என்ற பெருமைக்குரிய யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் பெண்மணி தர்ஜினி சிவலிங்கம் நேற்று திருமண பந்தத்தில் இணைந்துகொண்டார்.

தர்ஜினி சிவலிங்கத்துக்கு நேற்று சென்னை நியூ ஐலண்ட்ஸ் ஹோட்டலில் திருமணம் நடைபெற்றது. தமிழகத்தின் தென்திருப்பேரையில் வசிக்கும் தொழிலதிபர் ஆர். பிரசாத்தை காதலித்து திருமணம் செய்து கொண்டுள்ளார்.

45 வயதான தர்ஜினி சிவலிங்கம் ஆறடி 10 அங்குல உயரமானவர்.

இலங்கையின் வலைப்பந்தாட்டகளத்தின் புரட்சி வீராங்கனைக்கு 'தினகரன்' திருமண வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறது.

யூரோ கிண்ணம் 2024

## வெற்றியுடன் தொடங்கிய இங்கிலாந்து அணி



யூரோ கிண்ணம் 2024 தொடரில் இங்கிலாந்து அணி தங்களின் முதல் ஆட்டத்தில் வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

ஜேர்மனியில் நடந்துவரும் யூரோ கிண்ணம் 2024ல் இங்கிலாந்து அணி தங்களின் முதல் ஆட்டத்தில் செர்பியாவை எதிர்கொண்டது. ஜூட் பெல்லிங்ஹாம் தலையால் முட்டித்தள்ளிய ஒற்றை கோல் இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு காரணமாக அமைந்துள்ளது.

முதல் பாதியில் இங்கிலாந்து அணி ஆதிக்கம் செலுத்தியிருந்தாலும், இரண்டாவது பாதியில் செர்பியா அணி திண்டாட வைத்துள்ளது. இங்கிலாந்து அணியை நகர முடியாதபடி செர்பியா வீரர்கள் கட்டுப்படுத்தினர்.

இறுதியில் 10 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றுள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமை டென்மார்க் அணியுடன் இங்கிலாந்து மோதவுள்ளது.

# உலக சாம்பியன்ஷிப் போட்டிக்கு மேஜர் ஜெனரல் மகேஷ் தெரிவு

சுவீடனில் நடைபெறவுள்ள உலக சாம்பியன்ஷிப் போட்டிக்கு மேஜர் ஜெனரல் மகேஷ் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் தியகமவில் நடைபெற்ற அகில இலங்கை திறந்த தடகளப் போட்டியில், 55 வயதுக் குட்பட்ட பிரிவில் சுத்தியல் எறிதல் (hammerthrow)போட்டி, பிலிப் பைன்ஸில் நடைபெற்ற போட்டிகள் மற்றும் கண்டியில் நடைபெற்ற போட்டிகளில் தனது திறமையை வெளிப்படுத்தியமையால் அவர் சுவீடனில் நடைபெறவுள்ள உலக சாம்பியன்ஷிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



மேஜர் ஜெனரல் மகேஷ் அபேரத்ன புனித ஜோசப் வாஸ் கல்லூரியின் பழைய மாணவர் மற்றும் தேசிய கரப்பந்து சம்மேளனத்தின் மூத்த துணைத்தலைவராக உள்ளார். இப்போட்டியில் இதுவரை 39.11 மீற்றர்களை பதிவு செய்துள்ள அவர், உலக சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கைக்காக சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு பயிற்சியில் ஈடுபட்டுள்ளார்.

ஆசிய விளையாட்டுப் போட்டியில் வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய அணியின் தலைமை பயிற்சியாளராக கவுதம் காம்பிர்?



இந்திய அணியின் தலைமை பயிற்சியாளராக கவுதம் காம்பிர் இந்த வார இறுதியில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

தற்போதைய தலைமை பயிற்சியாளராக இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டனும் 'சுவர்' என புகழப்படுபவருமான ராகுல் டிராவிட் உள்ளார்.

தற்போது நடந்து கொண்டிருக்கும் இருபது ஓவர் உலக கோப்பை தொடருடன், அவரது பதவிக்காலம் முடிவடையவுள்ளதால் புதிய பயிற்சியாளர் நியமிக்கப்படவுள்ளார்.

அதன்படி, பலகட்ட தேடுதலுக்கு பின்னர் இந்திய அணியின் முன்னாள் வீரர் கவுதம் காம்பிரை பயிற்சியாளராக்க பிசிசிஐ முடிவு செய்துள்ளதாக தெரியவருகின்றது. இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு இந்த வார இறுதியில் வெளியாகவுள்ளதாகவும் கூறப்படுகிறது.





48வது தேசிய விளையாட்டு போட்டிகளுக்கு நெஸ்லே அனுசரணை வழங்கியது. கடந்த 16ஆம் 17 ஆம் திகதிகளில் மஹியங்கணையில் நடைபெற்ற மரதன்,சைக்கிளோட்ட , நடைப் போட்டிகளில் நாட்டின் பிரபல வீர, வீராங்கனைகள் பங்கேற்றனர். பதினாறாம் திகதி இடம்பெற்ற ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் முறையே ரி.டபிள்யூ. ரத்னபால, கே. ஷண்முகேஸ்வரன், எஸ்.ஆர்.ஜீ. அமில சனக்குமார ஆகியோர் பெற்றனர். பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் முறையே டபிள்யூ.எம்.ஹேரத், டபிள்யூ.எம்.நிமேஷா நிதர்ஷி , டபிள்யூ.சி. தமயந்தி ஆகியோரும் பெற்றனர். முதல் மூன்று இடங்களுக்கும் முறையே, 50,000 ரூபா, 40,000 ரூபா, 30,000 ரூபா பரிசில்கள் வழங்கப்பட்டன.



# கனடா கல்கரி நகரில் அவசரகால நிலைமை

கனடாவின்(Canada) ஆல்பர்ட்டா மாகாணத்தின் கல்கரி நகரில் அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த நகரத்தின் மேயர் ஜியொடி கொன்டக்ட் இந்த அவசரகால நிலைமையை பிரகடனம் செய்துள்ளார்.

நகரில் நிலவிவரும் நீர் தட்டுப்பாடு காரணமாக இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் நிலக்கீழ் நீர் விநியோக கட்டமைப்பின் ஓர் பகுதியில் நீர் கசிவு ஏற்பட்டுள்ளதனால் நீர்விநியோகம் பாதிக்கப்பட்டது.இந்த நீர் கசிவினை அடையாளம் கண்டு பழுது பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

நகர மக்களுக்கு போதிய அளவு நீரை விநியோகம் செய்வதில் நகர நிர்வாகம் பெரும் சவால்களை எதிர்நோக்கி வருகின்றது.இந்த நெருக்கடி நிலைமை காரணமாக அரசாங்கம் அவசரகால நிலையை அறிவித்துள்ளது.

நீர்த்தட்டுப்பாட்டு நிலைமையை கருத்தில் கொண்டு அல்பர்ட்டா மாகாண அரசாங்கம் வழங்கிவரும் உதவிகளுக்கு நன்றி பாராட்டுவதாக நகர மேயர் தெரிவித்துள்ளார். ஏற்கனவே நிலவிவரும் நீர் தட்டுப்பாடு காரணமாக நகர மக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சிலர் இந்த தீர்மானத்தை ஆதரித்துள்ளதுடன் பல்வேறு தரப்பினர் இந்த அவசரகால நிலைமை அறிவிப்பினை விமர்சனம் செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்

பிரித்தானிய பொதுத் தேர்தலில்

# பிரதமர் ரிஷி சுனக் தோல்வியடைவார்; வெளியான கருத்துக்கணிப்பு முடிவுகள்

பிரித்தானியாவின் முதல் இந்திய வம்சாவளி பிரதமர் ரிஷி சுனக் (Rishi Sunak) அடுத்த தேர்தலில் தோல்வியடைவார் என கருத்துக்கணிப்புகள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் அவர் தலைமையிலான கன்சர்வேட்டிவ் கட்சி இம்முறை படுதோல்வியடையும் என்று இதுவரை மூன்று கணக்கெடுப்புகளில் தெரியவந்துள்ளது.

மேலும் வெளியான மற்றொரு சமீபத்திய கணக்கெடுப்பு ஜூலை 4ஆம் திகதி நடைபெறும் தேர்தலில் சுனக் மோசமாக தோல்வியடைவார் என்று கணித்துள்ளது.

இதன்படி கணக்கெடுப்பில், தொழிலாளர் கட்சிக்கு ஆதரவு 46 சதவீதமாக இருந்தது, அதே நேரத்தில் கன்சர்வேடிவ் கட்சியின் ஆதரவு 21 சதவீதமாகவுள்ளது.



சண்டே டெலிகிராப் இதழுக்காக சந்தை ஆராய்ச்சி நிறுவனமான Savanta ஜூன் 12 முதல் ஜூன் 14 வரை இந்த ஆய்வை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


மக்கள் தபால் வாக்குகளைப் பெறுவதற்கு சில தினங்களுக்கு முன்புதான் கணக்கெடுப்பு முடிவுகள் வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

650 உறுப்பினர்கள் வரும் பிரித்தானிய பொதுத் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி வெற்றி பெறுவது வெகு தொலைவில் இருக்கும் என்பதை தாங்கள் நடத்திய கருத்துக்கணிப்புகள் காட்டுவதாக Savanta Political Research இன் இயக்குனர் கிறிஸ் ஹாப்கின்ஸ் தெரிவித்துள்ளார்.

650 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் கன்சர்வேடிவ் கட்சி வெறும் 72 இடங்களுக்கு மட்டுமே இருக்கும் என்று சர்வே கணித்துள்ளது.

மேலும், 200 ஆண்டு கால பிரித்தானிய தேர்தல் வரலாற்றில் இது மிகக் குறுகியதாகும். கணக்கெடுப்பின்படி, தொழிலாளர் கட்சி 456 இடங்களைப் பெறும் என குறிப்பிடப்படுகிறது.

# சாதிக்க வயது முக்கியமில்லை": அமெரிக்காவில் 81 வயதில் ரயில் ஓட்டும் மூதாட்டி!



அமெரிக்காவைச் சேர்ந்த 81 வயது மூதாட்டி ஹெலன் ஆண்டனுச்சி, உலகின் மிக வயதான ரயில் ஓட்டுநர் என்ற பெருமையை பெற்றுள்ளார். சாதிக்க வயது முக்கியமில்லை என மூதாட்டியை பலரும் பாராட்டி வருகின்றனர்.

அமெரிக்காவைச் சேர்ந்தவர் ஹெலன் ஆண்டனுச்சி. இவருக்கு வயது 81. இவர் மிக வயதான ரயில் ஓட்டுனர் என்ற பெயரைப் பெற்று, உலக கின்னஸ் சாதனை படைத்துள்ளார். 1995ஆம் ஆண்டு 53 வயதில், ரயில் ஓட்டுநராக பணியை ஹெலன் துவக்கி உள்ளார்.

இது தொடர்பாக, மூதாட்டி ஹெலன் கூறியிருப்பதாவது: " நான் தினமும் விரும்புவதைச் செய்கிறேன். ஒவ்வொரு நாளையும் ஒரு அற்புதமான பயணமாக மாற்றுவதற்கு உறுதுணையாக இருந்த எனது சக பணியாளர்கள், குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் பயணிகள் அனைவருக்கும் நன்றி சொல்ல விரும்புகிறேன். எனது பயணிகளை அவர்கள் செல்ல வேண்டிய இடத்திற்கு அழைத்து செல்வதும், தினமும் அவர்களை சந்திப்பதும் புத்துணர்ச்சி அளிக்கிறது". இவ்வாறு அவர் கூறினார்.

82வயது பிறந்த நாளை நெருங்கிக்கொண்டிருக்கும் மூதாட்டி, தற்போதைக்கு ஓய்வு பெறும் எண்ணம் இல்லை என திட்டவட்டமாக தெரிவித்து, பலரது கவனத்தை ஈர்த்துள்ளார்.

# சிறுமியை பலாத்காரம் செய்த குற்றச்சாட்டு: எடியூரப்பா மீது 3 மணி நேரம் விசாரணை!

பதினேழு வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்ததாக தொடரப்பட்ட வழக்கில் கர்நாடக மாநில முன்னாள் முதல்வர் எடியூரப்பா சிறப்பு புலனாய்வுக் குழு முன்பு நேற்று விசாரணைக்கு ஆஜரானார். அவரிடம் 3 மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டது.

முதல்வர் பதவியில் இல்லாவிட்டாலும் எடியூரப்பாவுக்கு கட்சியில் பதவி அப்படியேதான் உள்ளது. இந்த நிலையில் கடந்த மார்ச் மாதம் எடியூரப்பா மீது 17 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்ததாக பெங்களூர் பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர். இது கர்நாடகாவிலும் பா.ஜ.கவிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த வழக்கை ரத்து செய்யக் கோரி கர்நாடக உயர்நீதிமன்றத்தில் எடியூரப்பா மனுத்தாக்கல் செய்திருந்தார்.

அதே நேரத்தில் இந்த வழக்கை கர்நாடக அரசு சிறப்புப் புலனாய்வு குழுவின் விசாரணைக்கு மாற்றியது. இதையடுத்து எடியூரப்பாவை விசாரணைக்கு ஆஜராக சிறப்புப் புலனாய்வுக் குழு அழைப்பாணை அனுப்பியிருந்தது.



இந்த நிலையில் எடியூரப்பா மீது புகார் கொடுத்த சிறுமியின் தாயார் நுரையீரல் புற்றுநோயால் திடீரென உயிரிழந்தார்.

இதையடுத்து எடியூரப்பாவை போக்சோவில் கைது செய்யக் கோரி சிறுமியின் சகோதரர் நீதிமன்றத்தை நாடினார். இதனால் எடியூரப்பாவை கைது செய்ய பிணையில் வெளிவர முடியாத பிடியாணை பிறப்பித்தது போக்சோ நீதிமன்றம்.

இதனால் எடியூரப்பா எந்த நேரத்திலும் கைது செய்யப்படலாம் என்ற சூழல் இருந்தது.

இந்தநிலையில்எடியூரப்பாவோ டெல்லிக்கு சென்றார். இதனால் கர்நாடக சிறப்புப் புலனாய்வு குழுவும் டெல்லி சென்றுவிட்டது. மேலும் கைது செய்ய தடை விதிக்கக் கோரி நீதிமன்றத்திற்கு எடியூரப்பா சென்றார்.

இதை விசாரித்த நீதிமன்றம் ஜூன் 17 ஆம் திகதி சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணைக்கு எடியூரப்பா ஆஜராக வேண்டும். அதுவரை அவரை கைது செய்யக் கூடாது என உத்தரவிட்டது.

இந்த நிலையில்தான் டெல்லியில் இருந்து பெங்களூர் திரும்பிய எடியூரப்பா, நேற்று சிறப்பு புலனாய்வுக் குழு முன்பு விசாரணைக்கு ஆஜரானார். அவரிடம் 3 மணி நேரமாக விசாரணை நடத்தப்பட்டது.

# மலாவி துணை அதிபரின் இறுதி ஊர்வலத்தில் விபத்து

நால்வர் பலி, 20ற்கும் மேற்பட்டோர் பலி



ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான மலாவியின் துணை அதிபராக பதவி வகித்து வந்த சோலாஸ் சிலிமா விமான விபத்தில் உயிரிழந்தார்.

இந்நிலையில் சோலோஸ் சிலிமாவின் உடல் தலைநகரத்திற்கு கொண்டு வரப்பட்டு மரியாதை செய்யப்பட்டபின்னர் அவரது சொந்த கிராமமான சைப்க்கு தொடர் வாகனங்கள் சூழ கொண்டு செல்லப்பட்டது.

சோலோஸ் சிலிமாவின் இறுதி ஊர்வலத்தை காண ஏராளமான மக்கள் குவிந்தனர். அதில் பலர் வாகன தொடரணியை மறித்து சோலோஸ் உடலை பார்க்க வேண்டுமென போராட்டம் செய்ததும் நடந்துள்ளது.

சில இடங்களில் தொடரணி வாகனங்களுக்கு குறுக்கே சிலர் புகுந்ததால் வாகனம் மோதி பலர் படுகாயமடைந்தனர். இதில் நால்வர் உயிரிழந்த நிலையில் 20ற்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூன் மாதம் 18ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.